விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆனி 10 சனிக்கிழமை (24.06.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 187

# வட - கிழக்கு இணைப்பு
# ஒரு போதும் சாத்தியப்படாது

## சமஷ்டியும் கிடையாது என்கிறார் மனோ கணேசன்

(சிட்னி)

இலங்கை மத சார்பற்ற நாடாக இருக்க வேண்டும். வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட வேண்டும். அரசியலமைப்பு சமஷ்டி அரசியலமைப்பாக வரவேண்டும் என்பது சரி. இந்த விடயங்கள் நடக்காது. அதுவே உண்மையும் கூட. இந்த யதார்த்தத்தின் பங்காளியாகவே கூட்டமைப்பும் இருந்து கொண்டிருக்கிறதென அமைச்சர் மனோ கணேசன் அவுஸ்திரேலிய ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார். 23



## பொலிஸ் பேச்சாளராக ருவான் குணசேகர

(கொழும்பு)

அரசாங்கத்தின் பொலிஸ் ஊடக பேச்சாளராக மீண்டும் ருவான் குணசேகர நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் ஒரு சட்டத்தரணி ஆவார். அதேவேளை பொலிஸ் ஊடகப் பேச்சாளராக இருந்த பொலிஸ்மா அதிபர் 23

## வைத்திய அதிகாரிகளின் போராட்டம் தொடரும்

(கொழும்பு)

சைட்டம் தனியார் வைத்திய கல்லூரிக்கு எதிரான போராட்டம் தொடரும் என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் நேற்று தெரிவித்துள்ளது.

அதேபோல் பல்கலைக்கழக மாணவர்களும் 23

## தொழில்நுட்ப பல்கலைக்கழகம்

(கொழும்பு)

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு தொழில்நுட்ப மற்றும் பொறியியல் பட்டங்களை வழங்கும் வகையில் புதிதாக தொழில்நுட்ப பல்கலைக்கழகம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. 23

## அடுத்த முறையும் விக்னேஸ்வரன்!

## பத்திரிகை ஒன்றின் செய்திக்கு சிவசக்தி ஆனந்தன் மறுப்பு



(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. 04

## பொருளியலாளர் சமன் மறைவு

(கொழும்பு)

தேசிய கொள்கை வகுப்பு கண்காணிப்பு நிறைவேற்றுப் பணிப்பாளர் மூத்த பொருளியலாளர் சமன் கலகம (வயது 58) நேற்றுக் காலமானார். 04

## புதிய யாப்பு தாமதமடைய எல்லா கட்சிகளுமே காரணம்!

## அமைச்சர் டிலான் குற்றச்சாட்டு



(கொழும்பு)

புதிய யாப்பு திருத்த பணிகளில் ஏற்பட்டுள்ள தாமதத்திற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே காரணமென்ற குற்றச்சாட்டை நிராகரித்துள்ள அந்த கட்சியின் 23

## இனமோதல்களுக்குப் பின்னால் அரச சார்பற்ற நிறுவனங்கள்

## விஜயதாச ராஜபக்ஷ சாடல்



(கொழும்பு)

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நல்லிணக்கத்தை சிதைக்கும் முயற்சிகளுக்குப் பின்னால் அரச சார்பற்ற நிறுவனங்கள் உள்ளதா என்று தாம் சந்தேகிப்பதாக நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அஸ்கிரிய மகாநாயகர் 23

## அஸ்கிரிய பீடத்தின் தீர்மானம் அரசியல் கலப்பானது - விக்கிரமபாகு

(கொழும்பு)

பொதுபல சேனா அமைப்பிற்கு ஆதரவாக குரல் கொடுத்துள்ள பௌத்த மக்களின் பெருமதிப்பிற்குரிய தலைமைத்துவங்களில் ஒன்றான அஸ்கிரிய பீடத்தின் தீர்மானத்திற்கு நவசமசமாஜக் கட்சி எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.



அஸ்கிரிய பீடத்தின் இந்த அறிவிப்புக்கு பல தரப் பிலும் எதிர்ப்புக்கள் வெளி யிட்டு வரும் நிலையில் இந்த அறிவிப்புக்குப் பின்னால் அரசியல் சக்தி யொன்று செயற்படுவதாக நவ சமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார். 23

## முதலமைச்சருக்கு எதிரான கடிதம் சிறீதரனால் வெளியிடப்படவில்லை!

### விளக்கமளிப்பு

(கொழும்பு)

இணையத்தளங்களிலும் சிலரது முகநூல்களிலும் தனது பாராளுமன்ற உத்தியோகபூர்வ கடிதத்தலைப்பினையும் பதவி இலட்சினையையும் பயன்படுத்தி நான் கௌரவ வடமாகாண முதலமைச்சருக்கு எழுதியதாக வெளியிடப்பட்டுப் பரப்பப்பட்டு வரும் கடிதம் உண்மைக்குப் புறம்பானதும் என்னால் எழுதப்படாததுமாகும் என்பதை முதலில் வெளிப்படுத்த விரும்புகின்றேன்.

தமிழ் பேசும் மக்களின் ஒன்றுபட்ட சக்தியை உடைத்தெறிவதன் மூலம் எதிரிகளின் உபாயங்களுக்கு வலுச்சேர்ப்பதே இத்தகைய நாசகார சக்திகளின் நோக்காக இருக்கின்றது என்பதனை 23

## 13 ஆவது சட்டத்தில் இருந்து தீர்வை நோக்கி பயணிப்போம்



## பேராயர் மல்கம் ரஞ்சித்

(கொழும்பு)

இனப்பிரச்சினை தீர்வாக உருவாக்கப்பட்ட 13 ஆவது திருத்தச்சட்டத்தில் இருந்து நிரந்த அரசியல் தீர்வு நோக்கிச் செல்ல வேண்டுமென கத்தோலிக்க திருச்சபையின் கர்தினால் பேராயர் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் இடம்பெற்ற யாழ் சென் பற்றிக்ஸ் கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதி யாகக் கலந்து 24

## சுழிபுரம் பகுதியில் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று சுழிபுரம் கிழக்கு பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியினை சேர்ந்த உமாகர சர்மா வயது 36 என்பவரே சடலமாக மீட்கப்பட்ட 23

P S P Rent a Car
யாழ்.பல்கலைக்கழகம் முன்பாக
திருமண, தனிப்பட்ட நிகழ்வுகள்,
சுற்றுலாவிற்கான தரமான கார்களை நாள், கிழமை, மாத அடிப்படையில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்.
077 377 7502



(9555)

## டயானாவை நான்தான் கொன்றேன் - ஹோப்கின்ஸ்

(லண்டன்)

நாட்டிற்காகவும், அரச குடும்பத்திற்காகவும் தான்தான் பிரித்தானிய இளவரசி டயானாவைக்கொன்[illegible] அமைப்பின் [illegible] 23

## வட மாகாண சபை இனியாவது செயற்திறனாக செயற்படவேண்டும்

## ஜயம்பதி விக்கிரமரட்ண



(கொழும்பு)

[illegible] தமக்கு [illegible]ள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தாமல் தேவையற்ற செயற்பாடுகளிலேயே ஈடுபடுவதாக 24

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வலம்புரி
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## ஏல விற்பனை

**யா/கோப்பாய் மகா வித்தியாலயம்**

05.07.2017 புதன்கிழமை காலை 10 மணிக்கு கீழ்வரும் பொருட்கள் ஏலத்தில் விடப்படும்.

- பழைய தளபாடங்கள்
- கணினிக் கதிரைகள்

(9552) - அதிபர்

## கடை வாடகைக்கு

யாழ்.நகர் பகுதி கஸ்தூரியார் வீதியில் கடை வாடகைக்கு உண்டு.

(9553)

தொடர்பு:

**077 392 4997**

## படுக்கையறையிலிருந்து கோடீஸ்வரரின் மகள் சடலமாக மீட்பு

(கொழும்பு)

கொட்டாவை - ஹொரண வீதியில் அமைந்துள்ள கோடீஸ்வர வர்த்தகர் ஒருவரின் வீட்டின் மேல் மாடியின் படுக்கை அறையில் இருந்து, அந்த கோடீஸ்வரரின் மகள் கழுத்தறுத்து கொலை செய்யப்பட்டுள்ள நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

26 வயதான தரிந்தி ஆலோக்கா எனும் யுவதியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.


குறித்த கோடீஸ்வர வர்த்தகரும் அவரது மனைவியும் வெளியில் சென்றிருந்த நேரம் அந்த யுவதியின் இளைய சகோதரி பாடசாலை சென்றுள்ளார். இதன்போதே இக்கொலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

தனியார் கல்வி நிறுவனம் ஒன்றில் விசேட பாடநெறியொன்றினை பூர்த்தி செய்திருந்த குறித்த யுவதி அடுத்த மாதம் வெளிநாடொன்றுக்கு செல்ல இருந்த நிலையிலேயே இந்த கொலை இடம்பெற்றுள்ளது.

குறித்த யுவதிக்கும் மாத்தறை பகுதியைச் சேர்ந்த இளம் வர்த்தகர் ஒருவருக்கும் இடையில் காதல் தொடர்பு ஒன்று இருந்து வந்துள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளில் பொலிஸாரால் கண்டறியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (11)

## ஈழத்து சித்தர் லோகர் சுவாமிகளின் இசைக் கச்சேரி

**அகில இலங்கை இந்து சமய ஆலயங்களுக்கு சென்று புகழ்பெற்ற நாகபூசணி இசைக் குழுவினரின் தெய்வீக கானராகங்களும் பஜனைக் கீதங்களும் இவ்வருடம் நயினை நாகபூசணி ஆலயத்தின் முன் நுழைவாயில் கோபுர மண்டபத்தில் 25.06.2017 முதலாம் திருவிழாவிற்கும் 10ஆம் திருவிழாவிற்கும் மற்றும் சப்பறத் திருவிழாவிற்கும் ஈழத்து சித்தர் லோகர் சுவாமி அவர்களால் நடத்தப்படும் என்பதை அடியார்களுக்கு அறியத் தருகின்றோம்.**





**ஆர்மோனியம் கனகு அரியரத்தினம்**
**கோண்டாவில் கிழக்கு**
**லோகர் சுவாமி**
**டாக்டர் சோமர் லோகர்.**

(9119)

'ஓம் விராட் விஸ்வ பிரமனே நமக'

## மரண அறிவித்தல்

### அருணாச்சலம் ஜெகதீசன் (ஆசாரியார்)



கரணவாயைப் பிறப்பிடமாகவும் தாவளை இயற்றாளையை வசிப்பிடமாகவும் வேம்பிராயை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட அருணாச்சலம் ஜெகதீசன் நேற்று (23.06.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாச்சலம் - கைராசி தம்பதியரின் அன்பு மகனும் கனகராஜா, காலஞ்சென்ற குலமணி தம்பதிகளின் மருமகனும் பத்மாவதியின் அன்புக் கணவரும் துஷ்யந்தி (பிரான்ஸ்), கஜன் (பிரான்ஸ்), மதன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இரத்தினகுமார் (பிரான்ஸ்), ரூபினி ஆகியோரின் மாமனாரும் ஆரியா, ஜஸ்மீரா (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனும் சற்குணம், பத்மாவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பத்மலோஜினி, ஸ்ரீதரன், பாஸ்கரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.06.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வேம்பிராய் வடக்கு,
மீசாலை.

(C-8872)

தகவல்: குடும்பத்தினர்
077 224 5145

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் எமக்காய்
06.08.1935

விண்ணில் எமைப்பிரிந்து
16.07.2015



### திருமதி பரஞ்சோதி சூரியகாந்தியம்மா

அன்பின் சொரூபம் – அம்மா
பண்பின் பொக்கிஷம் நீங்கள்
நேசத்தின் நாயகியே
நீங்கள் என்றும்
பாசத்தின் பாசறையம்மா

சிரித்த முகம் என்றும்
சினமற்ற பேச்சு உங்கள்
சோர்வற்ற உள்ளம் என்றும்
சோகம் எதுவரினும்
இனிமையான உங்கள் பேச்சு
ஈர்த்திடும் எம்மை என்றும்

தூரத்தில் நாம் இருந்தாலும்
உங்கள் அன்பின்
தூவானம் எமை வந்து சேரும்

தூங்கிய எங்கள் விழிகளிலும்
தூய்மையான உங்கள் முகம்
தாய்மையதை நினைவூட்டும் – என்றும்
ஏங்கி என்றும் நிற்கிறோம்
ஏக்கத்துடன் உங்கள் பாசத்துக்காய்

வேண்டி என்றும் நிற்கிறோம்
ஆண்டவனை நாங்கள்
வேண்டும் என்றும் உங்கள்
ஆத்மா சாந்தியடைய

**என்றும் உங்கள்
பாசத்துக்காய் ஏங்கும்
உங்கள் பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்
(லண்டன், இலங்கை, பிரான்ஸ்,
ஜேர்மனி) மற்றும்
உள்ளூர் உறவினர் அனைவரும்
சந்தை மேற்கு ஒழுங்கை, பருத்தித்துறை.**

(9548)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் திருமண சட்டம் மாற்றப்பட வேண்டும்; அமெரிக்கத் தூதரிடம் முஸ்லிம்கள் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் நடைமுறையில் இருக்கும் முஸ்லிம் தனியார் திருமணச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்று அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப்பிடம் சில முஸ்லிம் பிரமுகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகம் அதன் வரலாற்றில் முதல் தடவையாக கடந்த வாரம் இப்தார் நிகழ்வொன்றை நடத்தியிருந்தது.



குறித்த இப்தார் நிகழ்வு கிழக்கு மாகாணத்தை மையப்படுத்தி மட்டக்களப்பில் நடைபெற்றிருந்தது.

இதன்போது இப்தார் நிகழ்வில் கலந்து கொண்டிருந்த முஸ்லிம் பிரமுகர்கள் இலங்கையில் தற்போது நடைமுறையில் இருக்கும் முஸ்லிம் தனியார் திருமணச் சட்டம் மாற்றப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்ததாக அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் கடந்த 1951 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறையில் இருக்கும் குறித்த திருமணச் சட்டம் காரணமாக தாம் பெரும் சிக்கல்களை எதிர்நோக்கியிருப்பதாகவும் முஸ்லிம் பிரமுகர்கள் அமெரிக்கத் தூதர் அதுல் கெசாப்பிடம் சுட்டிக்காட்டியதாகவும் அமெரிக்கத் தூதரகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# மகாநாயக்க தேரர்களின் ஆலோசனைகளுக்கு அமைய செயற்படுவேன்

## ஞானசார தேரர் அறிவிப்பு

மகாநாயக்க தேரர்களின் ஆலோசனைகளுக்கு ஏற்ற வகையில் செயற்படுவேன் என பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர்தெரிவித்துள்ளார். தமது கருத்துக்கள் தொடர்பில் அஸ்கிரி பீடாதிபதி கவனம் செலுத்தியுள்ளார் என அவர் தெரிவித்தார்.

அஸ்கிரி பீடாதிபதி தமது கருத்துக்கள் குறித்து கவனம் செலுத்தியமை பெரு மகிழ்ச்சி அளிப்பதாகவும் எதிர்வரும் காலங்களில் மகாநாயக்க தேரர்களின் ஆலோசனைகள் அறிவுறுத்தல்களுக்கு அமைய செயற்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# அடுத்த இரண்டு மாதத்தில் மாணவர்களுக்கு காப்புறுதி



## கல்வியமைச்சர் காரியவசம் தகவல்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கான உத்தேச காப்புறுதி திட்டத்தை அடுத்த இரண்டு மாத காலத்திற்குள் நடைமுறைப்படுத்துவதாக கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

நோய் வாய்ப்பட்டால் அரச வைத்தியசாலை அல்லது தனியார் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுவதற்காக ஒரு இலட்சம் ரூபா வரையான காப்புறுதி அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் வழங்குவதாக கல்வியமைச்சர் தெரிவித்தார்.

தெரணியகல பிரதேசத்தில் உள்ள பாடசாலையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே கல்வியமைச்சர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

# பொலிஸ் ஊடகப்பேச்சாளராக மீண்டும் ருவான் குணசேகர



பொலிஸ் ஊடகப் பேச்சாளராக கடமையாற்றி வந்த பிரியந்த ஜெயக்கொடி. மருத்துவ தேவைகளின் நிமித்தம் பதவியிலிருந்து விலகத் தீர்மானித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து குறித்த பதவிக்கு ருவான் குணசேகர மீண்டும் நியமிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ்மா அதிபராக பூஜித ஜயசுந்தர நியமிக்கப்பட்டதன் பின்னர், அப்போது ஊடகப் பேச்சாளராக கடமையாற்றிவந்த ருவான் குணசேகர இடை நிறுத்தப்பட்டு பிரியந்த ஜெயக்கொடி நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# லஹிரு வீரசேகர விளக்கமறியலில்

(கொழும்பு)

மருதானையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட பின்னர் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் லஹிரு வீரசேகர விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவரை, மாளிகாகந்தை நீதவான் நீதிமன்ற நீதவான் துலானி எஸ். வீரதுங்க முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது, ஜுலை 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

தொழில்நுட்பத்துக்கும் மருத்துவத்துக்குமான தெற்காசிய நிறுவனத்துக்கு எதிரான போராட்டம், கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்றபோது, சுகாதார அமைச்சுக்குள் அத்துமீறி நுழைந்து அரச சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்திய குற்றச்சாட்டிலேயே அவர் கைது செய்யப்பட்டார். (இ-7)

# எவராக இருந்தாலும் சட்டத்திற்கு புறம்பாக செயற்பட முடியாது

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

சாதாரண மக்கள், மதப் பெரியார் யாராக இருந்தாலும், சட்டத்திற்கு புறம்பாக செயற்பட முடியாது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் மாலை அலரி மாளிகையில் நடைபெற்ற ரம்ழான் நோன்பு துறப்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

சட்டத்தை முறியடிக்கும் அல்லது அதனை கவனத்தில் கொள்ளாது யாராலும் செயற்பட முடியாது. நாம் அனைவரும் சட்ட திட்டங்களுக்கு செயலாற்றுவதற்கும் சட்டத்தை நிலைநாட்டுவதற்கும் கடமைப்பட்டுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# அஸ்கிரிய மகாநாயக்க தேரரிடம் மன்னிப்புக் கோரினார் ஞானசாரர்

அஸ்கிரிய மகாநாயக்க தேரரை சந்தித்த பொது பல சேனாவின் பொதுச் செயலாளர் கடகொட அத்தே ஞானசார தேரர் மன்னிப்புக் கோரியுள்ளார்.




சிறுபான்மை இன மக்களுக்கு எதிராக வன்முறைகளை தூண்டும் வகையில் செயற்படும் ஞானசாரர் மீது சகல தரப்பினரும் கடும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்ற நிலையில், ஞானசாரர் விடயத்தில் அஸ்கிரிய பீடம் அவருக்கு சாதகமான கருத்துக்களை முன்வைத்துள்ளதென பரவலாக பேசப்பட்டது.

இந்நிலையில், நீதிமன்றில் பிணை கிடைத்தவுடன் அஸ்கிரிய பீடத்திற்குச் சென்ற ஞானசாரரை மகாநாயக்கர் வரகாகொட ஞானரத்ன தேரர் கடுமையாக எச்சரித்துள்ளார்.

இதன் போது தமது செயற்பாடுகளுக்கு ஞானசாரர் மன்னிப்புக் கோரியுள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

# சுகாதார அமைச்சுக்கு ரூ.9 இலட்சம் நட்டம்

சுகாதார அமைச்சின் சுவசிறிபாய கட்டடத்தின் மீது கடந்த 21ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் காரணமாக, சுகாதார அமைச்சுக்கு 9 இலட்சம் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக, தெரிய வருகிறது.

மாலபேயிலுள்ள "சைட்டம்" தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக, அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மற்றும் மருத்துவபீட மாணவச் செயற்பாட்டாளர்களால், சுகாதார அமைச்சின் சுவசிறிபாய கட்டடம் சுற்றிவளைக்கப்பட்டதுடன், தாக்குதலும் மேற்கொ

க்கது.

இதனையடுத்து, பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் இணைந்து, ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப்புகைப்பிரயோகம் மற்றும் தடியடி பிரயோகம் மேற்கொண்டனர். இதனால், அப்பிரதேசமே அல்லோலகல்லோலப்பட்டது. இதனால், 85 மாணவர்கள் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்நிலையில், இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்களை கைதுசெய்வதற்கான நடவடிக்கையில் பொலிஸார்

# சிங்கள இனத்திற்கும் பௌத்த மதத்திற்கும் அரசு ஒருபோதும் துரோகம் இழைக்காது

## அமைச்சர் சஜித் தெரிவிப்பு

சிங்கள இனத்திற்கும் பௌத்த மதத்திற்கும் அரசாங்கம் ஒரு போதும் துரோகம் இழைக்காது என வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

நல்லாட்சி அரசாங்கம் ஆட்சியில் இருக்கும் வரையில் சிங்கள இனத்திற்கும், பௌத்த

மைகள் ஏற்படாது என குறிப்பிட்டுள்ள அவர் ஆட்சி அதிகாரத்தை இழந்து மீளவும் ஆட்சியை கைப்பற்ற துடிக்கும் சிலரே இனங்களுக்கும் மதங்களுக்கும் இடையில் முரண்பாட்டை ஏற்படுத்த முயற்சிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

னதாக ஒவ்வொரு விஹாரைக்கும் இரண்டு ஏக்கர் காணி வழங்க வேண்டுமென தாம் முன்மொழிந்த யோசனையை அப்போதைய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை எனவும், அப்போது ஆட்சி நடத்தியவர்கள் தற்போது பௌத்த மதம் பற்றி உரிமை கொண்

தெரிவித்துள்ளார்.

தலதாமாளிகைக்கு தங்கக் கூரை அமைத்த தலைவரின் புதல்வர் என்ற ரீதியில் பௌத்த மதத்திற்கு ஏதேனும் நெருக்கடிகள் வர தாம் எந்த வகையிலும் இடமளிக்கப் போவதில்லை என அவர் தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் கம்பன் விழாவின் முதலாம் நாள் நிகழ்வுகள்





அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும் யாழ்ப்பாணக் கம்பன் விழாவின் முதலாம் நாள் நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றன.

இதில் கொழும்புக் கம்பன் கழகத்தின் பெருந்தலைவர் நீதியரசர் ஜெ.விஸ்வநாதன் தலைமையில் நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் நேற்றைய ஆரம்பநாள் நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வில், "அவர் தலைவர்", "கம்பனில் அரசியல்" ஆகிய இரு நூல்கள் வெளியிட்டு வைக்கப்பட்டன. அத்துடன் பேராசிரியர் வி. அசோக்குமார் தலைமையில் "அறிவால் முதன்மை பெறும் அற்புதப் பாத்திரம்" எனும் தலைப்பில் இலக்கிய ஆணைக்குழுவும் இடம்பெற்றது.

## பத்திரிகை ஒன்றின்...

பன்னிரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

எனது உரையைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் உரையாற்றும்போது,

அடுத்தமுறை மாகாண சபைத் தேர்தலில் நாங்கள் சி.வி.விக்னேஸ்வரனை வேட்பாளராகத் தெரிவு செய்யாவிட்டால் நீங்கள் போராட்டம் நடத்துவீர்கள். நீங்கள் மூவரும் இணைந்து அவருக்கு ஆதரவளிப்பீர்கள் என்று தெரி வித்தார்.

ஆம் இந்தமுறை நீங்கள் அறிமுகம் செய்த விக்னேஸ்வரனை அடுத்தமுறையும் நாம் ஆதரிப்போம் என்று பதிலளித்தேன்.

உண்மை இவ்வாறிருக்கையில், பத்திரிகை ஒன்று "அடுத்த முறையும் விக்கி சி.எம்மாக ஈ.பி.ஆர்.எல்.எப் எதிர்ப்பு" என்று நேற்றைய நாளிதழில் முன்பக்கத்தில செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் இந்த செய்தி தொடர்பாக என்னைத் தொடர்புகொள்ள முயற்சித்த போதும் நான் பதிலளிக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளது.

என்னைத் தொடர்புகொள்ள முயற்சித்ததாகத் தெரிவித்திருப்பது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது. மேலும் செய்தி பாராளுமன்றக் குழுக் கூட்டம் தொடர்பானது.

எனவே என்னைத் தொடர்பு கொள்ள முடியாவிட்டாலும் ஏனைய 11 பாராளுமன்ற உறுப்பினர்களில் யாரையாவது கேட்டறிந்து கொண்டிருக்க முடியும் என்று சிவசக்தி ஆனந்தன் எம்.பி.விளக்கமளித்துள்ளார். (250)

## பொருளியலாளர்...

தாய்லாந்து நாட்டு சுற்றுப் பயணத்தின் போது காலமானதாக இலங்கைக்கான தாய்லாந்து தூதரகம் அறிவித்துள்ளது.

பொருளியல் விற்பன்னராகவும் கொள்கை வகுப்பாளராகவும் சேவை செய்த இவர் அரச மற்றும் தனியார் அமைப்புக்களில் உயர் பதவி வகித்தவர்.


## மணி விழா நாயகியின் சேவை நயப்பு

24.06.2017



எமது வித்தியாலய ஆசிரியை

இலங்கை ஆசிரிய சேவை தரம் I

**செல்வி மிக்கேல் அனுற்றோலியம்மா**

**(குரு பிரதீபா பிரபா)**

அகம் மிக மகிழ்ந்து அரிய பல சேவைகள் செய்த ஆசிரிய பெருந்தகையின் எண்ணற்ற சேவையினை மனமுவந்து பாராட்டுவதுடன், சகல வளமும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

சேவைக்காலம் :

(i) 01.09.1992 - 18.05.1996
(கிளி/பளை றோ.க.த.க பாடசாலை)
(ii) 19.05.1996 - 31.12.2007
(கிளி/ஸ்கந்தபுரம் அ.த.க.பாடசாலை)
(iii) 01.01.2008 - 02.05.2010
(கிளி/அக்கராயன் மகா வித்தியாலயம்)
(iv) 03.05.2010 - 23.06.2017
(கிளி/பளை றோ.க.த.க பாடசாலை)

வாழ்த்துவோர்,
ஆசிரிய ந[illegible] சங்கம்,
கிளி/பளை றோ[illegible] பாடசாலை

(9551)



## கேள்வி அறிவித்தல் - திருத்தம்

**குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை (PSDG)**
**மற்றும் சபை நிதி (Council Fund) வேலைத்திட்டம் - 2017**

**மாநகர சபை, யாழ்ப்பாணம்**

23.06.2017ஆம் திகதி எம்மால் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலில் காட்டப்பட்ட 2ஆவது என இலக்கமிடப்பட்ட பந்தி நீக்கப்பட்டு பின்வரும் பந்தி சேர்க்கப்படுகின்றது.

30.06.2017ஆம் திகதிய **04/2016 (i)** ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின்படி வட மாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

அதே கேள்வி அறிவித்தலில் வேலை விபர அட்டவணையின் 6ஆவது நிரலில் கோரப்பட்ட கேள்விதாரரின் உரிய CIDA தரத்தில் எவரும் விண்ணப்பிக்காத பட்சத்திலேயே அதிலும் கூடிய CIDA தரத்தினைக் கொண்ட கேள்விதாரரின் கேள்விகள் கருத்தில் கொள்ளப்படும்.

**தலைவர்/ஆணையாளர்**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழு,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

(C-8870) **24.06.2017**



## யாழ்.மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கம் (தலைமையகம்)-யாழ்ப்பாணம்

பதிவு இல-8232 23.06.2017
T.P:-0213205722

**அறிவித்தல்**
**இடைக்காலப் பொதுக்கூட்டம்**
**ஓட்டோ உரிமையாளர்களுக்கு**



அன்புடையீர்!

எமது சங்கத்தின் இடைக்காலப் பொதுக்கூட்டம் தலைவர் திரு.இ.விஜயராசா அவர்களின் தலைமையில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நாளை 25.06.2017 ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

எனவே தாங்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறியத்தருகின்றோம்.

### நிகழ்ச்சிகள்

01.அகவணக்கம்
02.தலைமையுரை
03.செயலாளர் அறிக்கை சமர்ப்பித்தல்
04.வரவு செலவு அறிக்கை சமர்ப்பித்தல் (2017 தை-வைகாசி 31 வரை)
05.மரண சகாய நிதி உதவித்திட்டம் தொடர்பானது
06.எதிர்கால செயற்பாடுகள் தொடர்பானது
07.கருத்துரை வழங்கல்

[illegible]ங்கத்தவர்கள் அனைவரும் சமுகம் தரவும்

நன்றி. -நிர்வாகம் (சி-8866)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலை.மாணவர்களா? பயங்கரவாதிகளா?
## அமைச்சருக்கு வந்த சந்தேகம்



(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்கள் பயங்கரவாதிகளைப் போன்று நடந்து கொண்டனர் என மீன்பிடித்துறை நீரியல் வள அமைச்சரும், மஹாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.மஹாவலி அமைச்சில் நேற்று முன்தினம் நடை பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கு பல்வேறு சாங்கங்கள் மேற்கொண்டு வரும் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்களை நடத்த பொருத்தமான தனியிடமொன்றை அரசாங்கம் ஒதுக்க வேண்டும். அண்மையில் பல்கலை க்கழக மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பல்கலைக்கழக மாணவர்கள் நடந்து கொண்ட விதம் பயங்கர வாதிகளைப் போன்றது.

பெற்றோர் இந்தப் பிள்ளைகளை பல்வேறு எதிர்பார்ப்புக்களுடனேயே பல்கலைக்கழகம் அனுப்பி வைக்கின்றனர். ஒவ்வொரு அரசியல் கட்சிகளின் தேவைக்கு ஏற்ற வகையில் ஏன் பல்கலைக் கழக மாணவர்கள் செயற்படுகின்றனர்? இந்த அரசாங்கமும் சில விடயங்களில் காலம் தாமதித்தே தீர்மானம் எடுக்கின்றது.

எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு தனியான இடமொன்ற ஒதுக்க வேண்டும். இல்லையெனில் அரசாங்கத்தை முன்னோக்கி நகர்த்த முடியாது என மகிந்த அமர வீர மேலும்தெரிவித்தார். (இ-7)

# புனர்வாழ்வளிக்கப்பட்ட பயிலுநர்களுக்கான வங்கிக் கடனை துரிதப்படுத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வளிக்கப்பட்ட பயிலுநர்களுக்கான வங்கிக் கடன்களை விரைவுபடுத்துவதற்கான நடவடிக்கையை புனர்வாழ்வு அதிகார சபை மேற்கொண்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் வங்கி முகாமையாளர்களுடனான கலந்துரையாடல்ஒன்றுயாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் கடந்த 20 ஆம் திகதி யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. குறித்த கலந்துரையாடலின் போதே வங்கிக் கடன்களை இலகுபடுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்தில் இரண்டா யிரத்து 900 பேர் வரையில் புனர்வாழ்வளிக்கப்பட்டவர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கான வாழ்வாதாரத்தை ஊக்கு விக்கும் நடவடிக்கைகளை புனர்வாழ்வு அதிகாரசபை மேற்கொண்டு வருகின்றது.அந்த வகையில் வாழ்வாதாரத்தை ஊக்குவிப்பதற்குவங்கிக் கடன்கள் வழங்கப்பட்டு வருகினறன. ஆனால் குறித்த வங்கிக் கடன்களை தாமதமாகவே பெற்றுக் கொள்ள முடிகிறதென பயனாளிகள்முறைப்பாடுதெரிவித்தனர்.

அந்த வகையில் வங்கி முகாமையாளர்களை அழைத்து குறித்த பயனாளிகளின் பிரச்சினைகளை எடுத்துரைத்து அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய வங்கிக் கடன் களை விரைவாகவழங்க வேண்டும் என மேற்குறித்த கலந்துரையாடலில் கோரிக்கை விடுக்கப்பட் டுள்ளது. குறித்த கோரி க்கைக்கு முகாமையாளர்கள், தாம் உரிய நடவடிக்கைகளை விரைவில் எடுத்து கடன் களை விரைவுபடு த்துவதாக தெரிவித்துள்ளனர்.

புனர்வாழ்வளிக்கப்பட்ட பயிலுநர்கள் அதிகூடிய கடன் தொகையாக இரண்டு இலட்சம் ரூபா வரையில் பெற்றுக்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-9)

# மஹோற்சவம்

யாழ்ப்பாணம் இருபாலை கட்டப்பிராய் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாட்கள் திருவிழா இடம் பெறவுள்ளன.

தொடர்ந்து ஜூலை மாதம் 8 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று 9.30 மணிக்கு இரதோற்சவமும் 9ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை தீர்த்தத் உற்சவமும் தொடர்ந்து ஆலயத்தில் வழமை போன்று சமய அறிவுப் போட்டியும் இடம்பெறும்.(இ-10-136)

# சர்வதேச யோகா தினம்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகானது சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு நிகழ்வு ஒன்றினை எதிர்வரும் 28.06. 2017 புதன்கிழமை காலை 6 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை யாழ்ப்பாண பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடத்தவுள்ளது என யாழ். பல்கலைக்கழகவிளையாட்டு விஞ்ஞான அலகு துறைத்தலைவர் கலாநிதி பவாணி அகிலன் அறிவித்துள்ளார். இ


## நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை
### கலைமாமணி
### Dr.S.S.சர்மா குருஜீ
82/4 கலட்டி அம்மன் கோவிலடி, வண்ணார்பண்ணை.

077 784 1558 (சி. 8817)


## துயர் பகிர்கின்றோம்



அமரர் திருமதி. மகேஸ்வரி கந்தையா (இராசாத்தி)

எமது பாடசாலை ஆசிரியர் திருமதி. ஞா. சிவக்குமாரன் அவர்களின் அன்பு மாமியார் திருமதி. மகேஸ்வரி கந்தையா (இராசாத்தி) அவர்கள் 25.05.2017 அன்று சிலாபத்தில் இயற்கையெய்தினார். அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்

(9547)


## UNIVERSITY OF CAMBRIDGE CAMBRIDGE ENGLISH



- சுமார் 40 இலட்சம் மாணவர்கள் ஆண்டு தோறும் Cambridge பரீட்சைகளை எடுக்கின்றனர்.
- சுமார் 13000 பல்கலைக்கழகங்கள் Cambridge ஆங்கிலப் பரீட்சைகளை தமது அனுமதிக்காக ஏற்றுக்கொள்கின்றன.
- 40000 கல்லூரிகளும் நிறுவனங்களும் மாணவர்களை Cambridge பரீட்சைக்காக ஆயத்தப்படுத்துகின்றனர்.

Cambridge ன் மூன்று பாடநெறிகள் 28.06.2017 ல் ஆரம்பிக்கின்றோம்.

### Cambridge - Prelimnary English Test (PET)

- இது ஓர் Intermediate B1. Level பரீட்சையாகும். U.K இல் பல கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் இதனை பல்கலைக்கழக அனுமதிக்காக ஏற்றுக்கொள்கின்றன.
- நீங்கள் IELTS பரீட்சை எடுப்பதற்கு விரும்புவீர்களானால், போதிய ஆங்கில அறிவு உங்களிடம் இல்லையேல் முதலில் PET பாடநெறியைப் பின்பற்றி பின் IELTS வகுப்பில் கற்க இலகுவாக இருக்கும்.

It covers all four language skills (Reading, Writing, Listening and Speaking) and knowledge of grammar and vocabulary.

Exam Date : 01.12.2017
Centre - British Council Colombo.



### FCE Cambridge First Certificate in English

FCE is an upper intermadiate level exam. It tests the ability to deal confidently with a range of written and spoken. communication. FCE is the most widely taken of the general English exam with over 250,000 candidates every year. This exam is at CEFR Level B2

இது ஒரு சர்வதேசப் பரீட்சையாகும் International Exam. 15000 இற்கு மேற்பட்ட கல்வி நிறுவனங்களும் Employers ம் FCE யை ஏற்றுக்கொள்கின்றன. உலகத்தின் எந்த ஒரு இடத்திலும் சிறந்த ஓர் வேலை வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ள அதியுயர்ந்த தகுதியாகும். இது ஒரு வாழ்நாள் முதலீடு.

Exam Date : 28.11.2017
Centre - British Council Colombo

It covers all four skills Reading and Use of English, Writing, Listening - Speaking

### Advanced Spoken English

It is an Innovative approch to speaking இது Cambridge B1, B2, C1 பரீட்சைகளுக்கான பாட நெறிகளையும் City & Guilds இன் Communicator மற்றும் Expert Level பாடநெறிகளையும் உள்ளடக்கிய ஓர் அணுகு முறையாகும்.

விசேட அம்சங்கள் :
- Complete Grammar Studies
- Role play - Presentation
- அதிகமான நேரம் உரையாடலுக்கு ஒதுக்கப்படும்.

வகுப்புக்கள் ஆரம்பம் 28.06.2017

Course Schedule — Monday, Tues, Wed, Thurs 10.30 - 1.00 pm — Sat & Sunday 3.00 pm - 6.00 pm

எமது புதிய முகவரி
## BRITISH COLLEGE OF ENGLISH
PALALY ROAD, URUMPIRAI, JAFFNA.
(உரும்பிராய் பெற்றோல் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக)
021 222 0384
077 880 3887


# இராசி பலன்

24.06.2017
(ஆனி 10, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.53 மணிக்கு
அமாவாசை முற்பகல் 9.17 மணிவரை
மிருகசீரிடம் காலை 6.06 மணிவரை
திருவாதிரை பின்னிரவு 4.33 மணி வரை
சுபநேரம் 2.55 - 4.25மணிவரை
இராகுகாலம் 8.55 - 10.25 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | சுக் | | சூரி புத, செவ் சந் |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் கேட்டை | | |
| | | | ராகு |
| | சனி | | குரு |

**மேடம்** சவால்களைச் சமாளிக்கும் நாள், சகோதரர்களின் ஒத்துழைப்பால் நல்ல காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

**இடபம்** தொலைபேசி வழியில் புதிய தகவல்கள் வந்து சேரலாம், வியாபார விருத்தியுண்டு, பொதுவாழ்வில் மதிப்பும், மரியாதையும் உயரும் நாள்.

**மிதுனம்** உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், சிக்கனத்தைக் கடைப் பிடிக்க முற்படுவீர்கள்.

**கடகம்** பண விரயங்கள் கூடும் நாள், ஊர் மாற்றம், இடமாற்றம் என்பன இடம்பெறலாம், காரிய அலைச்சல்கள் ஏற்படலாம், சயன சுகக் குறைவான நாள்.

**சிம்மம்** அதிர்ஷ்டமான நாள், இனிய சம்பவங்கள் இடம் பெறுவதற்கான வாய்ப்புண்டு, மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**கன்னி** காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்,தொழில் மேன்மை

**துலாம்** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், வெளியூர்ப் பயணங்களால்

**விருச்சிகம்** நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள், வழிபாட்டால் முன்னேற்றம் பெற வேண்டிய

**தனுசு** சுற்றத்தாரின் வரவால் சுகங் காணும் நாள், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும், பயணங்கள் கைகூடும்,- கள

**மகரம்** பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், செய் தொழில் மேன்மையுண்டு.

**கும்பம்** சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், ரோக பயமுண்டு, பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**மீனம்** புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரணியில் 35 கிணறுகளின் நீர் குடிப்பதற்கு உகந்ததல்ல






வரணி பிரதேசத்தில் 55 குடி நீர்க் கிணறுகளில் 35 கிணறுகளின் நீர் குடிப்பதற்கு உகந்ததல்ல என தேசிய குடி நீர் வழங்கல் அதிகாரசபை யினரால் தெரிவிக்கப்பட்டது.

வரணி பிரதேச குடிநீர்க் கிணறுகளின் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த 20ஆம் திகதி செவ்வாய்க் கிழமை வேள்ட்விசன் அனுசரணையில் தேசிய குடிநீர் வழங்கல் அதிகார சபையினரால் வரணி மத்திய கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது பிரதேச கிணறுகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு அவற்றுக்கான சான்றிதழ்களும் வழங்கப் பட்டன. குடிநீர் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டதுடன் குடி நீரின் தகுதிநிலைகள் பற்றிய கருத்தரங்கும் இடம்பெற்றது.

மக்கள் தமது வீட்டுக் கிணறுகள் மற்றும் பொதுப் பாவனை கிணறுகள் என்பவற்றின் நீரைக் கொண்டு வந்து தமது ஒத்துழைப்பை வழங்கினர்.

இதில் 55 கிணற்று நீர் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டன. அவற்றில் 25 கிணறுகளின் நீர் மட்டுமே குடிநீருக்கு உகந்தவை என சான்றிதழ் வழங்கப்பட்டன.

பிரதேசத்தின் இரண்டு பாடசாலைகளில் பாவனையில் இருந்த இரு கிணறுகள் உட்பட 35 கிணறுகளின்நீர்குடிப்பதற்கு உகந்ததாக இல்லை என்பது பரிசோதனையின் போது இனங்காணப்பட்டுள்ளது. குடிப்பதற்கு பொருத்தமற்றதாக இனங்காணப்பட்ட கிணற்று நீரைப் பருகுவதால் ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றியும் அவற்றை குடிப்பதை தவிர்க்க வேண்டியதன் அவசியம் பற்றியும் மக்களுக்கு தெளிவான விளக்கம் கொடுக்கப்பட்டதுடன் மாற்று வழிகளை பின்பற்றுவது தொடர்பாகவும் ஆலோசனைகள் வழங்கப்பட்டன. (இ-5)

## மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதானம் விரைவில் புனரமைப்பு

மீள்குடியேற்ற அமைச்சின் நிதியுதவியுடன் மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதானம் விரைவில் புனரமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்முதற்கட்டமாகமைதானத்தை சுற்றியுள்ள நான்கு பக்க வீதிகளும் செப்பனிடப்பட்டு வருகின்றன. இவ் விளையாட்டு மைதானம் விளையாட்டுஅரங்குடன்அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5-10-102)




## கடலட்டை பிடிக்க யாருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை

### மருதங்கேணி பிரதேச செயலர் தெரிவிப்பு



வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் கடலட்டை பிடிப்பதற்கு யாருக்கும் அனுமதி வழங்கப் படவில்லைஎனமருதங்கேணி பிரதேச செயலாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

நாகர் கோவில் கடற்பகுதியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அதிகாலை கடலட்டை பிடித்து கொண்டிருந்ததுடன் மீனவர்களின் வலைகளையும் அறுத்து வெளிமாவட்ட மீனவர்களை அப்பகுதி மீனவர்கள் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட மருதங்கேணிப் பிரதேச செயலாளர் கே.கனகேஸ்வரன் வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் கடலட்டை பிடிப்பதற்கு எவருக்கும் அனுமதி அளிக்கப்படவில்லை. மாறாக முல்லைத்தீவில் கடல் அட்டை பிடிப்பதற்கான அனுமதியை வைத்துக் கொண்டு எல்லை தாண்டி வந்து இங்கு கடலட் டை பிடிப்பதாகத் தெரிவித்தார். (இ-60)

தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொடுக்க

## குருநகரில் நடமாடும் சேவை; 300 பேர் பயன்பெற்றனர்







(குருநகர்)

ஒபர் நிறுவனம் மற்றும் குருநகர் கடற்றொழிலாளர் சமாசத்தின் ஆதரவோடு யாழ்ப்பாணம் பிரசே செயலகம் நடத்திய தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொள்வதற்கான நடமாடும் சேவை நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு குருநகர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணப் பிரதேச செயலாளர் பொ.தயானந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொலிஸ் அறிக்கை, முத்திரைச் செலவினம் உள்ளிட்ட அனைத்துச் செலவினங்களும் தவிர்க்கப்பட்டு இலவசமாக வழங்கப்பட்டது. இச் சேவையில் 300 பொதுமக்களுக்கான தேசிய அடையாள அட்டை வழங்கும் பணி இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5-51-106)

## இரத்ததான முகாம் நாளை

இளவாலைபழனியானந்தன் சனசமூக நிலையத்தில் உறுப்பினராகப் பணியாற்றி அமரத்துவம் அடைந்த உப பொலிஸ் பரிசோதர் அமரர் ஆ.துரைராஜசிங்கத்தின் நினைவாக நடத்தப்படும் இரத்ததான முகாம் நாளை ஞாயிற்றுக் கிழமை 25 ஆம் திகதி காலை 8.30 மணியளவில் சனசமூக நிலைய மண்டபத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (இ

## கருத்துரையும் கலந்துரையாடலும்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் வாழ்வுரிமைக்கான செயற்பாட்டு மையத்தின் "தேசிய இனப் பிரச்சினையும் சமூக முரண்பாடும்" எனும் தலைப்பிலான கருத்துரையும் கலந்துரையாடலும் நாளை 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு உரும்பிராய் வடக்கு சரஸ்வதி கலையரங்கில் என்.இன்பம் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் சமூக ஆய்வாளரும் கவிஞருமான வி.ஜெகநாதன் (நக்கீரன்), அரசியல் ஆய்வாளரும் சட்டத்தரணியுமான சி.அ.ஜோதிலிங்கம் ஆகியோர் கருத்துரைகளை வழங்குவர். (இ-3)

## சந்தியில் கொட்டப்படும் கழிவுகள் நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

(மந்துவில்)

மீசாலை கிராம்புவில், சாவகச்சேரி மற்றும் மீசாலை டச்சு வீதிகளை இணைக்கும் சந்திக்கு அண்மையில் உள்ள விவசாய வயற்கரையில் தொடர்ந்து குப்பைகள் கொட்டப்பட்டு வருவதையடுத்து சாவகச்சேரி நகரசபையினரால் தொங்க விடப்பட்ட எச்சரிக்கைப் பலகையை கழற்றி விட்டு திரும்பவும் அவ்விடத்தில் குப்பை கொட்டப்படுவதாக பிரதேச மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

எனவே இது தொடர்பில் உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-5-10-101)

## தெளிவற்ற பாதசாரிகள் கடவை; பதற்றமடையும் மாணவர்கள்

(மந்துவில்)

தென்மராட்சி மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயத்திற்கு முன் வீதியில் வரையப்பட்டிருந்த பாதசாரிகள் கடவை தெளிவற்ற நிலையில் காணப்படுவதனால் மாணவர்கள் உள்ளிட்ட பயணிகள் விபத்துக்களை சந்திக்க நேரிடலாம் என்றும் மாணவர்கள் பதற்ற நிலையில் பாதையைக் கடப்பதாகவும் பெற்றோர் கவலை வெளியிட்டுள்ளனர். பாடசாலை முன் வீதியில் கடந்த வருடம் வரையப்பட்ட பாதசாரிகள் கடவையே இவ்வாறு தெளிவற்ற நிலையில் காணப்படுகிறது. இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்குமாறு பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-5-10)

## பொறுப்பேற்கப்படாதுள்ள வாகன இலக்கத்தகடுகள்

யாழ்.மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்துக் கிளையில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வாகன இலக்கத்தகடுகள் இன்று வரை உரிமையாளர்களால் பொறுப்பேற்கப்படாமல் உள்ளன. உரிமையாளர்களால் பொறுப்பேற்கப்படாதுள்ள வாகன இலக்கத்தகடுகளின் விபரங்கள் 2016.04.01ஆம் திகதியிலிருந்து 2017. 05.04 வரை கிடைக்கப்பெற்ற வாகன இலக்கத்தகடுகளின் விபரங்களை பிரதேச செயல கங்களிலும்மாவட்டச்செயலகமோட்டார் வாகனப் போக்குவரத்து அலுவலகத்திலும் பார்வையிட முடியும். அதற் கமைய வாகன இலக்கத் தகடிற்கு விண்ணப்பித்து இது வரை குறித்த வாகன இலக்கத் தகடினை பெற்றுக் கொள்ளாத வாகன உரிமை யாளர்கள்2017.07.31 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்துக் கிளையில் தமது வாகனப் பதிவுப் புத்தகம், தேசிய அடையாள அட்டை மற்றும் வாகனத்தின் பழைய இலக்கத் தகடுகள் என்பவற்றைச் சமர்ப்பித்து தமது வாகனங்க ளின் இலக்கத் தகடுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு பிரதி ஆணையாளர் அறிவித்துள்ளார். (இ

## வடமாகாண கல்வித்துறை குறித்து முதலமைச்சருடன் கலந்துரையாடல்

(குட்டுடை)

வடமாகாண கல்வித் துறை தொடர்பில் முதலமைச்சரும் பதில் கல்வி அமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரனுடனான கலந்துரையாடல் நாளை மறுதினம் திங்கட் கிழமை முற்பகல் 10 மணிக்கு வடமாகாண முதலமைச்சரின் அலுவலகத்தில் நடைபெறும். வடக்கு மாகாணத்திலுள்ள 12 கல்வி வலயங்களை சேர்ந்த கல்விப்பணிப்பாளர்களையும் கல்வித்துறை தொடர்பான அதிகாரிகளையும் இதில் கலந்து கொள்ளுமாறு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.ரவீந்திரன் கேட்டுள்ளார். வடமாகாண கல்வி அமைச்சராக பொறுப்பேற்ற முதல மைச்சருடனான முதலாவது கலந்துரையாடல் இது என்பது குறிப்பிடத் தக்கது. (இ-5-10-102)

## மஹோற்சவம்

சாவகச்சேரி விளைவேலி தாளையம்பதி துர்க்கை அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் ஜூலை மாதம் 12 ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாட்கள் திருவிழா இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் 23ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்த திருவிழாவும் இடம் பெறவுள்ளன. (இ-5-10-101)

## வீதிக்கு விமோசனம்



(குருநகர்)

செப்பனிப்படாத நிலையில் குன்றும் குழியுமாக காணப்பட்ட குருநகர் ஜஸ்பிளான்ட், வீதியானது குருநகர் சனசமூக நிலையம், குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணியின் வேண்டுகோளுக்கிணங்க யாழ்.மாநகர சபையால் செப்பனிடப்பட்டுள்ளது. தொடர்ந்து சீனோர் வீதியும் புனரமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5-10-106)

## முதலாம் தரத்திற்கான விண்ணப்பப்படிவம்

(மந்துவில்)

தென்மராட்சி மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலையில் 2018 ஆம் ஆண்டிற்கான தரம் ஒன்று மாணவர்களை சேர்ப்பதற்கான விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்பட்டு வருவதாகவும் எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை இவ் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என பாடசாலை அதிபர் கா.கந்தசாமி அறிவித்துள்ளார். (இ-5-10-101)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அதிரடி விலையில் டிஷ் டிவி இணைப்புகள்



| | |
|---|---|
| டிஸ் டிவி ரிசீவர் | Rs.2100/-* |
| டிஷ் ஆண்டெனா | Rs.1200/- |
| LNB | Rs.300/- |
| FULL Set | Rs.4200/- (1 month free) |

அத்துடன் அனைத்து cable டி.வி உபகரணங்களும் மிக குறைந்த விலையில்

| | |
|---|---|
| Rg 6 cable | Rs.1000/- |
| RG 6 GEL CABLE | Rs.2200/- |
| Ofc 6 Core fiber | Rs.35/- |
| Cable amp | Rs.2200/- |

மொத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம்

* அக்டிவேசன் தனி

Dish tv recharge மிக குறைந்த கட்டணத்தில்.

தொடர்பு கொள்ளவும்:-

0710986228/ 0710986224

(ச-8848)

## மாணவர் அனுமதி

2018 இல் தரம் 01 மாணவர் அனுமதிக்கான விண்ணப்பப்படிவங்கள் யாழ்ப்பாணம் மத்தியகல்லூரியில்வழங்கப்பட்டு வருகின்றன.

இவ் விண்ணப்பப் படிவங்களை கல்லூரி ஆரம்பப் பிரிவு அலுவலகத்தில்பெற்று உரிய முறையில் பூர்த்திசெய்து அதனுடன் தேவையான ஆவணங்களையும் இணைத்து 30.06.2017 (வெள்ளிக்கிழமை) இற்கு முன்னதாகஆரம்பப்பிரிவுஅலுவலகத்தில் ஒப்படைக்கவும். தாமதமாகும் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என அதிபர் அறிவித்துள்ளார். (இ)

அகில உலக கிருஷ்ண பக்திக் கழகம் யாழ்ப்பாணம்

ஸ்தாபக ஆச்சாரியார் தெய்வத்திரு அ.ச.பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா

# ஸ்ரீஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயம் 'நவ விருந்தாவனம்'



## ஒவ்வொரு ஞாயிறும் சிறப்பு பூசை, வழிபாடு

**மதியம் 11.30 மணியில் இருந்து 1.45 மணிவரை**

பஜனை, ராஜபோக ஆராதனை, சடாரி ஸேவை, பகவத்கீதை, ஸ்ரீமத் பாகவதத்தில் இருந்து பக்தி யோகத்தைப் பற்றிய உபநியாசம், சிறுவர்களுக்கான பக்தி வேதாந்த நெறிக் கல்வி, மந்திர தியானம் ஆகியவற்றில் கலந்து கொண்டு ஸ்ரீஸ்ரீ கிருஷ்ண பகவானின் பிரசாதத்தை உண்டு மகிழுங்கள்.

பிரதம விருந்தினராக தவத்திரு.பக்திமுகுந்த சுவாமி (மலேசியா) அவர்களின் பகவத்கீதை, ஸ்ரீமத்பாகவதத்திலிருந்து ஆன்மீக சொற்பொழிவு இடம்பெறும்.

இந்த நிகழ்ச்சிகளில் இனிதாக நேரத்தை செலவிட உங்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல, 203, கந்தையா உபாத்தியாயர் வீதி, உடுவில், சுன்னாகம்.

077 44 50 108

WWW.ISKCONJAFFNA.COM

அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும்

# யாழ். கம்பன் விழா-2017

**இரண்டாம் நாள் காலை நிகழ்வுகள்**

காலம் இன்று 24.06.2017 சனிக்கிழமை காலை 9.30 மணி

இடம்:-கம்பன் கோட்டம், நல்லூர்.

**மங்கல விளக்கேற்றல்**

திரு.நா.சிவநாதன் தம்பதியர் (ஓய்வுபெற்ற கிராமசேவகர்)

**கடவுள் வாழ்த்து**

திரு. ம.தயாபரன்

**தலைமையுரை**

பேராசிரியர் மா. சின்னத்தம்பி

**தொடக்கவுரை**

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா


பேராசிரியர் மா. சின்னத்தம்பி


பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா

**இலக்கியப் பேருரை**

பேராசிரியர் வி.அசோக்குமாரன்

"கம்பனில் துறவு"

**சுழலும் சொற்போர்**

நடுவர்: புலவர் இரெ.சண்முகவடிவேல்

பொருள்

"நெஞ்சில் பெரிதும் நிலைகொள்ளும் சிறுபாத்திரம்"

கூனியே!- ந.ஐங்கரன்
திரிசடையே!- ச.லலீசன்
அகலிகையே!- த.ரெங்கராஜன்
நீலமாலையே!- இ.சர்வேஸ்வரா
சபரியே!- த.நாகேஸ்வரன்
விராதனே!- ஸ்ரீ.பிரசாந்தன்

**மாலை நிகழ்வுகள்**

காலம் இன்று 24.06.2017 சனிக்கிழமை மாலை 4.30 மணி

இடம்:-ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபம், நல்லூர்.

**மங்கல இசை**

திரு.வி.சித்தார்த்தன், திரு.வி.பிரதித்தன் குழுவினர்

**மங்கல விளக்கேற்றல்**

கௌரவ. இ.அங்கஜன் (பாராளுமன்ற உறுப்பினர்)

**கடவுள் வாழ்த்து**

கலாநிதி. ஸ்ரீ தர்சனன்

**தலைமையுரை**

கௌரவ. த.சித்தார்த்தன் (பாராளுமன்ற உறுப்பினர்)

**தொடக்கவுரை**

திரு.சுரேஷ்பிரேமச்சந்திரன் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)


திரு.சுரேஷ்பிரேமச்சந்திரன் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)


இ.அங்கஜன் (பாராளுமன்ற உறுப்பினர்)

**பட்டிமண்டபம்**

நடுவர்: 'கம்பவாரிதி' இ.ஜெயராஜ்

பொருள்:

"அறத்தடுமாற்றத்தால் அதிகம் உழன்றவன்"

தசரதனே!-தி.திருநந்தகுமார், த.ரெங்கராஜன்

மாரீசனே!-இரெ.சண்முகவடிவேல், ந.விஜயசுந்தரம்

கும்பகர்ணனே!-வி.அசோக்குமாரன், ஸ்ரீ. பிரசாந்தன்


கம்பவாரிதி திரு. இ.ஜெயராஜ்


திரு.த.சித்தார்த்தன் (பாராளுமன்ற உறுப்பினர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அகில இலங்கை கம்பன் கழகம்

(இ)

MORA TAMILS FACULTY OF ENGINEERING UNIVERSITY OF MORATUWA

மொறட்டுவை பல்கலைக்கழக பொறியியற் பீட தமிழ் மாணவர்கள் நடாத்தும் க.பொ.த உயர்தரமாணவர்களுக்கான 8வது

# முன்னோடிப் பரீட்சை – 2017

மொறட்டுவை பல்கலைக்கழக பொறியியற் பீட தமிழ் மாணவர்களால் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் தமிழ்பேசும் மாணவர்களுக்கான வருடாந்த முன்னோடிப் பரீட்சை இம்முறையும் சிறப்பாக இடம்பெறவுள்ளது. தமிழ், ஆங்கில மொழிமூலங்களில் கணித, உயிரியல் மற்றும் தொழில்நுட்ப பிரிவுகளில் பரீட்சைகள் இடம்பெறவுள்ளன. கடந்த ஏழு வருடங்களாக நடைபெற்றுவரும் இந்தப் பரீட்சையில் தோற்றுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை வருடாவருடம் அதிகரித்துள்ளது. இம்முறையும் கடந்த வருடத்தை விட அதிக மாணவர்கள் ஏற்கனவே அனுமதி பெற்றுள்ளார்கள். பரீட்சை நிறைவில், அச்சடிக்கப்பட்ட விடைத்தொகுதிகள் வழங்கப்படுவதுடன் விடைத்தாள்கள் யாவும் சிறந்த முறையில் திருத்தப்பட்டு z-புள்ளிகள், மாவட்ட, தேசிய நிலைகளுடனான பெறுபேறுகள் 20-07-2017 க்கு முன்னர் வெளியிடப்படும். மாணவர்களுக்கு இறுதிப் பரீட்சை தொடர்பான அனுபவத்தை வழங்கி அவர்களின் நிலையை அறிந்துகொள்வதே இப்பரீட்சையின் நோக்கமாகும். கடந்த வருடங்களில் இப்பரீட்சையில் முன்னணிப் பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்டவர்கள் இறுதிப் பரீட்சையிலும் முன்னணி நிலைகளை அடைந்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**மாற்றம்** 25 ஆம் திகதி நடைபெறவிருந்த பரீட்சைகள் யாவும் 28 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளன.
24 ஆம் திகதி பரீட்சைகள் எவ்வித மாற்றமும் இன்றி நடைபெறும்.

Time Table - BIO & Maths Stream

| Date | Time | Subject |
|---|---|---|
| 24.06.2017 - Saturday | 2.30 PM - 5.30 PM | Combined Mathematics I |
| 24.06.2017 - Saturday | 2.30 PM - 4.30 PM | Biology I |
| 28.06.2017 - Wednesday | 2.30 PM - 5.30 PM | Combined Mathematics II |
| 28.06.2017 - Wednesday | 2.30 PM - 5.30 PM | Biology II |
| 01.07.2017 - Saturday | 2.30 PM - 4.30 PM | Physics I |
| 02.07.2017 - Sunday | 2.30 PM - 5.30 PM | Physics II |
| 04.07.2017 - Tuesday | 2.30 PM - .430 PM | Chemistry I |
| 04.07.2017 - Tuesday | 2.30 PM - 4.30 PM | ICT I |
| 05.07.2017 - Wednesday | 2.30 PM - 5.30 PM | Chemistry II |
| 05.07.2017 - Wednesday | 2.30 PM - 5.30 PM | ICT II |

Time Table - Technology Stream

| Date & Time | Time | Subject |
|---|---|---|
| 24.06.2017 - Saturday | 2.30 PM - 5.30 PM | Engineering Technology I |
| 24.06.2017 - Saturday | 2.30 PM - 4.30 PM | Bio System Technology I |
| 28.06.2017 - Wednesday | 2.30 PM - 5.30 PM | Engineering Technology II |
| 28.06.2017 - Wednesday | 2.30 PM - 5.30 PM | Bio System Technology II |
| 01.07.2017 - Saturday | 2.30 PM - 4.30 PM | Science for Technology I |
| 02.07.2017 - Sunday | 2.30 PM - 5.30 PM | Science for Technology II |
| 04.07.2017 - Tuesday | 2.30 PM - 4.30 PM | Agriculture I |
| 04.07.2017 - Tuesday | 2.30 PM - 4.30 PM | ICT I |
| 05.07.2017 - Wednesday | 2.30 PM - 5.30 PM | Agriculture II |
| 05.07.2017 - Wednesday | 2.30 PM - 5.30 PM | ICT II |

மின்னஞ்சல்: info@moraetamils.com | இணையம்: www.moraetamils.com

பிரதான அனுசரணை | இணை அனுசரணை | பதிப்பக அனுசரணை

வலம்புரி Valampurii | BCAS CAMPUS | NORTHSHORE COLLEGE OF BUSINESS AND TECHNOLOGY | PRINTERS OF THE NORTH ARIKANAN PHONE: 021 222 2717

(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பங்களின் வாழ்வாதாரத்தை வளப்படுத்த தொழில் முயற்சிகள் ஏற்படுத்தப்பட வேண்டும்

## கிளிநொச்சி மாவட்ட செயலக புள்ளி விபரத் தகவலில் சுட்டிக்காட்டு

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்டத்தில் மக்கள் இடப்பெயர்வின் பின்னரான மீள் குடியேற்றத்தின் பின்னர் 4 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் உள்ள 95 கிராம அலுவலர் பிரிவுகளிலும் 43 ஆயிரத்து 720 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 41 ஆயிரத்து 945 பேர் மீள் குடியேற்றப்பட்டுள்ள நிலையில் இக் குடும்பங்களில் மாதாந்தம் 2 ஆயிரத்து 500, தொடக்கம் 10 ஆயிரம் ரூபாவுக்குள் வருமானத்தைப் பெற்று வரும் 33 ஆயிரத்து 82 குடும்பங்கள் வாழ்ந்து வருவதாக கிளிநொச்சி மாவட்ட செயலக புள்ளி விபரத்தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கிளிநொச்சி மாவட்டத்தில் இடப்பெயர்வின் பின்னரான மக்கள் மீள் குடியேற்றத்தின் பின்னர் வாழ்வாதாரத்தை வளப்படுத்தும் வகையில் தொழில் முயற்சிகள் இன்றி வாழ்ந்து வரும் குடும்பங்களில் மாதாந்தம் 10 ஆயிரம் ரூபாவுக்குள் வருமானத்தைக் கொண்ட குடும்பங்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது.

இதற்கமைய, மாதாந்தம் 2 ஆயிரத்து 500 ரூபாவை மட்டும் வருமானத்தைக் கொண்ட குடும்பங்கள்,

கரைச்சி பிரதேச செயலக பிரிவில் ஆயிரத்தொரு குடும்பங்களும்,

கண்டாவளை பிரதேச செயலக பிரிவில் 2 ஆயிரத்து 377 குடும்பங்களும்,

பூநகரி பிரதேச செயல பிரிவில் 2 ஆயிரத்து 591 குடும்பங்களும்,

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவில் ஆயிரத்து 132 குடும்பங்களுமாக மொத்தம் 7 ஆயிரத்து 101 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இதேபோன்று, மாதாந்தம் 2 ஆயிரத்து 501 ரூபாவுக்கும் 5 ஆயிரம் ரூபாவுக்கும் இடையில் வருமானத்தை கொண்ட குடும்பங்கள்,

கரைச்சி பிரதேச செயலக பிரிவில் 6 ஆயிரத்து 888 குடும்பங்களும்,

கண்டாவளை பிரதேச செயலக பிரிவில் 2 ஆயிரத்து 123 குடும்பங்களும்,

பூநகரி பிரதேச செயலக பிரிவில் 2 ஆயிரத்து 7 குடும்பங்களும்,

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவில் 808 குடும்பங்களுமாக மொத்தம் 11 ஆயிரத்து 836 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இந் நிலையில், 5 ஆயிரம் ரூபா தொடக்கம் 10 ஆயிரம் ரூபா வரையான வருமானத்தை கொண்ட குடும்பங்கள், கரைச்சி பிரதேச செயலக பிரிவில் 9 ஆயிரத்து 784 குடும்பங்களும், கண்டாவளை பிரதேச செயலக பிரிவில் 2 ஆயிரத்து 83 குடும்பங்களும்,

பூநகரி பிரதேச செயல பிரிவில் ஆயிரத்து 480 குடும்பங்களும், பச்சிலைப் பள்ளி பிரதேச செயலக பிரிவில் 808 குடும்பங்களுமாக மொத்தம் 14 ஆயிரத்து 155 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இதேவேளை, மாதந்தம் 10 ஆயிரம் ரூபாவுக்கு மேல் வருமானத்தை 9 ஆயிரத்து 236, குடும்பங்கள் பெற்று வரும் நிலை காணப்படுகின்றது.

ஒட்டு மொத்தமாக இவ்வாறு வருமானத்தை கொண்ட 42 ஆயிரத்து 318 குடும்பங்களில் பெரும்பாலான குடும்பங்களின் வாழ்வாதாரத்தை வளப்படுத்தும் வகையில் தொழில் முயற்சிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டியுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட செயலகத்தினால் இறுதியாக வெளியிடப்பட்டுள்ள புள்ளி விபரத் தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# புதூர் நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் விழா நாளை மறுதினம்

## பக்தர்கள் கூடும் இடங்களில் 25 சி.சி. ரி.வி. கமராக்கள் பொருத்தல்

(மல்லாவி)

வரலாற்றுச் சிறப்புமிக்க புதூர் நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் திருவிழாவை முன்னிட்டு அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக ஆலய அறங்காவலர் சபையினர் அறிவித்துள்ளனர்.

புதூர் நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் திருவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை விசேட பூசை ஆராதனைகளுடன் ஆரம்பமாகி தொடர்ந்து அடியவர்களின் நேர்த்திக் கடன் பூசை வழிபாடுகள் நடைபெற்று இறுதியாக இரவு மடைப் பண்டம் எடுக்கும் நிகழ்வும் அதனைத் தொடர்ந்து பொங்கல் நிகழ்வும் நடை பெறவுள்ளதாக ஆலய அறங்காவலர் சபையினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர், வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் ஆகியோரின் நெறிப்படுத்தலில் துறை சார்ந்த பிரிவு பிரதிநிதிகளைக் கொண்ட விசேட பொங்கல் திருவிழா ஏற்பாட்டுக்குழு ஒழுங்குபடுத்தலில் திருவிழா நடைபெறவுள்ளது.

இதற்கமைய, போக்குவரத்து சேவைகள் வழமை போன்று வடக்கு மாகாண சபையின் போக்குவரத்து அமைச்சின் கீழ் உள்ள அரச மற்றும் தனியார் துறையினரின் பயணிகள் பேருந்து சேவைகளை முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் இருந்து நடத்தப்படவுள்ளது.

பாதுகாப்பு சேவைகளை வவுனியா மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான சுமார் 2 ஆயிரத்திற்கு மேற்பட்ட சீருடை தரித்த மற்றும் சிவில் உடை அணிந்த ஆண், பெண் பொலிசார் கடமையாற்றவுள்ளதுடன், இவர்களுக்கு உதவியாக வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் கீழ் உள்ள முன்னணி பாடசாலைகளின் சாரணிய மாணவர்களும் இணைந்து சேவையாற்றவுள்ளனர்.

அத்துடன், அதிகமாக பக்தர்கள் கூடும் இடங்களில் 25 மேற்பட்ட சி. சி.ரி.வி.கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட்டு கண்காணிப்புப் பணி நடைபெறவுள்ளது.

இதேவேளை, குடிநீர் வசதி மற்றும் ஏனைய பராமரிப்பு பணிகளை வவுனியா வடக்கு பிரதேச சபையின் செயலாளர் தலைமையிலான அணியினர் நெறிப்படுத்துகின்றனர்.

சுகாதார வைத்திய சேவைகளை வவுனியா வடக்கு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் நெறிப்படுத்துகின்றனர்.

எனவே, பக்தர்கள் தங்களின் நேர்த்திக் கடன்களை எவ்வித தடைகளும் இன்றி நிறைவேற்றிக் கொள்ளலாம் எனவும் பொங்கல் திருவிழாவிற்கு வருகை தரும் போது, பக்த அடியார்கள் தங்க ஆபரணங்களை அணிந்து வருவதை முற்றாக தவிர்த்துக் கொள்வதுடன், சிறு குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் தொடர்பில் அவதானத்துடன் செயற்பட்டு நாகதம்பிரானின் இஷ்ட சித்திகளை பெற்று கொள்ளுமாறு ஆலய அறங்காவலர் சபையினர் அறிவித்துள்ளார்கள். (2-15)




# கண்டல் தாவரங்களை பாதுகாப்பதற்கான செயற்திட்ட அறிமுக கலந்துரையாடல்

(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்ட கரையோரப்பகுதிகளில் கண்டல் தாவரங்களை பாதுகாப்பதற்கான செயற்திட்ட அறிமுக கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசஅதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இலங்கை சிறு மீனவ சம்மேளனத்தின் அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்டத்தில் அறிமுகம் செய்யப்படவுள்ள கண்டல் தாவரங்களை பாதுகாப்பதற்கான கண்டல் தாவர மர நடுகைத் திட்டம், கரையோர சமூகங்களின் வாழ்வாதார அபிவிருத்தி திட்டம் ஆகியவற்றை அறிமுகம் செய்து வைக்கும் இக்கலந்துரையாடலில் மேற்படி அமைப்பின் தலைவர் அனுராத விக்கிரமசிங்க, திட்ட முகாமையாளர் ஜெயதிலக மற்றும் யாழ்.பல்கலைகழக



விரிவுரையாளர் திருமதி ஜி.ராஜினி போன்றோர் கலந்து கொண்டு திட்டம் தொடர்பாக விளக்கம் அளித்தனர்.

மேலும் இத்திட்டத்தின் அறிமுக கலந்துரையாடலை அடுத்து பிரதேச மட்டத்தில் நடைபெற்று பின்னர் கிராம மட்டங்களில் அமுல்படுத்தப் படும் என தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் பிரதேச செயலாளர்கள், மாவட்ட உதவித்திட்டப் பணிப்பாளர், மீன்பிடி உதவிப் பணிப்பாளர், வன வளத் திணைக்கள உத்தியோகத்தர்கள், பொலிஸ் திணைக்கள உத்தியோகத்தர்கள், கரையோர பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், கடற்தொழிற்சங்கங்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-312)

# உவரடைந்துவரும் இரு கிராமங்களை தடுக்க அதிகாரிகள் முன் வரவேண்டும்

## மக்கள் கோரிக்கை

(பரந்தன்)

கிளிநொச்சி வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் ஆகிய இரு கிராமங்கள் வேகமாக உவரடைந்து வருவதன் காரணமாக இதனைத் தடுப்பதற்கு அதிகாரிகளும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் நடவடிக்கை எடுக்கவில்லை என இரு கிராமங்களின் மக்கள் கவலைத் தெரிவித்துள்ளனர்.

பூநகரியின் பல கிராமங்கள் உவரடைந்ததன் தொடர்ச்சியாக வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் கிராமங்கள் முழுமையாக உவரடையும் ஆபத்தினை எதிர்கொண்டுள்ளது. கடந்த ஏழாண்டுகளாக கிராம மட்டத்திலும் கரைச்சி பிரதேச செயலகத்திலும் மாவட்டச் செயலகத்திலும் நடைபெற்ற கூட்டங்களில் தமது கிராமங்களை உவர் ஆபத்தில் இருந்து காப்பாற்றுமாறு கிராமங்களின் மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் அதி காரிகளிடமும் கோரிக்கை விடுத்து இருந்தனர்.

மண்டைக்கல்லாறு வழியாக கடல் நீர் உட்புகுவதன் காரணமாக வன்னேரிக் குளத்தின் குஞ்சுக்குளம் கிராமம் முழுமையாக உவரடைந்து இக்கிராமத்தில் இருந்து ஐம்பதிற்கு மேற்பட்ட குடும்பங்கள் இடம் பெயர்ந்ததுடன் இக்கிராமத்தில் இயங்கிய குஞ்சுக்குளம் கணேசா வித்தியாலயம் மூடப்பட்டுள்ளது.

குஞ்சுக்குளம் வழியாக ஆனைவிழுந்தான் மேற்கு வரை பரவிய உவர்நீர் காரணமாக நன்னீர் கிணறுகள் எல்லாம் உவர் நீராக மாறி தென்னை, பலா போன்ற பயன்தரு மரங்கள் அழிவடைந்து வருகின்றன. குஞ்சுக்குளத்தின் அணைக்கட்டு இருப்பதன் காரணமாக வன்னேரிக்குள மகா வித்தியாலய சூழல் உவர்நீர் பரம்பல் தடுக்கப்பட்டுள்ள போதிலும் ஆனைவிழுந்தான் மேற்கில் பரவியுள்ள உவர்நீர் வன்னேரிக்குளத்தின் ஐயனார் புரம், இரண்டு ஏக்கர் ஆகிய பகுதிகளில் உவர்ப் பரம்பல் ஏற்படக் கூடிய ஆபத்து உருவாகியுள்ளது.

இந்நிலையில் மாவட்டத்தின் முக்கிய பிரச்சினைக்கு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் ஆராயப்பட்ட விடயத்திற்கு இதுவரை அதிகாரிகளினால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மண்டைக் கல்லாறு வழியாக பரவும்உவர் நீரினைத் தடுப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காவிட்டால் இரு கிராமங்களும் முழுமையாக உவரடைந்து எதிர்காலத்தில்இக்கிராமங்களில் இருந்து ஆயிரம் வரையான குடும்பங்கள் இடம் பெயர வேண்டிய அவலம் உருவாகும். (2-312)



மன்னார் மறைமாவட்டத்தில் பல்வேறு மனித நேயப் பணிகளை ஆற்றி வரும் கரித்தாஸ் வாழ்வுதய பணியகத்தின் "உதவிக்கரம்" பிரிவின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் இடம்பெற்றுள்ளது. குறித்த இரத்ததானம் நிகழ்வு கரித்தாஸ் வாழ்வுதய இயக்குனர் அருட்பணி ம. ஜெயபாலன் தலைமையில் நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் நடைபெற்றுள்ளது. இதன் போது அருட்தந்தையர்கள், சமூக ஆர்வலர்கள், பொது மக்கள் என சுமார் 80 பேர் வரை கலந்து கொண்டு இரத்ததானம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (படங்கள் - மல்லாவிச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைதீவு மக்கள் ஏ-32 வீதியை மறித்து கவனயீர்ப்பு



## பூநகரி பிரதேச செயலரின் உறுதிமொழியை அடுத்து கைவிடப்பட்டது







(பரந்தன்)

கிளிநொச்சி, பூநகரி, இரணைதீவு மக்கள் தமது பூர்வீக நிலத்தை விடுவிக்கக் கோரி 54 ஆவது நாளான நேற்றைய தினம் பூநகரி-மன்னார்(ஏ-32) வீதியை வழிமறித்து சுலோகங்களைத் தாங்கியவாறு வீதிக்குக் குறுக்காக அமர்ந்து கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த பூநகரி பிரதேச செயலர் எஸ்.கிருஸ்ணேந்திரன் வழங்கிய உறுதிமொழியை அடுத்து போராட்டம் கைவிடப்பட்டது.

இக் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்றுக் காலை 7.30 மணி தொடக்கம் நண்பகல் வரை நடைபெற்றது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

கிளிநொச்சி மாவட்டத்தின் அதிக கடல் வளம் கொண்ட பகுதியாகக் காணப்படும் இரணைதீவில் வாழ்ந்த மக்கள் கடந்த 1992 ஆம் ஆண்டு முதல் இடம் பெயர்ந்து முழங்காவில் பகுதியில் வாழ்ந்துள்ளனர். இந்நிலையில் கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் தங்களை சொந்த நிலங்களில் மீள்குடியேற்றுமாறு கோரி தொடர் கோரிக்கையை விடுவித்து வந்தனர்.

இருந்தும் இவர்களது கோரிக்கைகளுக்கு இதுவரை எவரும் பதில் வழங்காத நிலையில் குறித்த மக்கள் கடந்த மே மாதம் முதலாம் திகதி முதல் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந் நிலையிலேயே குறித்த மக்கள் நேற்றைய தினம் ஏ-32 வீதியை வழி மறித்து கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப் போராட்டமானது நேற்று வரை தீர்வுகள் எவையும் இன்றி 54 ஆவது நாளை எட்டிய நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த சுமார் 700 இற்கும் மேற்பட்ட மக்கள் காலை அங்கிருந்து சுலோகங்களைத் தாங்கியவாறு பேரணியாக வந்து முழங்காவில் மகா வித்தியாலயத்திற்கு அருகில் உள்ள ஏ-32 மன்னார் - பூநகரி வீதியை மறித்து வீதிக்குக் குறுக்காக அமர்ந்து தமக்கான தீர்வினை வழங்கக் கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த கிளிநொச்சி மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் இவ்வாறு வீதியை மறித்து போராட்டம் செய்வது சட்டத்திற்கு முரணானது இவ்வாறு போக்குவரத்துக்கு தடையாக இருப்பவர்களை கைது செய்யவும் முடியும். இப்போராட்டத்தை நிறுத்த தேவையான ஆயுதங்கள் கருவிகள் நீதிமன்ற உத்தரவு என்பன எம்மிடம் உள்ளது. நாம் எதனையும் செய்யவில்லை. பாதையின் ஒருபகுதியை ஆவது போக்குவரத்துக்கு தயவுசெய்து தாருங்கள் என கேட்டுக் கொண்டார்.

இதற்கமைய போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் வீதியின் ஒருபுறத்துக்கு மாற்றப்பட்டு போராட்டம் தொடர்ந்தது.

அத்துடன் இவ்வளவு நாட்களும் பொறுத்து விட்டோம் இனிமேல் எங்களால் பொறுக்க முடியாது இதற்கான பொறுப்பான பதிலை மேல் நிலை அரச அதிகாரி ஒருவர் தரும் வரை போராட்டம் தொடரும் என இவ் விடத்தை விட்டு அகல மாட்டோம் என போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்தனர்.

இந் நிலையில் குறித்த இடத்திற்கு விரைந்த பூநகரி பிரதேச செயலர் மக்கள் மத்தியில் கருத்துத் தெரிவிக்கையில்,

இரணைதீவு சம்பந்தமாக மேலிடங்களுக்கு அரசாங்க அதிபர் ஊடாக பல முறை அறிவித்து உள்ளோம் எதிர்வரும் 28 ஆம் திகதி புதன்கிழமை எனக்கும் அரசாங்க அதிபர், கடற்படையினர் ஆகியோருக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று கொழும்பில் நடைபெறவுள்ளது.

அக் கலந்துரையாடலுக்காக இரணைதீவு சம்பந்தப்பட்ட மேலதிக தரவுகளையும் வழங்க உள்ளோம். கூட்டத்தில் தெரிவிக்கின்ற முடிவை உங்களிடம் தெரிவிப்போம் அதுவரை ஒத்துழைக்குமாறு மக்களை கேட்டுக் கொண்டார்.


இதனையடுத்து வீதி மறியல் போராட்டத்தை கைவிட்ட மக்கள் தாம் வழமை போன்று இரணைமாதா நகரில் கவனயீர்ப்புப் போராட் டத்தில் ஈடுபடுவோம் என தெரிவித்து அகன்று சென்ற னர்.

இதேவேளை சதாகமான பதில் எதுவும் கிடைக்காவிடின் போராட்டம் வேறு வடிவத்திற்கு மாறும் எனவும் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் எச்சரிக்கை விடுத்தனர்.

(2-15-312)




# ஆட்டோ- கன்டர் வாகனம் விபத்து; ஒருவர் மரணம்




மதவாச்சி ஹிக்கிரிகொலாவ பகுதியில் நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் ஏற்பட்ட விபத்தில் ஆட்டோவைச் செலுத்திச் சென்ற நபர் பலியாகியதாக மதவாச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் பகுதியில் இருந்து மதவாச்சி நோக்கி பயணித்த முச்சக்கரவண்டி எதிர் திசையில் பயணித்த கன்டர் ரக வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்ட போது கண்டர் வாகனத்தின் மீது ஆட்டோ மோதுண்டதிலே இவ் விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது ஆட்டோச் சாரதி படுகாயமடைந்த நிலையில் றம்பாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் போது உயிரிழந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இவ் விபத்து தொடர்பான விசாரணைகளை மதவாச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-250)

# 17 விவசாய போதனாசிரியர் பிரிவுகளிலுள்ள விவசாயிகளுக்கு மரக்கறி விதை பொதிகள்

## மன்னார் மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு

(மல்லாவி )

மன்னார் மாவட்டத்தில் வரட்சியால் பாதிக்கப்பட்ட பயனாளிகளுக்கான மரக்கறி விதை பொதிகளை உணவு விவசாய நிறுவனத்தின் அனுசரணையுடன் மன்னார் மாவட்டத்திலுள்ள 17 விவசாய போதனாசிரியர்கள் பிரிவிலுள்ள விவசாயிகளுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை மன்னார் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகம் மேற்கொண்டுள்ளதாக மன்னார் மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி. ஏ.ஸ்ரீரங்கன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்ட 17 விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளிலுள்ள மன்னார் தீவு, பேசாலை, நானாட்டான், வஞ்சியங்குளம், உயிலங்குளம், ஆள்காட்டிவெளி, பி.பி.பொற்கேணி, சிலாவத்துறை, பாலம்பிட்டி, இரணை இலுப்பைக்குளம், காக்கையன்குளம் ஆகிய பகுதிகளில் தலா 50 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டவுள்ளது.

இதேபோன்று, மாந்தை, விடத்தல்தீவு, இலுப்பைக் கடவை, கொண்டச்சி, தேக்கம், முருங்கன் ஆகிய பகுதிகளில் தலா 75 பயனாளிகளுக்குமாக மொத்தம் ஆயிரம் மரக்கறி விதை பொதிகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தொடக்கம் வழங்கப்பட்டு வருவதாக மன்னார் மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

சிறுவனை மோதி

# தப்பிச் சென்ற சாரதி கைது; விசாரணை தொடர்கின்றது

(மல்லாவி)

கிளிநொச்சி முழங்காவில் பகுதியில் கடந்த 17 ஆம் திகதி சிறுவன் ஒருவரை மோதி தப்பி சென்ற கார் மற்றும் சாரதி ஆகியோர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு முழங்காவில் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகள் இடம்பெற்று வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

பிரதேச மக்களால் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது பூநகரி உதவி பொலிஸ் அத்தியட்சகர் மக்களிற்கு வழங்கிய வாக்குறுதிக்கமைய நேற்று கார் மற்றும் சாரதி முழங்காவில் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டு விசாரணைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக முழங்காவில் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விபத்தை ஏற்படுத்திய கார் தொடர்பில் நேற்றைய தினம் தடயவியல் பொலிஸார் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (2-15)

# வைத்தியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு கிளினிக் நோயாளர்கள் அவதி

(கிளிநொச்சி)

அரச வைத்தியசாலைகளின் வைத்தியர்களின் பணிப் பகிஷ்கரிப்பு காரணமாக தாம் பல்வேறு அசௌகரியங்களை அனுபவிப்பதாக கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த கிளினிக் நோயாளர்கள் மிகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

தமக்கான மாதாந்த கிளினிக் சிகிச்சையின்போது அடுத்த தடவை வரும் போது வேறு சில மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொண்டு அறிக்கையுடன் வருமாறு தமக்கு தெரியப்படுத்தப்பட்டதால் தூர இடங்களிலிருந்தும் கஸ்டத்துடன் சென்று மருத்துவ பரிசோதனையை மேற்கொண்டு உரிய கிளினிக் நாளில் மாவட்ட வைத்தியசாலைக்கு சென்றோம்.

ஆனால்நேற்று முன்தினம் தொடக்கம் வைத்தியர்கள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருவதால் மருத்துவ சிகிச்சைகளை பெற்றுக் கொள்ள முடியவில்லை. அங்கிருந்த மருந்தாளர்கள் மூலமாக முன்னர் கிடைத்த மருந்துகளையே திரும்பவும் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தது.

இவ்வாறான நிலையில் கிளினிக் நோயாளர்களின் நிலைமையை கருத்திற் கொண்டு இதற்குப் பொறுப்பான உயர்மட்ட வைத்தியர்களும் பொறுப்பானவர்களும் ஏற்ற ஒழுங்குகளை செய்து நோயாளரின் நலனுக்கு உதவ வேண்டுமென வினயமாகக் கேட்டுக் கொள்வதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.(2-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமார் குணரட்னத்திற்கு இலங்கைக் குடியுரிமை

முன்னிலை சோசலிச கட்சியின் தலைவர் குமார் குணரட்னத்திற்கு இலங்கை குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது.

பன்னிப்பிட்டியில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்திற்கு இது தொடர்பான கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

உள்துறை அமைச்சர் எஸ்.பி. நாவின்ன மற்றும் அமைச்சின் செயலாளர்களது கையொப்பங்களுடன் அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. நொயல் முதலிகே எனப்படும் குமார் குணரட்னத்திற்கு இலங்கைக் குடியுரிமை வழங்குவதாக கடிதத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. தமது அவுஸ்திரேலிய குடியுரிமையை இரத்துச் செய்து கொண்டதாக குமார் குணரட்னம் இலங்கை அரசாங்கத்திற்கு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

விசா இன்றி நாட்டில் தங்கியிருந்தமைக்காக குமார் குணரட்னம் கைது செய்யப்பட்டு ஓராண்டுக்கு மேல்



சிறைத்தண்டனை அனுபவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கை குடியுரிமை வழங்கப்பட்டமை குறித்து குமார் குணரட்னம் கருத்து வெளியிடுகையில்,

ஜனநாயகம் பற்றி பேசி ஆட்சிக்கு வந்த அரசாங்கம் நாம் முன்னெடுத்த போராட்டங்களுக்கு பதிலளிக்க முடியாது குடியுரிமை வழங்கியுள்ளது.

முன்னிலை சோசலிச கட்சி, ஊடகங்கள், பல்வேறு தரப்பினர், பாடசாலை நண்பர்கள், சிவில் பிரஜைகள், ஏனைய கட்சிகளைச் சார்ந்தோர் இணைந்து அரசாங்கத்தின் மீது அழுத்தங்களை பிரயோகித்தனர்.

சிறையிலிருந்து விடுதலையானதன் பின்னர் இலங்கை குடியுரிமை வழங்குவதாக அரசாங்கம் உறுதியளித்திருந்தது. அதன் அடிப்படையில் சட்டத்தரணி ஊடாக அவுஸ்திரேலிய குடியுரிமையை இரத்துச் செய்வதாக அறிவித்திருந்தேன். எனது அரசியல் செயற்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என குமார் குணரட்னம் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இலங்கை துறைமுகங்களை அவதானிக்கிறது பிரான்ஸ்

## தூதுவர் மரின் சூ சுட்டிக்காட்டு

இலங்கையின் துறைமுகங்களில், குறிப்பாக கொழும்பு துறைமுகம் தொடர்பாக இடம்பெற்று வரும் மாற்றங்களை பிரான்ஸ் உன்னிப்பாக அவதானித்து வருகிறது. ஏனென்றால், பிரெஞ்சு நிறுவனங்கள், இங்கு கால்வைப்பதற்கு ஆர்வம் கொண்டுள்ளன என்று இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் ஜீன் மரின் சூ தெரிவித்துள்ளார்.

கொழும்பு துறைமுகம் வந்துள்ள பிரெஞ்சுக் கடற்படையின் தரையிறக்க மற்றும் உலங்குவானூர்திக் கப்பலான மிஸ்ராலில், நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



இலங்கை துறைமுகங்களில் சீனாவின் தலையீடு தொடர்பாக பிரான்ஸ் கவலை கொண்டுள்ளதா? என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர், அம்பாந்தோட்டை மற்றும் கொழும்பு துறைமுக கிழக்கு முனையம் ஆகிய துறைமுக அபிவிருத்திகளை தமது நாடு உன்னிப்பாக கவனித்து வருவதாக கூறினார்.

பிரான்ஸ் எப்போதுமே நலன்களை வெளிப்படுத்துவதில் மிகவும் கவனமாகவும், அவதானிப்புடனும் இருந்து வந்தது. இலங்கை கடற்படையின் தேவைகள் தொடர்பாக, நாம் தொடர்ந்து உன்னிப்பாக கவனித்து வருகிறோம்.

இந்தியப் பெருங்கடலில், ஆட்கடத்தல், போதைப்பொருள் கடத்தல், கடற்கொள்ளை, தீவிரவாதம் என்பன இலங்கை உள்ளிட்ட பிராந்திய நாடுகள் எதிர்கொள்ளும் சவால்களாக உள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# நாய்கள் பற்றி கூற முடியாது

தரைப்படை, விமானப் படை மற்றும் கடற்படை ஆகிய முப்படைகளிலும் கடமை நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்படும் நாய்கள் தொடர்பிலான தகவலை வழங்கமுடியாது என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்தின்போது, ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பியான புத்திக பத்திரண கேட்டிருந்த கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முப்படைகளிலும் உள்ள நாய்களின் எண்ணிக்கை, அவற்றைப் பராமரிப்பதற்கு செலவிடப்படும் பணத்தொகை, நாய்களிலிருந்து பெறப்படும் பயன்கள் உள்ளிட்டவற்றைக் கேட்டிருந்தார்.

அக்கேள்விக்குப் பதிலளித்த இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன, முப்படைகளிலும் இருக்கின்ற நாய்கள், தேசிய பாதுகாப்புக்காகவே பயன்படுத்தப்படுகின்றன. ஆகையினால், தேசியப் பாதுகாப்பை கவனத்தில் கொண்டு, அந்த நாய்களின் எண்ணிக்கையைக் கூற முடியாது என்றார்.

இதேவேளை, தரைப்படையில் பொறியியல் படையணியில் உள்ள நாயொன்றைப் பராமரிப்பதற்கு மாதாந்தம் 15,476 ரூபாயும், கொமாண்டோ படையணியில் உள்ள நாயொன்றைப் பராமரிப்பதற்கு 11,037 ரூபாவும் செலவிடப்படுகின்றது.

கடற்படையில் உள்ள நாயொன்றைப் பராமரிப்பதற்கு மாதாந்தம் 28,685 ரூபாயும், விமானப்படையில் உள்ள நாயொன்றைப் பராமரிப்பதற்கு 7,962 ரூபாவும் செலவிடப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, இந்தப் படைகளுக்காக வெளிநாடுகளிலிருந்து மேலும் நாய்களை கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும், அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்றும் அவர் பதிலளித்தார். (இ-7)

# இரு வைத்தியர்களிடையே மோதல்; ஒருவர் காயம்

இரு வைத்தியர்களிடையே ஏற்பட்ட மோதலில் வைத்தியர் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் உட்பட சைட்டம் எதிர்ப்பாளர்கள் இணைந்து நடத்திய கூட்டத்தின் பின்னர் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற சிற்றுண்டி வழங்கும் நிகழ்வின் போது இந்த மோதல் இடம் பெற்றுள்ளது. காயமடைந்த வைத்தியர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில்அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கருத்து மோதலின் காரணமாகவே இந்த மோதல் ஏற்பட்டுள்ளதாகவும் வேறு தகவல்கள் தெரியாது என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது. (இ-7)

## சனசமூக நிலைய பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும்

கோண்டாவில் ஞானவீர சனசமூக நிலைய பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நாளை 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு சனசமூக நிலைய கீழ் மண்டபத்தில் நடைபெறும் என சனசமூக நிலைய செயலாளர் கு.மதுசுதன் அறிவித்துள்ளார். (இ-7)

# ஆவணங்கள் எதுவுமின்றியே ஷஷிக்கு ஐ.டி கொடுத்தோம்

## ஆட்பதிவு திணைக்கள பிரதி ஆணையாளர் சாட்சியம்



விமல்வீரவன்சவின்மனைவியான ஷஷி வீரசன்சவு க்கு ஒருநாள் சேவையினூடாக அடையாள அட்டையைப் (ஐ.டி) பெற்றுக்கொடுக்குமாறும், அது தொடர்பான ஆவணங்கள் பின்னர் தரப்படும் என, ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்தால் அனுப்பப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது என்று, ஆட்பதிவுத் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் இந்திக குமார லியனகே, கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில், நேற்று முன்தினம் சாட்சியமளித்தார்.

ஷஷி வீரவன்ச, போலிப் பெயர் மற்றும் போலியான பிறந்த தினத்தைக் கொண்டு இரண்டு அடையாள அட்டைகளை எடுத்துள்ளமை தொடர்பில் குற்றஞ் சாட்டப் பட்டிருந்ததுடன், அவற்றைக் கொண்டு இராஜதந்திர மற்றும் சாதாரண கடவுச்சீட்டுகளைப் பெற்ற குற்றச்சாட்டுத் தொடர்பில், குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் வழக்குத் தொடரப்பட்டது.

ரணசிங்ககே ரண்முத்து முதியன்சலாகே ஷேஹசா உதயகாந்தி மற்றும் ரணசிங்ககே ரண்முத்து முதியன்சலாகே ஷிர்ஷா உதயகாந்தி ரணசிங்க ஆகிய பெயர்களில் இரண்டு கடவுச்சீட்டுகள் பெறப்பட்ட குற்றச்சாட்டுத் தொடர்பில் 2015ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் கைது செய்யப்பட்ட அவர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்த வழக்கு, பிரதான நீதவான் லால் ரணசிங்க பண்டார முன்னிலையில், நேற்று முன்தினம் எடுத்துக் கொள்ளப்பட்டபோது, வழக்கின் ஏழாவது சாட்சியாளரான, ஆட்பதிவுத் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் இந்திக குமார லியனகேவிடம், பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் கேள்விகளைக் கேட்டார். அதற்குப் பதிலளிக்கையிலேயே மேற்குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

அடையாள அட்டை தொலைந்த காரணத்தால், மீண்டும் அதைப் பெறுவதற்கு கோரப்பட்டதாகவும் வீடு மாறும் போது தொலைந்ததாகக் காரணம் தெரிவிக்கப்பட்டதாகவும் அவர் சாட்சியமளித்தார்.

பத்தரமுல்லையிலுள்ள வீட்டிலிருந்து கொழும்பு 7இலுள்ள வீட்டுக்கு மாறும்போது, கடவுச்சீட்டு மற்றும் அடையாள அட்டை என்பன தொலைந்துள்ளன என, கறுவாத்தோட்டம் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளதாகவும் அந்த ஆவணம் பின்னர் தமக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார். 2012.11.01 அன்று விநியோகிக்கப்பட்ட அடையாள அட்டை தொடர்பான ஆவணங்களில் 2015.3.21ஆம் திகதி முத்திரை பொறிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் பிரதி சொலி சிட்டர் ஜெனரல் வினவினார்.

அதற்குப் பதிலளித்த சாட்சியாளர், ஒரு நாள் சேவையில் வழங்கப்படும் அடையாள அட்டை தொடர்பான ஆவணங்கள், வாகனம் மூலம், அன்றைய தினமே நுகேகொடையிலுள்ள தமது அலுவலகத்துக்கு அனுப்பப்படும் எனத் தெரிவித்த அவர், தபால் மூலம் அனுப்பப்பட்ட ஆவணங்களுக்கே முத்திரை பொறிக்கப்படும் எனவும் அந்த ஆவணங்கள் தபாலில் அனுப்பப்பட்டிருக்கலாம் எனவும் குறிப்பிட்டார்.

விமல் வீரவன்சவின் மனைவியான ஷஷி வீரவன்சவுக்கு, ஒருநாள் சேவையினூடாக அடையாள அட்டையைப் பெற்றுக் கொடுக்குமாறும், அது தொடர்பான ஆவணங்கள் பின்னர் தரப்படும் என, ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்தால் அனுப்பப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது எனவும் அதன் அடிப்படையிலேயே அடையாள அட்டை வழங்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

விமல் வீரவன்சவின் மகனான விபோதி வீரவன்ச மற்றும் மகள் ஆகியோரின் அடையாள அட்டைகளுக்காக விண்ணப்பிக்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்களும் மன்றில் சோதிக்கப்பட்டதுடன், மகனின் அடையாள அட்டைக்கு வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழில் தந்தையான விமல் வீரவன்சவின் பிறந்த ஆண்டும் தாயின் பெயரும் பிறந்த ஆண்டும் திருத்தப்பட்டுள்ளமை மன்றில் சுட்டிக்காட்டப்பட்டது. அவர்களின் மகளின் பிறப்புச் சான்றிதழில், தாயின் பிறந்த ஆண்டு மீண்டும் திருத்தப்பட்டுள்ளமை தொடர்பிலும் சுட்டிக்காட்டப்பட்டதுடன், முறைப்பாட்டாளரின் கேள்விகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டன.

பிரதிவாதியின் தரப்பில் குறுக்குக் கேள்விகளைக் கேட்பதற்கு அவகாசம்கோரியமைக்கு அமைய ஜூலை 31ஆம் திகதிக்கு திகதி குறிக்கப்பட்டது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள் – 122

## ஸ்ரீவியா என்னும் இனிப்புத்துளசி



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

நல்லதொரு இனிப்பான செய்தியுடன் உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். இந்த இனிப்பான செய்தி பல நிலைகளில் பல வடிவங்களில் எமக்கு பயன்படப் போகின்றது என்பதனை இங்கே பதிவு செய்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.


புனர்வாழ்வு அதிகாரசபையின் மக்களுக்கான தொழில் முயற்சியை ஊக்குவிக்கும் நோக்கில் இந்த தாவரம் அறிமுகமாக இருப்பினும் எமது பிரதேசத்திற்கு அவசியம் தேவையான மாற்றுப்பயிர்களுள் இதுவும் உள்ளடங்கும்.

ஸ்ரீவியா என்பது சூரியகாந்தி குடும்பப்பயிராகவும் இலைகளின் அதிகம் இனிப்பூட்டி உள்ள பயிராகவும் காணப்படுகின்றது.

இந்த சுவையூட்டியினால் நாம் பயன்படுத்தும் சீனியினளவை கணிசமான அளவில் கட்டுப்படுத்தலாம்.



## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 138





ஸ்ரீவியா என்னும் தாவரத்திற்கு தென்னமெரிக்கா தான் பிறப்பிடம்.

ஆனால் இது பாரிய அளவில் ஜப்பான், பிரேசில், சீனா இன்னும் பலநாடுகளில் பாரியளவில் வளர்க்கப்படுகின்றது.

இதனது பழுத்த இலையில் ஏறக்குறைய 200-300 மடங்கு சாதாரண சீனியைவிட இனிப்புத்தன்மை இருப்பதும் இந்த சுவையூட்டியினை பயன்படுத்தினால் நாம் அன்றாடம் பயன்படுத்தும் சீனியின் அளவை கணிசமானளவு குறைக்கவும் முடியும்.

மேலும் இந்தத் தாவரம் ஏறக்குறைய 3 வருடங்கள் தொடர்ச்சியான உற்பத்தியைத் தரவல்லதுடன் இதிலிருந்து முதல் நான்கு மாதத்திலிருந்தே இலைகளை அறுவடை செய்யமுடியும் என தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

ஸ்ரீவியாதாவரம் செடிவகையைச் சார்ந்ததுடன் இதுவொரு சூரியகாந்திகுடும்ப (Asteraceae) தாவரமாகும்.

இத்தாவரத்தின் வளர்ச்சிபற்றியும் எமது மண்ணில் இதனது பயிர்ச்செய்கை மற்றும் இதனை வளர்க்கும் போது செய்ய வேண்டியபயிர்ச் செய்கை முறைகள் பற்றியும் நாம் ஆய்வுரீதியாக அறிந்து கொள்ளவேண்டும்.

அதற்கும் மேலாக இதனது இனிப்புத் தன்மையின் முக்கிய செய்தியென்னவெனில் இதில் பூச்சிய கலோரி (Zero callorie) காணப்படுவதுதான்.

இதனால் இதனது இலைகளை சுவையூட்டியாக நீரிழிவு நோயாளர்கள் பயன்படுத்தமுடியும்.

அத்துடன் இரத்த அமுக்கத்தையும் குறைக்கும் தன்மையுடையதாக தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இந்ததாவரத்தை நாம் எமது பகுதியில் அறிமுகஞ்செய்வதற்கு பலவிதமாக நற்காரணங்கள் காணப்படினும் இத்தாவரத்தைப்பற்றி முழுவதுமாக அறிந்து இதனை அறிமுகப்படுத்துவது சிறந்தது.

எமது பிரதேசத்தில் அந்நிய தாவரமொன்றை அறிமுகம் செய்யும் போதுசுற்றுச்சூழல் அமைச்சினது (Ministry of Environment) அங்கமான உயிர்ப்பல்வகைமை (Biodiversity Secretariat) அலகினதும் வனவாசிகள் திணைக்களத்தினதும் (Wildlife Department) முறையான அனுமதி பெறப்படல் வேண்டும்.

மேலும் இத்தாவரத்தின் நன்மை தீமைகள் முழுவதுமாக அறியப்பட்டு மக்களுக்கு அதுபற்றி தெரிவிக்கப்படல் வேண்டும்.

ஸ்ரீவியா தாவரம் சூரியகாந்தி குடும்பத்தைச் சேர்ந்ததாகையால் இதனால் பலபயன்பாடுகள் சூரிய காந்தி செவ்வந்தி போன்றனவற்[illegible] பயன்பாடுகள் கிடைப்பதற்கு வாய்ப்புக்கள் உண்டு.

அதுபோல மூக்குத்திப்பூண்டு போல களையாகவேஅன்றி மருத்துவ குணமுள்ள மூலிகையாகவே இது அமையசாத்தியங்களுண்டு.

மேலும் இன்னும் ஒருபடி மேல் சென்று அவதானித்தால் சூரிய காந்தி குடும்பதாவரங்களுள் ஒன்றான பார்த்தீனியத்தின் வீரியம் இதற்குண்டானால் அது ஒரு காலத்தில் பாரியகளையாக உருப்பெறவும் வாய்ப்புண்டு.

ஆனால் எமக்கு நன்மை தரக்கூடியவாய்ப்புக்கள் அதிகமாக காணப்படுவதாலும் மக்களது சுகாதாரம் சார்ந்து பார்க்கும் போது பயன்பாடுகளே அதிகமாக இருப்பதாலும் இன்னும் மனிதருக்கு இதனால் நன்மைகளேஅதிகம் கிடைக்க வழியுண்டு என்பதனாலும் இப்பயிரைநாம் அறிமுகம் செய்வது நல்லதென்றே தோன்றுகின்றது.

மேலும் இனிப்புத்துளசியின் பயன்பாடு உணவு சார்ந்த தொழிற்றுறைக்கு அவசியமானதாக காணப்படும்.

மேலும் இதன் பயன்பாடு நீரிழிவு நோயாளர்களுக்கும் சீனியை அதிகம் பயன்படுத்துவதற்கான மாற்றுவழியாக காணப்படுவதனால் கரும்பு சீனியை இறக்குமதி செய்வதின் அளவினை கணிசமான அளவு குறைக்கவும் முடியும்.

இனிப்பு துளசியின் அறிமுகத்தினூடாக நாம் புகையிலைக்கு மாற்றுப் பயிராக சிந்திக்கவும் வாய்ப்புக்களுண்டு.

தற்போது அரசாங்கம் புகையிலைச் செய்கையை தடை செய்யும் நிலைக்குள் வந்திருக்கும் போது அதற்கு மாற்றீடாக இத்தாவரத்தை அதிகளவில் பயிர்ச்செய்து எமக்குத் தேவையானளவு சுவையூட்டியை நாம் உற்பத்தி செய்துகொள்ளமுடியும்.

இன்னும் இனிப்புதுளசி சிறந்த பயிராக ஜப்பான் பிரேசில் மற்றும் சீனாவில் பல கெக்டேயர்களில் பயிரிடப்படும் போது எமது பிரதேசத்தில் இதனை உற்பத்தி செய்து எமது அன்றாட உணவுகளில் இதனைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவே காணப்படுகின்றது.

உள்ளூரில் தயாரிக்கப்படும் மென்பானங்களில் இனிப்புச் சுவைக்காக சுவையூட்டியாக ஸ்ரீவியா என்னும் இனிப்பு துளசி பயன்படுமாக இருந்தால் எமது பிரதேசத்தில் நல்லதொரு தொழிற்றுறைக்கான மாற்றுப் பயிராகவும் தனிமனித சுகாதாரத்திற்கான சிறந்த பயிராகவும் இது அமைய வாய்ப்புக்கள் பலவுண்டு.

ஆய்வு முடிவுகள் நன்மை தருவனவாக அமைந்தால் நடைபெற்ற ஆய்வுகளின் அறிக்கை எமக்கு சாதகமாக அமையப் பெற்றால் நல்லதொரு தாவரத்தை நாம் பெற்றதாக அமையும்.

இதனது நன்மை தீமைகளைப் பொறுத்தே இத்தாவரத்தின் அறிமுகம் அமைதல் வேண்டும். இன்னும் இது பற்றி நாம் அறிந்து மக்களுக்கு தெரியப் படுத்துவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## பழனிச்சாமியின் முடிவுக்கு கட்டுப்பட மாட்டோம் தினகரன் ஆதரவு எம்.எல்.ஏக்கள் போர்க்கொடி



(சென்னை)

ஜனாதிபதி தேர்தலில் முதலமைச்சர் பழனிச்சாமி எடுத்துள்ள முடிவுக்கு கட்டுப் பட மாட்டோம என்று தினக ரன் ஆதரவு எம்.எல்.ஏ.க்கள் போர்க்கொடி உயர்த்தியுள் ளனர்.

ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியின் பதவிக்காலம் எதிர்வரும் ஜூலை 24 ஆம் திகதி முடிவதைத் தொடர்ந்து புதிய ஜனாதிபதியை தேர்வு செய்ய ஜூலை 17 ஆம் திகதி தேர்தல் நடைபெறவுள்ளது.

இத் தேர்தலில் ஆளும் பா.ஜ.க.சார்பில் உத்தர பிரதேசத்தைச் சேர்ந்த ராம்நாத் கோவிந்த் நிறுத்தப் பட்டுள்ளார்.

இந்த நிலையில் ஜனா திபதி தேர்தலில் பா.ஜ.க. வேட்பாளர் ராம்நாத் கோவி ந்தை ஆதரிக்க ஒருமனதாக முடிவு செய்யப்பட்டுள்ளதாக முதலமைச்சரும் அ.தி.மு.க. அம்மா அணியின் தலைமை நிலைய செயலாளருமான எடப்பாடி பழனிசாமி அறிவி த்துள்ளார். பிரதமர் மோடி வைத்த கோரிக்கையின் அடிப்படையில் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அறி விக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமியின் இந்த அதி காரபூர்வ அறிவிப்பை டி.டி. வி.தினகரன் ஆதரவு எம். எல்.ஏ.க்கள் 34 பேரும் ஏற் றுக் கொள்வார்களா? என்ப தில் கேள்விக்குறி எழுந்துள் ளது. கடந்த சில தினங்க ளாக எடப்பாடி பழனிச்சாமி மீது கடும் அதிருப்தியில் இருக்கும் அவர்கள், ஜனாதி பதி தேர்தலில் யாருக்கு வாக்களிப்பது என்பதை எங்கள் பொதுச் செயலாளர் சசிகலாதான் அறிவிப்பார் என்று கூறி வந்தனர்.

அ.தி.மு.க. கட்சி நிகழ்ச் சிகளான இப்தார் விருந்தை எடப்பாடி தலைமை ஏற்று நடத்தியதையும் அவர்கள் விரும்பவில்லை. எனவே அவர்கள் நேற்று முன்தினம் மாலை அ.தி.மு.க. அம்மா அணி சார்பில் ஏற்பாடு செய் யப்பட்டிருந்த இப்தார் விருந் தில் கலந்து கொள்ளாமல் புறக்கணித்தனர்.

அடுத்த கட்டமாக எம்.ஜி. ஆர். பிறந்த தின நூற்றா ண்டு விழாவையும் எடப்பாடி பழனிச்சாமி இம்மாத இறுதி யில் இருந்து நடத்தப்போவது அவர்களுக்கு பிடிக்கவில்லை. எனவே ஜனாதிபதி தேர்த லில் பா.ஜ.க. வேட்பாளரை ஆதரித்து எடப்பாடி பழனிச் சாமி வெளியிட்டுள்ள அறி விப்பை தினகரன் ஆதரவு எம்.எல்.ஏ.க்கள் ஏற்கமறுத்து போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

டி.டி.வி.தினகரன் ஆத ரவு எம்.எல்.ஏ.க்கள் 34 பேரும் தொடர்ந்து எடப்பா டியை எதிர்ப்பதால் கட்சி நிர் வாகத்திலும் குழப்பம் ஏற்பட் டுள்ளது. ஜனாதிபதி தேர்த லில் தினகரன் ஆதரவு எம்.எல்.ஏ.க்கள் 34 பேரும் யாருக்கு வாக்களிப்பார்கள் என்பதை பொறுத்து இக் குழப்பங்கள் தீருமா? அல் லது தீவிரமாகுமா? என்பது தெரிய வரும். (3-8)

## பிலிப் வீடு திரும்பினார்

(லண்டன்)

நோய்த்தொற்று காரண மாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பிரிட் டன் ராணியின் கணவர் பிலிப் சிகிச்சை முடிந்து வீடு திரும்பியுள்ளார்

பிரிட்டன் ராணி எலிசபத் தின் கணவரும் எடின்பரோ கோமகன் என்றழைக்கப்ப டும் அந்நாட்டின் இளவரச ருமான பிலிப்(வயது-96) இரு நாட்களுக்கு முன்னர் நோய்த்தொற்று காரணமாக வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டிருந்தார்.

இரண்டு நாட்கள் சிகிச் சைக்குப் பின் அவரது உடல நிலையில் நல்ல முன்னே ற்றம் ஏற்பட்டதைத் தொடர ந்து அவர் வைத்திய சாலை யிலிருந்து நேற்று முன்தி னம் வியாழக்கிழமை வீடு திரும்பினார் என்று பக்கிங் ஹாம் அரண்மனை வெளி யிட்ட அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது. (3-8)

## இந் பாகி

இ



(ஜம்மு)

இந்திய

வம் நடத்தி

கள் பலியா

பாகிஸ்தான்

மீது தொட

வழக்கமாக

மேலும்,

வாதிகளுக்

வரு கிறது.

இராணுவ

பட்டு வருகி

## ஜனாதிபதித்தேர்தலில் எதிர்க்கட்சி வேட்பாளராக மீரா குமார் போட்டி; 17 கட்சிகள் ஒருமனதாக தேர்வு



(டில்லி)

ஜனாதிபதி தேர்தலில் தே.ஜ.கூட்டணி வேட்பாளர் ராம்நாத் கோவிந்துக்கு எதி ராக எதிர்க்கட்சிகளின் வேட் பாளராக மக்களவை முன் னாள் சபாநாயகர் மீரா குமார் போட்டியிடுகிறார். அவரை, காங்கிரஸ் உட்பட 17 கட்சி கள் நேற்று முன்தி னம் ஒரு மனதாக தேர்வு செய்துள் ளன.

ஜனாதிபதிபிரணாப்முகர்ஜி யின் பதவிக் காலம் ஜூலை மாதம் 24 ஆம் திகதியுடன் முடிவடை யும் நிலையில் ஜனாதிபதி தேர்தல் ஜூலை மாதம் 17 ஆம் திகதி நடை பெறும் என தேர்தல் ஆணை யம் அறி வித்தது.

பீகார் ஆளுநராக இருந்த ராம்நாத்கோவிந்தை, ஜனாதி பதி வேட்பாளராக பா.ஜ.கூட் டணி அறிவித்தது. அவரை எதிர்க்கட்சிகள் ஆதரிக்க வேண்டும்என பா.ஜ. வேண்டு கோள் விடுத்திருந்தது. ஆனா லும் அவருக்கு எதிராக வேட் பாளரை நிறுத்து வோம் என எதிர்க்கட்சிகள் அறிவித்தன.

இதன்படி காங்கிரஸ் தலைவர் சோனியா தலைமை தாங்கிய இந்த கூட்டத்தில் கூட்டணிக் கட்சிகளின் தலை வர்களான சரத்பவார், மாயாவதி, மம்தா பானர்ஜி, காங்கிரஸ் மூத்த தலைவர் கள் குலாம் நபி ஆசாத், மல்லிகாஜுர்ன கார்கே, தி.மு.க. சார்பில் கனிமொழி ஆகியோர் உட்பட 17 கட்சிக ளின் தலைவர்கள் கலந்து கொண்டனர். மக்களவை முன்னாள் சபாநாயகர் மீரா குமாரை நிறுத்த காங்கிரஸ் விரும்பியது.

அம்பேத்கரின் பேரனும், முன்னாள் எம். பியுமான பிரகாஷ் அம்பேத் கரை நிறுத்த கம்யூனிஸ்ட் கட்சிகள் விரும்பின. மகாரா ஷ்ராவை சேர்ந்த முன்னாள மத்திய அமைச்சர் சுசில் குமார் ஷிண்டே மற்றும் மாநிலங்களவை எம்.பி. பால சந்திர முங்கேகர் ஆகியோ ரது பெயரை தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவார் தெரிவித்தார். மீரா குமாருக்கு பெரும்பாலா னோர் ஆதரவு தெரிவித்த தால் பின் அவர் ஒருமன தாக தேர்வு செய்யப்பட் டார்.

அதன்பின் பேட்டியளித்த காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, "ஜனாதிபதி தேர்த லில் மீரா குமாரை வேட்பா ளராக நிறுத்த நாங்கள் ஒருமனதாக முடிவு செய்து ள்ளோம்.

அவருக்கு இதர கட்சிகளும் ஆதரவு அளிக் கும் என நம்புகிறோம்" என்றார். ராம்நாத் கோவிந்த் தலித் என்பதால் அவரை ஆதரிப்போம் என கூறிய பகுஜன் சமாஜ் கட்சி, தற் போது அதை வாபஸ் பெற்று மீரா குமாரை ஆதரிப்பதாக தெரிவித்துள்ளது. இது குறித்து மாயாவதி அளித்த பேட்டியில், ராம்நாத் கோவிந்தை விட மீரா குமார் பிரபலமானவர், திறமை யானவர் என கூறியுள்ளார். தி.மு.க. எம்பி கனிமொழி கூறுகையில்,

இவரை தேர்வு செய்ததில் அனை வருக்கும் மகிழ் ச்சி தான். மேலும் மீராகுமார் அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தகுதி வாய் ந்த ஒரு வேட்பாளராக இருப்பதால் பா.ஜ. வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்த நடு நிலை கட்சிகள் அனைத்தும் மீரா குமாருக்கு ஆதரவு தரு வார்கள்" என்றார்.

இது தொடர்பாக பா.ஜ. செய்தி தொடர்பாளர் நரசிம்மராவ் கூறு கையில், "ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சிகளின் வேட்பாளராக மீரா குமாரை நிறுத்தி காங்கிரஸ் கட்சி அவரை பலிக்கடா ஆக்கி யுள்ளது. காங்கிரஸ் ஆட்சியில் இருக்கும் போது, அவர்களுக்கு மீரா குமார் தகுதியான நபராக தெரியவில்லை. தோல்வி நிச்சயம் என்பது தெரிந்ததும் மீரா குமாரை நிறுத்தி காங்கிரஸ் பலிக் கடா ஆக்கியுள்ளது என்றும் விமர்சித் துள்ளார். (3-8)

## அமெரிக்க - மெக்சிக்கோ எல்லையில் சூரியஒளித்தகடு பதித்த சுவர்

(வோஷிங்டன்)

மெக்சிக்கோ எல்லையில் புதிதாக கட்டப்படும் சுவரில் சூரியஒளி மின்சாரத் தகடு கள பதிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஆலோசனை செய்கிறார்.

கடந்த ஆண்டு நடந்த அமெரிக்க ஜனாதிபதி தேர்த லின் போது மெக்சிக்கோ எல் லையில் சுவர் கட்டப்படும் என டொனால்ட் ட்ரம்ப் அறி வித்தார்.

இதன் மூலம் மெக்சிக்கோ நாட்டினர் அமெரிக்காவில் நுழைந்து குடியேறுவதை தடுக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது. தேர்த லில் வெற்றி பெற்று ஜனாதி பதியானதும் மெக்சிக்கோ எல்லையில் சுவர் கட்டுவ தில் தீவிரமாக இருக்கிறார்.

சுமார் 2 ஆயிரம் மைல் தூரத்துக்கு சுவர் கட்ட குறை ந்தது ரூ.6500 கோடி (ஒரு பில்லியன் டொலர்) செலவா கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே இச்செலவை ஈடுகட் டும் வகையில் பயனுள்ள யோசனைகள் பொது மக்க ளிடம் இருந்து பெறப்பட்டது.

அதை தொடர்ந்து கட்டப் படும் சுவர்களில் சூரியஒளி தகடு பதித்து அதன் மூலம் மின்சாரம் பெற முடியும் என பொதுமக்களும் நிறுவனங் களும் ஆலோசனை கூறி இருந்தன.

இதன்மூலம் சுவரை ஒட்டியுள்ள மெக்சிக்கோ நாட்டின் நிறுவனங்கள், எரிபொருள் நிரப்பு நிலைய ங்கள் உள்ளிட்டவைகளு க்கு மின்சாரம் விற்பனை செய்ய முடியும் என்று கருதப்படுகிறது. (3-8)

## பாகிஸ்தா 11 பேர் பலி; 20.

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் தலிபான்களின் ஆதிக்கம் மிகுந்த பலுசிஸ்தான் மாகாணத்தில் நேற்று தீவிரவாதிகள் நடத்திய சக்திவாய்ந்த வெடிகுண்டு தாக்குதலில் நான்கு பொலிஸார் உட்பட 11 பேர் உடல் சிதறி உயிரிழந்துள்ள னர்.

பலுசிஸ்தான் மாகாணத்தின் தலைநகரான குவெட்டா நகரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு



## ந்திய எல்லைக்குள் நுழைந்து ாகிஸ்தான் இராணுவம் தாக்குதல்

## இரு இராணுவ வீரர்கள் பலி



ஜம்மு)

இந்திய எல்லைக்குள் நுழைந்து பாகிஸ்தான் இராணு நடத்திய திடீர் தாக்குதலில் இரு இராணுவ வீரர் பலியாகினர். இந்தியாவின் அண்டை நாடான ஸ்தான், எல் லையில் ஊடுருவல் செய்து இந்தியா தொடர்ந்து தாக்குதலை நடத்தி வரு வதை க்கமாக கொண் டுள்ளது.

மேலும், இந்தியாவில் தாக்குதலை நடத்தும் தீவிர ிகளுக்கு தேவையான உதவிகளையும் செய்து கிறது. இதனால் இந்திய எல் லையில் இருநாட்டு ணுவ வீரர்களும் எந்நேரமும் பாதுகாப்பில் ஈடு வருகின்ற னர்.

இந்நிலையில், பாகிஸ் தானின் எல்லை நடவடிக்கை குழுவினர் ஜம்மு-காஷ்மீர் மாநிலம் பூஞ்ச் செக்டாரில் நேற்று பிற்பகல் 2 மணிக்கு திடீரென ஊடுருவ முயன் றனர்.

அவர்கள் இந்திய எல் லையில் அரை கிலோ மீற்றர் தூரம் நுழைந்து இராணுவ முகாம்கள் இருக் கும் பகுதியை நோக்கி துப்பாக்கி சூடுநடத்தினர்.

அப்போது பாதுகாப்பு பணியில் இருந்த இந்திய இராணுவத்தினர், பாகிஸ்தான் படையினரை உள்ளே நுழைய விடாமல் தடுத்து பதில் தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் இந்திய இராணுவ வீரர்கள் 2 பேர் பலியாகினர்.

இது குறித்து இராணுவ அதிகாரிகள் கூறுகையில், கடந்த ஓராண்டில் பூஞ்ச் பகுதியில் அத்துமீறி நடந்த 3ஆவது தாக்குதல் இது. இருதரப்புக்கும் இடையே நடந்த துப்பாக்கி சூட்டில் 2 வீரர்கள் பலியாகினர். பாகி ஸ்தான் தரப்பில் ஒருவர் சுட்டு கொல்லப்பட்டார். தொடர்ந்து அப் பகுதியில் துப் பாக்கி சூடு நடந்து வருவ தால் பதற்றம் ஏற்பட்டுள்ளது என தெரிவித்தனர்.

இதேபோல், இந்திய - பாகிஸ்தான் எல்லையில் ஊடு ருவ முயன்ற பயங்கர வாதியை பலமுறை இந்திய இராணுவத்தினர் சுட்டுக் கொன்றுள்ளனர். (3-8)

## ஆப்கானிஸ்தானில் பயங்கரம் கார்க்குண்டு தாக்குதலில் 34 பேர் பலி





(லஷ்கர்கா)

ஆப் கானிஸ் தானில் வெடிகுண்டு நிரப்பிய கார், வங்கி முன் வெடித்து சிதறிய தில் பணம் எடுக்க வரிசை யில் நின்றிருந்த இராணுவ வீரர்கள் உடபட 34 பேர் பலி யாகினர்.

ஆப்கானிஸ்தான் நாட் டில் உள்ள ஹல்மாண்ட் மாகாணத் தலைநகர் லஷ் கர்காவிலுள்ள வங்கி ஒன் றில் பாதுகாப்பு படை வீரர்கள் தங்களது சம்பள பணத்தை எடுப்பதற்காக நேற்று முன்தி னம் நீண்ட வரிசையில் காத் திருந்தனர். அப்போது அங்கு வெடிகுண்டு நிரப்பிய கார் ஒன்று வெடித்து சிதறியது. இதனால் பொதுமக்கள் அலறி யடித்து ஓட்டம் பிடித்தனர்.

இந்த தாக்குதலில் பாது காப்பு படை வீரர்கள், பொலி ஸார் மற்றும் பொதுமக்கள் என மொத்தம் 34 பேர் கொல்லப்பட்டனர். 50 பேர் காயம் அடைந்தனர். இத் தாக்குதலுக்கு இதுவரை எந்த தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. முன்பு இதேபோன்று வங்கிகளை குறிவைத்து தலிபான்கள் மற்றும் ஐ.எஸ். தீவிரவாதி கள் தாக்குதல் நடத்தியுள்ள தால் அவர்கள் தான் இந்த தாக்குதலை நடத்தியிருக கலாம் என சந்தேகிக்கப்படு கிறது. கடந்த மாதம் கார டாஸ் நகரில் வங்கியை குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் 3 பேர் கொல்லப் பட்டனர். (3-8)

# செயற்கைக் கோள்களுடன் வெற்றிகரமாக விண்ணில் நிலை நிறுத்தப்பட்ட ரொக்கெட்



(சென்னை)

30 நனோ கோள்கள் மற்றும் 'கார்ட டோசாட்- 2இ' செயற்கைகோள் உடன் செலுத்தப்பட்ட பி.எஸ்.எல். வி. சி-38 ரொக்கெட் வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தப்பட்டது.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோ செயற்கை கோள் களையும், அவற்றை விண் ணில் ஏவுவதற்காக பி.எஸ். எல்.வி.மற்றும் ஜி.எஸ். எல்.வி. ரொக்கெட்டுகளை யும் தயாரித்து வருகிறது.

பூமியை கண்காணிப் பது, தொலையுணர்வு தக வல்களை பெறுவது, கடல் சார் ஆராய்ச்சி, தகவல் தொடர்பு மற்றும் வானிலை பயன்பாடு உள்ளிட்ட பல் வேறு பணிகளுக்காக செயற் கைகோள்களை இஸ்ரோ நிறுவனம்வடிவமைத்துவெற் கரமாக விண்வெளிக்கு செலுத்தி வருகிறது.

அந்தவகையில்பூமிகண்கா ணிப்பு மற்றும் தொலையு ணர்வுக்காக 'கார்ட்டோசாட்' வகை செயற்கைகோள்கள் விண்ணில் செலுத்தப்படு கின்றன.

தற்போது 712 கிலோ எடை கொண்ட 7ஆவது கார்ட்டோ சாட்-2இ என்ற செயற்கை கோள் வடிவமைக்கப்பட்டுள் ளது.

பி.எஸ்.எல்.வி. சி-38 ரொக்கெட் மூலம் கார்ட்டோ சாட்- 2இ செயற்கைகோள் மற்றும் 30 நனோ செயற் கைகோள் நேற்று வெள்ளிக் கிழமை காலை 9.29 மணிக்கு விண்ணில் ஏவப்பட்டுள்ளது.

ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ்தவான் விண் வெளி ஆய்வு மையத்தில் உள்ள முதலாவது ஏவுதளத் தில் இதற்கான நடவடிக்கை நேற்று முன்தினம் காலை 5.29 மணிக்கு ஆரம்பமாகி யது.

மொத்தமுள்ள 30 செயற் கைகோள்களில் 29 செயற் கைகோள் அமெரிக்கா உள் ளிட்ட 14 வெளிநாடுகளில் தயா ரானவை. ஒன்று மட்டும் இந்தியாவிலேயே தயாரிக் கப்பட்டது.

• இதனையடுத்து 23 நிமி டங்கள் கழித்து 31 செயற்கை கோள்களுடன் செலுத்தப்பட்ட பி.எஸ்.எல்.வி. சி-38 ரொக் கெட் வெற்றிகரமாக பூமி யின் சுற்றுவட்ட பாதையில் நிலைநிறுத்தப் பட்டது.

30 நனோ கோள்கள் மற்றும் கார்ட்டோசாட்-2இ செயற்கைகோள் உடன்செலுத் தப்பட்ட பி.எஸ். எல்.வி. சி-38 ரொக்கெட் வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தப் பட்டது. (3-8)

## கமரூனில் தற்கொலைப்படை தாக்குதல்

## 6 பேர் பலி

(யாவுண்டே)

கமரூனில் போகோ ஹராம் இயக்கத்தின் தற் கொலைப்படையினர் அடுத் தடுத்து 2 குண்டுகளை வெடிக்கச்செய்தனர். இதில் அப்பாவி மக்கள் 6 பேர் சிக்கி பலியாகியுள்ளனர்.

நைஜீரியா, நைஜர் நாடு களில்ஒரு குறிப்பிட்ட மத அடிப படையிலான அரசை நிறு வும் நோக்கத்துடன் போகோ ஹராம் இயக்கத்தினர் செயற பட்டு வருகின்றனர். பயங் கரவாத செயல்களில் ஈடு பட்டு வரும் இவ் இயக்கத்தி னர் ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான கமரூனிலும் காலூன்றி அவ்வப்போது தாக குதல்கள் நடத்தி வருகின்ற னர்.

இந்நிலையில், கொலோ பட்டா என்ற இடத்தில் கடந்த புதன்கிழமை போகோஹ ராம் இயக்கத்தின் தற்கொலைப்படையினர் அடுத்தடு த்து 2 குண்டுகளை வெடிக் கச்செய்தனர்.

பயங்கர சத் தத்துடன் குண்டுகள் வெடித்து சிதறிய தில், அப்பாவி மக்கள் 6 பேர் சிக்கி பலியாகினர்.

குண்டுவெடிப்புகளை நடத் திய பயங்கரவாதிகள் 2 பேரும் உடல்சிதறி உயிரி ழுந்தனர்.

கமரூன் பாதுகா ப்பு படை வட்டாரங்கள் இந்த குண்டுவெடிப்பையும் அதில ஏற்பட்டுள்ள உயிரிழப்பை யும் உறுதி செய்துள்ளன.

இம்மாதத்தின் தொடக் கத்தில் கொலோபட்டாவில் போகாஹராம் பயங்கரவாதி கள் நடத்திய தாக்குதலில் இராணுவ வீரர் ஒருவர் உயிரிழுந்ததும் கடந்த சில நாட்களுக்கு முன் கொலோ பட்டா அருகில் லிமானி என்ற இடத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் 2 அப்பாவி மக்கள்பலியானதும் நினைவு கூரத்தக்கது. (3-8)

## தானில் குண்டு வெடிப்பு

## 20 பேர் காயம்!



மையப்பகுதியில் உள்ள பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் அலுவலகத் தின் அருகே வந்த சந்தேகத்திற்குரிய காரை பொலிஸார் தடுத்து நிறுத் தியபோது இக்குண்டுவெடிப்பு நிகழ் ந்ததாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வருகின்றன.

தாக்குதலில் நான்கு பொலிஸார் உட்பட 11 பேர் உடல் சிதறி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். பாது காப்பு படையைச் சேர்ந்த 9 பேர் உட்பட 20 பேர் படுகாய ங்களுடன் வைத்தியசாலை களில் அனுமதிக்கப்பட்டுள் ளனர். அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிட மாக இருப்பதால் இந்த தாக் குதலில் பலி எண் ணிக்கை அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது. (3-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையான பிரச்சினைகளை மூடிமறைக்க இனவாதச் செயற்பாடுகள் முன்னெடுப்பு

## ஜே.வி.பியின் தலைவர் அநுர குற்றச்சாட்டு



(கொழும்பு)

**உண்மையான பிரச்சினைகளை மூடிமறைக்க பல்வேறு இனவாதச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன என ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.**

கொழும்பு - விஹார மகா தேவி பூங்காவில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அத்துடன், ஊழல் மோசடிகள், பொருளாதாரக் கொள்ளை மற்றும் இனவாத செயற்பாடுகளுக்கு எதிராக நாட்டில் பாரிய மக்கள் செயற்பாடொன்றை ஆரம்பிக்க வேண்டும் என அநுரகுமார திஸாநாயக்க மேலும்தெரிவித்துள்ளார். (இ-7)

# வன்முறை சம்பவங்களை எதிர்கொண்டபோதும் பொறுமை காத்த முஸ்லிம் மக்களுக்கு நன்றி

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

ரம்ழான் மாதத்தின் உண்மையான அர்த்தத்தை வெளிப் படுத்தும் வகையில் தம்மீதான வன்முறைகளின் போது முஸ்லிம் மக்கள் பொறுமை காத்ததற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நன்றி தெரிவித்தார்.

பிரதமரின் உத்தியோக பூர்வ வாசஸ்தலமான அலரி மாளிகையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற இப்தார் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரம்ழான் மாதத்தை நாம் பக்தி, பொறுமை மற்றும் கருணையுடன் கடக்கின்றோம். குறிப்பாக தற்போதைய ரம்ழான் காலத்தில் தம்மை ஏசினாலும் தம்மீது தாக்குதல் நடத்தினாலும் முஸ்லிம் மக்களின் பொறுமைக்காக நான் நன்றி கூறுகின்றேன்.

விசேடமாக ரம்ழான் பண்டிகையின் உண்மையான அர்த்தம் இதனால் வெளிப் படுகின்றது.

அத்துடன் நாட்டில் ஏற்பட்ட அனர்த்தத்தின் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கு இஸ்லாமியர்கள் தமது பண்டிகையினையும் கொண்டாடாமல் பணத்தை வழங்கி வைத்தார்கள்.

இலங்கையர்களுக்காகவே அந்தப் பணத்தை வழங்கினார்கள். பாதிக்கப்பட்ட கிராமங்களில் அதிகமாக சிங்கள மக்களே வசித்தார்கள். எனவே அதற்கும் இங்கு நான் நன்றி கூற வேண்டும்.

இவ்வாறிருக்கின்ற போது ஒரு மதம் உருவாகியுள்ளதை அந்த மதத்தைப் பின்பற்றுபவர்கள் மட்டுமன்றி அதன் தோற்றத்தை நம்புகின்றவர்களும் ஏற்றுக்கொள்வார்கள். அதனால் மதம் என்பது நல்லிணக்கத்தின் ஒரு பகுதியாகின்றது.

நாம் இஸ்லாம் மற்றும் புத்த தர்மத்தால் மனிதர்களின் மனங்களை சுகப் படுத்தவே முனைகின்றோம். அதனால் உலக மக்களை சுகப்படுத்தவும் எதிர்பார்க்கின்றோம் அதனையே நபிகள் மற்றுமொருவரை மனதளவிலும் உடல் ரீதியிலும் துன்புறுத்தாமல் இருக்கின்றவரையே அல்லாஹ் ஏற்றுக் கொள்வார் என்று கூறியுள்ளார். அதேபோல் புத்த மதத்திலும் மற்றவருக்கு நெருக்கடி கொடுக்காமலும் உயிரை பறிக்காமலும் இருக்க வேண்டும்என்ற போதனைகள் உள்ளன. அதனால்நாங்கள்எல்லா மதத்தையும் மதிக்கின்றோம்.

இஸ்லாமில் ஒரு கூற்று உள்ளது. (உங்கள் மதம் உங்களுக்கு. எமது மதம் எமக்கு என்பர்) அதற்கமையவே இன்று நாங்கள் செயற்படுகின்றோம். அதனையே அசோக மன்னனும் நாம் சகல மதங்களையும் மதிக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

அதனால் மனதில் குரோதங்களை கொண்டவர்கள் புத்த மதத்தின் போர்வையில் மறைந்து பாதுகாப்பு பெற முடியாது.

,அவ்வாறானவர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்கவும் முடியாது. இன்று சகல மக்களும்இணைந்துசுவாழ்வை உருவாக்க முனைகின்றார்கள்.அதற்காகவே சட்டத்தின் ஆட்சியை வலுப்படுத்துகின்றோம். அதனால் எந்த ஒரு நபரும் சட்டத்திற்கு அப்பால் சென்று செயற்பட முடியாது. எனவே சகலரும் சட்டத்தை மதித்து செயற்பட வேண்டியது அவசியமாகும். இன்று நாட்டு மக்கள் ஒன்றிணைந்து கொண்டிருக்கின்றார்கள்.

எனவே முஸ்லிம் மக்கள் இந்த நாட்டில் சமாதானத்தை உண்டுபண்ணமேற்கொண்ட முனைப்புக்களுக்கும் நன்றி கூற வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பௌத்த சமய சூழலில் சிறந்த சமூகத்தை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்படும்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



(கொழும்பு)

ஏனைய சமய கோட்பாடுகளின் உரிய இடத்தை பாதுகாத்துக்கொண்டு பௌத்த சமய சூழலில் சிறந்த சமூகத்தை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பிற்பகல் பொலனறுவை, லக்ஸ உயன, வேலுவன விஜே ராம விகாரையில் புதிய மதகுருமாருக்கான வதிவிடத்தை சாசனத்துக்கு அர்ப்பணிக்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த சமூகத்தின் பல பாதகமான பிரச்சினைகளுக்கு சமய கோட்பாடுகளின் அடிப்படையில் தீர்வு காண வேண்டுமென தெரிவித்த ஜனாதிபதி சிறந்த சமூகத்தைக் உருவாக்குவதற்காக தற்போதைய இளம் தலைமுறையினர் மீண்டும் சமய தலங்களை நெருங்க வேண்டிய தேவையையும் சுட்டிக்காட்டினார். (இ-3)

## இன்று ஒரு தகவல்

### பிறர் தயவில் சில அனுபவங்கள்

ஒரு திருச்சி மாணவர், தான் ஒரு கல்லூரியில் மாணவச் செயலராக இருப்பதாகவும், தான் ஏற்பாடு செய்த சென்னையைச் சேர்ந்த பேச்சாளர் முதலில் ஒப்புக் கொண்டு விட்டுப் பிறகு திடீரெனக் காலை வாரிவிட்டதாகவும், மாற்றுப் பேச்சாளரை ஏற்பாடு செய்து விட்டுத் திருச்சிக்குத் திரும்பிக் கொண்டிருப்பதாகவும் சொல்லியதுடன், செயலர் பிழைப்பு நாய்ப் பிழைப்பாக இருக்கிறது என்றும் சொல்லிச் சலித்துக் கொண்டார்.

நீங்கள் இந்தக் கோணத்தில் சிந்திக்கவே கூடாது. வாழ்க்கையில் இத்தகைய அனுபவங்களைப் பெறுவதற்கு எல்லோருக்குமே வாய்ப்புக் கிடைப்பதில்லை. ஒரு கல்லூரியின் பிரதிநிதியாகச் சென்னைக்கு இருமுறை பயணம் மேற்கொள்வதும்,நீங்கள் குறிப்பிட்ட இரு இலக்கியப் பேச்சாளர்களுடன் நெருங்கிப் பழகச் சந்தர்ப்பம் வாய்த்தது எல்லோருக்கும் கிடைத்து விடக் கூடியவையா என்ன? என்றேன்.

உங்கள் செயலர் பொறுப்பையும் படிப்பையும் முடித்து நீங்களே புதிய மனிதராக வெளியேறுவீர்கள். ஒரு நிகழ்ச்சியைச் செம்மையாக ஏற்பாடு செய்வது எப்படி என்பதில் இனி நீங்கள் வல்லவராகத் திகழ்வீர்கள். கடைசி நிமிடக் கால்வாரல்களை அருமையாகச் சமாளிப்பீர்கள். ஒரு சக்தி வாய்ந்த மாணவர் கூட்டத்தை நடத்திச் செல்வது எப்படி என்பதிலும், நிர்வாகத்திற்கும், மாணவர்களுக்கும் இடையில் உள்ள பிரச்சினைகளை நளினமாகக் கையாள்வது எப்படி என்கிற விடயத்திலும் நீங்கள் தெளிவாக இருக்கின்றீர்கள்.

இவையெல்லாம் சேர்ந்து உங்கள் வருங்காலத்திற்கு எவ்வளவு உதவும் தெரியுமா? புத்தகங்களை மட்டுமல்ல, பல அனுபவப் பாடங்களையும் நீங்கள் கல்லூரி நாட்களில் படித்துக் கொண்டிருக்கிறீர்கள். எனவே செயலராக இருப்பதற்குப் பெருமைப்பட வேண்டும். இந்த அத்தனை பெருமையும் கல்லூரியின் தயவில்? என்று என் பிரசங்கத்தை நிறைவு செய்தேன். அவ்வளவு தான் அந்த மாணவருக்குப் பெருமை பிடிபடவில்லை.

இப்படி இன்னொரு சம்பவம் ஒருவர், தன் நிறுவனத்திற்காக நேரங்காலம் பார்க்காமல் பாடுபடுவதாகவும், ஆனால் கூடுதல் வருமானமோ –ஏன் ஒரு பாராட்டோ இல்லை என்றும் இதனால் வேலையை விட்டுவிடப் போவதாகவும் சொன்னார்.

நான் அவர் பார்வையில் உள்ள கோளாறை இனம் பிரித்துச் சொன்னேன்.

உங்கள் நிறுவனத்தின் தயவில் உள்ள எத்தகைய மோசமான சூழ்நிலையையும் சமாளிக்கும் திறனையும் நிர்வாகத் திறமையையும் கற்றுக் கொண்டிருக்கிறீர்கள். இது உங்கள் சொந்த வாழ்கைக்குப் பயன்படும். உங்கள் அலுவலக அனுபவத்தைத் தனிப்பட்ட வாழ்வில் பயன் படுத்தி வெற்றி பெறுவீர்கள். அது மட்டுமல்ல , உங்களுக்குக் கீழ் 20 பேர் வரை வேலை செய்கிறார்கள்?, நீங்கள் சொல்வதை கேட்கிறார்கள். இதை எல்லாம் விட்டு விட்டு தெருவில் அலைவேன் என்று ஏன் அடம் பிடிக்கிறார்கள் என்று கேட்டேன்? உங்கள் எதிர்பார்ப்பை வெளிப் படையாகச் சொல்லிப் பாருங்கள். உங்கள் உழைப்பும் ஈடுபாடும் நீங்கள் சொல்லுமளவிற்கு உண்மையானவையாக இருக்குமானால் நிச்சயம் பலன் இருக்கும்! என்றேன்.

பிறர் தயவில் கிடைக்கும் முறையான அனுபவங்களைப் பெறத் தவறுகிறவர்கள் வாழ்வின் இனிமையை அறியாதவர்கள்!

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் சாயி நிலைய செயற்பாடுகள்






ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தின் பொன்விழா ஆண்டை முன்னிட்டு இக்கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.

1. ஆன்மீகம்

யாழ்ப்பாணம் சத்திய சாயி நிலையத்தில் தினசரி பிரார்த்தனை, வேதபாராயணம், பஜனை, ஸ்ரீருத்ர சாதனை, காயத்திரி சாதனை, தியானப் பயிற்சி, போயா சாதனை, அகண்ட பஜனை, இந்துப்பண்டிகைகள், புத்த பூர்ணிமா, கிறிஸ்மஸ், இஸ்லாம் மதநிகழ்வுகள் என்பன இடம் பெற்று வருகின்றன. மேலும் பிரசாந்தி நிலைய நிகழ்வுகளாக ஆராதனா மஹோற்சவம், ஈஸ்வரம்மா தினம், பகவான் பாபாவின் அவதார தினம், சீரடி சாயிபாபா அவதார தினம், ஸ்ரீமத்பாகவத படனம், தபோவனம் வாசிப்பு. கல்வி வட்டம் போன்ற நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

2. கல்வி

பாலவிகாஷ் வகுப்புகள்

சத்திய சாயி பாலவிகாஸ் கல்வித்திட்டம் இலங்கையில் 1971 ஆம் ஆண்டு அறிமுகம்செய்யப்பட்டது. ஆரம்பத்தில் திருமதி சிவபாக்கியம் நடராசா (நடா அன்ரி) அவர்களி னால் அவரின் இல்லத்திலே ஆரம்பிக்கப்பட்டது. நிலைய மண்டபம் ஓரளவு அமைக்கப்பட்ட நிலையில் 1977 ஆம்ஆண்டு முதல்1979 ஆம்ஆண்டு வரை ஞானசேகரம் ஐயாவின் வழிகாட்டலில் ஆன்மீக சாதனைகள், குருமார் பயிற்சி முகாம்கள் என்பன சிறப்பாக நடத்தப்பட்டது. அவர் வாழ்க்கையில் சுவாமி சொன்னபடி வாழ்ந்த முன்னுதாரணமானவர். சராசரியாக 50 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றார்கள். பாலவிகாஸ் மாணவர்களால் சிவராத்திரி, குருபூர்ணிமா, ஈஸ்வரம்மா தினம், நவராத்திரி தினம், பகவான் பிறந்தநாள், போன்ற தினங்களில் பஜனைகளும், குருபூர்ணிமா, ஈஸ்வரம்மா தினம், கிறிஸ்மஸ், ஆராதனா மஹோற்சவம் ஆகிய நிகழ்வுகளில் கலை நிகழ்வுகளும் நடத்தப்பட்டு வருகிறது.

அந்த காலத்தில் வங்கிகள் என்று பெரிதாக இல்லை. அதுவும் இலகுவில் வங்கிகளில் கணக்குகளை திறந்து கொள்ள முடியாது இதனால் பாலவிகாஸ் மாணவர்களுக்கு நடத்தப்பட்ட பேச்சு, பஜனை, எழுத்து பரீட்சை போட்டிகளில் சித்தி எய்திய மாணவர்களுக்கு சேமிப்பு பழக்கத்தை தூண்டி அதன் மூலம் எதிர்காலச் சேவைச் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்ற நோக்கோடு தேசிய சேமிப்பு வங்கியில் வங்கி கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டு அவர்களின் பரீட்சை நிலைகளுக்கேற்ற வகையில் 100 ரூபா, 75 ரூபா, 50 ரூபா என்றவாறு பணம் வைப்பிலிட்டு வழங்கப்பட்டது. அதே வேளை அன்றிலிருந்து இன்று வரை சுவாமியின் வாஹினி தொடர்கள், நீதிக் கதைகள், போன்ற பயன்தரு புத்தகங்களும் பரிசாக வழங்கப்பட்டு வருகிறது.

நிலைய பாலவிகாஸ் மாணவர்களின் கண்காட்சி ஒன்று 2015 ஆம் ஆண்டு செப்டம்பர் 7ஆம் 8 ஆம் திகதிகளில் நிலையத்தில் நடத்தப்பட்டது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழ்நாடு மாநில தலைவராக இருந்த கிருஸ்ணமூர்த்தி அவர்கள் கலந்து சிறப்பித்தார். பாலவிகாஸ் கல்வியைக் கற்ற ஏராளமான மாணவர்கள் சுவாமியின் அன்பின் கருணையால் இன்று வாழ்வில் உயர்ந்து நல்ல நிலையில் சுவாமியின் சிந்தனையுடன் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். சிலர் வெளிநாடுகளில் வசிக்கிறார்கள். பலர் உள்நாட்டிலேயே வசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

சத்திய சாயி மனித மேம்பாட்டுக் கல்வி

1990 இல் பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் (நந்தி) அவர்கள் நிலையத்துடன் இணைந்து கொண்டார். அவர் மனித மேம்பாட்டுக் கல்வி பற்றிய எண்ணக்கருவை பாடசாலை ஆசிரியர்களிடையே பரப்புவதில் பாரிய பங்காற்றியவர்.

அகில உலக இளைஞர்மாநாட்டையொட்டி தன்னலமற்ற சேவைப் பணிக்காக தெரிவு செய்யப்பட்ட பொன்னம்மா கிராமத்தில் ஆரம்ப கட்டகள ஆய்வின் பின் அங்கு வசிக்கும் இளம்சிறார்களுக்கு சத்திய சாயி மனித மேம்பாட்டு கல்வியின் தேவை உணரப்பட்டதால் 2007 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் 40 சிறுவர்கள் இக்கல்வித்திட்டத்தில் இணைந்து கொண்டார்கள். இவர்களுக்கு கிராமத்திலேயே ஆரம்ப காலங்களில் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. பின்னர் அவர்களை நிலையங்களுக்கு வரவழைத்து புதன் மற்றும் சனிக்கிழமைகளில் நடத்தப்பட்டு வருகிறது. மூன்று மாதத்திற்கு ஒரு முறை பெற்றோருட னான சந்திப்பும் இடம்பெற்று வருகிறது. இதன் போது மாணவர்களின் ஒழுக்கம் தொடர்பாக பெற்றோர்களின் கருத்துக்கள் கேட்டறியப்படுவதுடன் அவர்களுக்கு தேவையான கல்வி உதவிகளும் வழங்கப்பட்டு வருகிறது. வருடத்திற்கு ஒருதடவை அநேகமாக சுவாமியின் அவதார தினத்தையொட்டி அவர்களுக்கு புத்தாடைகள் வழங்கப்பட்டு வருகின்றது. ஈஸ்வரம்மா தினமன்று அவர்களையும்இணைத்து திறனாய்வு மேற்கொள்ளப்பட்டு பரிசில்களும் ஊக்குவிப்புக்களும் வழங்கப்பட்டு வருகின்றது. இச்சேவைப் பணி இளைஞர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாரியம்மன் கிராமம் இதே நிலையில் இனங்காணப்பட்டு அம் மாணவர்களும் இணைக்கப்பட்டு இச் சேவை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதேபோல் திருநெல்வேலி பாரதிபுரம் கிராமத்தில் மகளிர் பிரிவால் 2014 ஆம் ஆண்டு முதல் இச்சேவை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 5.00 மணிக்கு பாரதிபுர கிராமத்தில் இல்ல பஜனை ஒழுங்கு செய்யப்பட்டு கிராம மக்களின் இல்லங்களில் இடம் பெற்று வருகிறது.

இம் மாணவர்களின் நிகழ்வுகள் ஈஸ்வரம்மா தினம் மற்றும் பாலவிகாஸ் தினம் ஆகியவற்றில் இடம் பெற்று வருகிறது.

3. சேவை

வயோதிபர் காப்பகம், ஆதரவற்றோர் இல்லம், உணவு வழங்கல், மயான சுத்திகரிப்பு , கோயில் சிரமதானம் , கான்சர் நோயாளிகள் விடுதிச் சேவை, சூறாவளி (1978) நிவாரணம், வெள்ள நிவாரணம் (2010) போன்ற சேவைகள் ஆரம்பத்தில் இடம்பெற்று வந்தன. நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தம் காரணமாக பாதிப்படைந்த ஏராளமானோர் யாழ்ப்பாண குடாநாட்டில் இருந்தமையால் சேவையின் வடிவத்தையும் அவர்களுக்கு சாதகமாக மாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது. அதன்படி வாழ்வாதார மேம்பாடுகள் தொடர்பிலான சேவைத் திட்டங்களாக சுயதொழில் புரிவதற்கு உபகரணங்களை வழங்குதல், சுயதொழில் வழிகாட்டுதல் என்பன உள்ளடங்கும், நாட்டின் சூழ்நிலையால் வீடுகளை இழந்தோர் பலர் ஆயினும் அரச உதவிகள் பெற்றுக் கொள்ள முடியாத சில குடும்பங்கள் இருந்தன அவை இனங்காணப்பட்டு வீடமைக்கும்சேவை வடபிராந்திய இணைப்புக் குழுவின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டன. தற்காலிக கொட்டில் அமைத்தல் என்பனவும் மேற்கொள்ளப்பட்டது. வடபிராந்திய இணைப்புக் குழுவின் சேவைப்பகுதியால் மேற் கொள்ளப்பட்ட அராலி கட்டைக் காடு கிராமத்தின் தேவைகள் தொடர்பிலும் நிலைய இளைஞர், மகளிர் அணிகள் கணிசமான அளவில் சேவைப் பணிகளில் ஈடுபட்டது.

குடாநாட்டில் ஏற்பட்ட நிசா புயல் வெள்ள அனர்த்தத்தின் போதும் அவர்கள் தங்கி இருந்த இடங்களுக்குச் சென்று சமைத்த உணவுகள், உலர் உணவுகள் என்பன சில வாரங்களுக்கு வழங்கப்பட்டன.

முஸ்லீம் மக்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்து மீளக் குடியர்த்தப்பட்ட காலத்தில் அவர்களின் இருப்பிடங்களுக்குச்சென்று அவர்களின் தேவை தொடர்பில் கேட்டறிந்து அதனை ஓரள வேனும் தீர்க்க முயற்சி செய்யப்பட்டது. ஒஸ்மானியா கல்லூரியில் சிரமதானம், அங்கு கற்கும் மாணவர்களுக்கு சப்பாத்துக்கள் என்பனவும் வழங்கப்பட்டன.

நாட்டில் ஏற்பட்ட சிக்கின்குனியா காய்ச்சல் காலத்தில் பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவியது. இக்காலகட்டத்தில் சத்துமா தயாரிக்கும் பணி நிலையத்தில் வைத்தே மேற்கொள்ளப்பட்டது. இக்காலத்தில் சுமார் 3 மாதங்களுக்கு மேல் வாரத்திற்கு இரண்டு அல்லது மூன்று தடவைகள் கிராமங்களில் மருத்துவ முகாம் மேற்கொள்ளப்பட்டது. இக் காலத்தில் மருத்துவ தொண்டர்கள் சலிப்பின்றி ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

மாதாந்தம் நடத்தப்பட்ட மருத்துவ முகாம்கள் குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா போன்ற மாவட்டங்களில் இவை முன்னெடுக்கப்பட்டன. இவ்வாறு மேற்கொள்ளப்படும் மருத்துவ முகாம்களில் இனங்காணப்பட்ட வறிய குடும்பங்களை இனங்கண்டு அவர்களுக்கு வைத்தியசாலை மூலம் கண் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2016/2017 காலப்பகுதியில் 83 நோயாளர்களுக்கு கண் சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. வைத்தியசாலைக்கு வருவதற்கும் திரும்பி வீடு செல்வதற்கும் அநேகமாக இலவச போக்குவரத்து வசதிகளும் செய்து வழங்கப்படுகிறது. இவர்கள் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டு சிற்றுண்டி, தேநீர் சில வேளைகளில் மதிய உணவு வழங்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள்.

பின்னர் சிகிச்சை முடிந்ததும் அவர்கள் மீளவும் நிலையத்திற்கு அழைக்கப்பட்டு இதே போன்று சிற்றுண்டி, மதியபோசனம் என்பன வழங்கப்பட்டு மீளவும் அவர்களின் இடங்களுக்கு அனுப்பிவைக்கப்படுவார்கள். இன்னுமொரு தொகுதி நோயாளர்களுக்கு இவ்வாண்டு நிறைவடைவதற்குள் கண் சத்திர சிகிச்சைகள் மேற் கொள்ளப்படவுள்ளது. மருத்துவ முகாம்களில் வழங்குவதற்காக 1000 பார்வைக் கண்ணாடிகள் கொள்வனவு செய்யப்பட்டு அவை தகுந்த வைத்தியர்களினால் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றது.

பொன்விழாமலர்க்குழு
யாழ்.சத்தியசாயி நிலையம்

# போயாவுக்கு முதல்நாள் மதுவிற்பனை அதிகம்

## மங்கள சமரவீர தகவல்



(கொழும்பு)

உடலுக்கு பாரியளவு தீங்கிழைக்காத, பியர் மற்றும் வைன் போன்றவற்றை, பருகுவதற்கான சந்தர்ப்பத்தைக் கூட்டவேண்டும். இல்லையேல், செறிவு கூடிய மதுபானங்களைப் பருகுவதும், சட்டவிரோதமான கசிப்பைப் பருகுவதும் அதிகரித்து விடும் என்று குறிப்பிட்ட நிதியமைச்சர் மங்கள சமரவீர போயாவுக்கு முதல்நாளன்றே மதுவிற்பனை அதிகரித்துள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் மதுவரி கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் களைச் சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், மதுவகைகளுக்கான கட்டணங்களையும் வரிகளையும் அதிகரிக்க சட்டவிரோத மது பாவனை அதிகரித்துகொண்டே செல்கின்றது. கசிப்பு பருகுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. நாட்டில் 61 சதவீதமான கசிப்புப் பாவனையாளர்கள் உள்ளனர்.

கசிப்பு பயன்பாடு, வர்த்தகம் மற்றும் உற்பத்தி ஆகியன அதிகரித்துள்ளன. போயாவுக்கு முதல்நாளன்று, மதுபான வகைகளின் விற்பனை அதிகரித்துள்ளது. மதுபான சாலைகளின் உரிமையாளர்கள், வீடுகளுக்கு போத்தல்களைக் கொண்டு சென்று, போயா தினத்தன்று, ஒன்றுக்கு இரண்டு மடங்கில் ஒரு போத்தலை விற்கின்றனர்.

தாய்லாந்து ஒரு பௌத்த நாடாகும். அங்கும் மதுபான சாலைகள் இருக்கின்றன. அங்கு, ஒரேயொரு நாளில் மட்டுமே, மதுபானசாலைகள் மூடப்படும். அதாவது, பொதுத் தேர்தல் நடத்தப்படும் நாளன்று மட்டுமே மதுப்பானசாலைகள் மூடப்படும்.

இவ்வாறான நிலையில், இங்கு ஒவ்வொரு போயாவுக்கும் மதுபான சாலைகளை மூடுவதால், மதுபானங்களை பருகுவோர் மட்டுமன்றி விற்பனையும் அதிகரித்துள்ளது. சட்டவிரோதமான கசிப்பு உற்பத்தியும் பாவனையும் அதிகரிக்கின்றது. இவை உடலுக்கு கேடு விளைவிக்கின்றன.

ஆகையால், பியர் மற்றும் வைன் விற்பனையில் விட்டுக் கொடுக்கும் வகையிலான சட்டங்களை அறிமுகப்படுத்தவேண்டும் என்றும் இது தனது தனிப்பட்ட அபிப்பிராயமாகும் என்றும் கூறினார்.

இதேவேளை, நத்தார் தினத்தில் மதுபான தடை விதிப்பதால் சுற்றுலாத்துறை பாதிக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார். பியர், வைன் வகை மதுபானங்களின் விற்பனையில் விட்டுக்கொடுக்கும் வகையிலான சட்டங்களை அறிமுகம் செய்ய வேண்டுமென, அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அரசியல் கனவுகளை நனவாக்க சிலர் முனைகின்றனர்



ஜனநாயக வரம்பிற்கு அப்பாற்பட்டு தாம் இழந்த அரசியல் கனவுகளை நனவாக்கும் முயற்சியில் சிலர் ஈடுபட்டுள்ளதாக சுகாதார சேவைகள் தொழிற்சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. சுகாதார அமைச்சு வளாகத்தில் கடந்த 21ஆம் திகதி இடம்பெற்ற அசம்பாவிதம் இதற்கு சிறந்த உதாரணம் என்று அரச தாதியர் சேவை சங்கத்தின் தலைவர் சமன் ரட்ணபிரிய தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில், எந்தவொரு பிரச்சினை தொடர்பிலும் ஆர்ப்பாட்டம் செய்து ஊர்வலம் செய்வதற்கும், பகிஷ்கரிப்புகளில் ஈடுபடுவதற்கும் சகலருக்கும் உரிமை உண்டு. ஆனால், குறுகிய அரசியல் நோக்கங்களின் அடிப்படையில் ஜனநாயக விரோதமாக செயற்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாதென ரட்ணபிரிய கூறினார். (இ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கு அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கை குறித்து

# குருகுலராசா தன்னிலை விளக்கம்

(தொடர்ச்சி...)

| | | | |
|---|---|---|---|
| | | | 995,950.00 |
| 5 | Teacher Centre-Murunkan | Desktop Computer 05 | 507,450.00 |
| | | Desktop Computer 04 | 399,600.00 |
| | | Laptop Computer 01 | 88,900.00 |
| | | | 995,950.00 |
| 6 | Schools,Vavuniya south | Laporatary equipments & chemicals | 1,230,164.75 |
| 7 | ZEO,Vavuniya south | Procurement of Equipment for Non-Formal Center | 1,944,011.46 |
| 8 | Schools Furniture | Teacher's Table - @ 7700 - (500Nos) | 3,850,000.00 |
| | | Teachers Chair (175Nos) | 693,875.00 |
| | | Student Chair Type IV -@ 2200 (600Nos) | 275,000.00 |
| | | Student Table Type IV - @2900 (600Nos) | 362,500.00 |
| | | Student Chair Type III - @2100 (600Nos) | 315,000.00 |
| | | Student Table Type III - @ 2600 (600Nos) | 390,000.00 |
| | | Photocopier,Vavuniya south | 87,690.00 |
| | | Taplet | 525,000.00 |
| | | Air Conditiner-School Works | 823,992.96 |
| | | Air Conditiner- PDE | 385,480.00 |
| | | | 7,708,537.96 |
| 15 | Schools,Mullaitivu | Repair school furniture (students & teacher furniture) Mullaitivu | 2,000,000.00 |
| | | Dept.of Industries (Furniture Repair) | 1,700,000.00 |
| 16 | Schools,Mannar | Other Zone Repairs - Madhu | 300,000.00 |
| | | Repair school furniture (students & teacher furniture) | 2,000,000.00 |
| 17 | Ministry of Education,Jaffna | Public Addressing System | 873,000.00 |
| | | Voice Recorder | 8,900.00 |
| | | Conference Hall Tabe | 574,300.00 |
| | | Confernce Hall Chair | 662,000.00 |
| | | 5s Table | 1,464,140.67 |
| | | Flower Vass | 30,000.00 |
| | | CPU Stand | 86,100.00 |
| | | Medium Back Revolving Chair | 34,320.00 |
| | | Conference Hall works | 1,186,999.00 |
| | | UPS | 8,240.00 |
| | | Sacanner | 9,900.00 |
| | | Flower Vass Cement | 13,600.00 |
| | | Sound system | 8,500.00 |
| | | **Improvement works of Ministry of Education Administrative building** | **4,959,999.67** |
| | **Total** | | **24,523,255.35** |



மேற்படி விபரத்தின் பிரகாரம் ரூபா 25 மில்லியன் வரையில் பாடசாலை மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவிற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. பற்றாக்குறையான நிதியினை சரியான திட்டமிடல் மூலமாக நிதி ஆணைக்குழுவின் சிபாரிசுக்கமைய ஆசிரிய மாநாட்டினை நடத்தியதுடன் ஆசிரிய மிகுதி நிதியினைப் பயன்படுத்தி தேவையான பௌதிக வளங்களுக்கும் நிதி பயன்படுத்தப்பட்டிருந்தது.

2016ஆம் ஆண்டிற்கு மாகாணக் குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் ரூபா 969 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் ரூபா 583 மில்லியன் மாத்திரமே 2016 ஆம் ஆண்டு கட்டு நிதியாக விடுவிக்கப்பட்டிருந்தது. 2017ஆம் ஆண்டில் மிகுதிக் கொடுப்பனவுக்காக ரூபா 312 மில்லியன் கட்டுநிதி விடுவிக்கப்பட்டுள்ளது. எனவே பற்றாக்குறையான நிதியில் சிக்கனமானதும், திட்டமிடப்பட்டதுமான முறையில் நிதி திறமையாகவே பயன்படுத்தப்பட்டிருந்தது.

மேற்கூறப்பட்ட விடயங்களை கருத்தில் எடுத்து பார்க்கும் போது நிதி வீண் விரயம் செய்யப்பட்டது என்பது ஒருபக்கச் சார்பானதும் ஏற்கனவே இவ்வாறான அறிக்கை கொடுக்கப்பட வேண்டும் என தயார் செய்யப்பட்டதாகவே கருத வேண்டியுள்ளது. இது ஒட்டுமொத்த கல்விச் சமூகத்தையும் அவமதிக்கும் ஒரு செயலாகவே நான் கருதுகிறேன்.

ஆய்வறிக்கைக்காக பெருந்தொகை நிதியும் களஆய்வு வசதிகளும் செய்யப்பட்டிருந்தும் எவ்விதமான களஆய்வுகளையும் மேற்கொள்ளாது இவ் அறிக்கை தயாரிக்கப்பட்டிருப்பது கவலைக்குரியதொன்றாகும். அறிக்கையைத் தயாரித்தவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட காலம், வசதிகள் என்பவற்றைப் பயன்படுத்தி சரியான முறையில் ஆய்வினைச் செய்திருந்தால் உண்மைத் தன்மை புலப்பட்டிருக்கும். ஆனால் விசாரணைக்குழுவினர் அவ்வாறு செய்யாமல் எழுந்தமானமான அறிக்கையொன்றைத் தயாரித்துள்ளனர்.

**முறைப்பாடு 3.8 இற்கான விளக்கங்கள்**

3.8 மாகாணப் பாடசாலைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் முன்னாள் ஜனாதிபதி வருகைக்காக ஆறு தேசியப் பாடசாலைகளை அலங்கரிப்பதற்கு பெருந்தொகைப் பணத்தை செலவழித்தமை.

இக்குற்றச்சாட்டு விசாரணைக்குழுவினால் ஏற்கனவே நிராகரிக்கப்பட்டுள்ளது.

**முறைப்பாடு 3.9 இற்கான விளக்கங்கள்**

3.9 கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.க.முருகவேளின் சேவைக்காலம் முடிவுற உள்ள நிலையில் வேறு பொருத்தமான பணிப்பாளர் ஒருவரை நியமிப்பதற்கான நடவடிக்கையும் இதுவரை எடுக்காமல் ஒப்பந்த அடிப்படையில் அவரது சேவையை தொடருவதற்கு முயற்சிக்கிறமை.

இக்குற்றச்சாட்டு ஆரம்பத்தில் வழங்கப்பட்ட குற்றப்பத்திரத்தில் பின்வருமாறு அமைந்திருந்தது.

"கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.முருகவேளின் சேவைக்காலம் முடிவுற உள்ள நிலையில் வேறு பொருத்தமான அதிபர் ஒருவரை நியமிப்பதற்கான நடவடிக்கையும் இதுவரை எடுக்காமல் ஒப்பந்த அடிப்படையில் அவரது சேவையை தொடருவதற்கு முயற்சிக்கிறமை"

விசாரணை அறிக்கை எனது கைக்கு கிடைக்கப் பெறும்வரை குற்றச்சாட்டில் மாற்றம் செய்யப்பட்டமை குறித்து எனக்கு எதுவித அறிவித்தலோ உரிய கால அவகாசமோ வழங்கப்படவில்லை என்பது இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது.

இக்குற்றச்சாட்டும் ஏற்கனவே விசாரணைக்குழுவினால் நிராகரிக்கப்பட்டுள்ளது. இவ்விசாரணைக்குழுவின் விசாரணை நடவடிக்கைகள் தொடர்பாக விளக்கம் உண்மைகளை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

1) என்னை குற்றஞ் சாட்டப்பட்ட ஒரு சந்தேக நபராக அன்றி குற்றவாளி என்ற முற்கற்பிதத்துடனேயே விசாரணை நடவடிக்கைகள் இடம்பெற்றமை அவதானிக்கப்பட்டது.

2) குற்றப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட சாட்சிகளின் பட்டியலின்படி பின்வரும் சாட்சிகள் மாத்திரமே இடம் பெற்றிருந்தன.

கௌரவ அனந்தி சசிதரன், வடமாகாண சபை உறுப்பினர்.
கௌரவ.எஸ்.சுகிர்தன், வட மாகாண சபை உறுப்பினர்

ஆனால் குறித்த விசாரணை நடவடிக்கையின் போது இப்பட்டியலில் குறிப்பிடப்படாத பின்வருவோரின் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளமை விசாரணை அறிக்கையிலிருந்து தெரியவருகிறது.

அ) கௌரவ மாகாண சபை உறுப்பினர் திரு.பசுபதி அரியரத்தினம்.

ஆ) திரு.சிவபாதம் நந்தகுமார், உதவிச் செயலாளர், கல்வி அமைச்சு, வடக்கு மாகாணம்.

இ) திரு.இராசா இரவீந்திரன், செயலாளர், கல்வி அமைச்சு, வடக்கு மாகாணம்.

ஏற்கனவே கொடுக்கப்பட்ட பட்டியலில் இருந்த கௌரவ மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரனும், கௌரவ மாகாண சபை உறுப்பினர் எஸ்.சுகிர்தனும் சாட்சியம் அளித்திருக்கவில்லை என்பது அறிக்கையிலிருந்து தெரியவருகிறது. விசாரணை நடைமுறைகளின் பிரகாரம் குற்றஞ் சாட்டப்பட்டவருக்கு குற்றப் பத்திரத்தில் செய்யப்படும் சகல மாற்றங்களும் அறிவிக்கப்பட்டு அது தொடர்பான தனது தயார்ப்படுத்தலை மேற்கொள்ளும் பொருட்டு போதுமான கால அவகாசம் அளிக்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால் இம்மாற்றங்கள் குறித்து விசாரணை அறிக்கை வெளிவரும் வரை குற்றஞ் சாட்டப்பட்டவருக்கு எவ்வித அறிவித்தலும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

3) விசாரணை ஆரம்பத்திலிருந்து இறுதிவரை விசாரணையை அவதானிப்பதற்கான சந்தர்ப்பம் குற்றஞ் சாட்டப்பட்டவருக்கும் அவரது வழக்கறிஞருக்கும் வழங்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால் அவ்வாறான சந்தர்ப்பம் எதுவும் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

4) முறைப்பாட்டாளர் தரப்பு சாட்சியங்களை குறுக்கு விசாரணை செய்யும் உரிமை குற்றஞ் சாட்டப்பட்டவருக்கோ அவரது வழக்கறிஞருக்கோ வழங்கப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பமோ உரிமையோ குற்றஞ் சாட்டப்பட்டவருக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

5) குற்றஞ் சாட்டப்பட்டவர் தரப்பு சாட்சிகளை விசாரணையின் போது முன்னிலையாக்கி வழிப்படுத்தும் உரிமை குற்றஞ்சாட்டப்பட்டவருக்கோ அவரது வழக்கறிஞருக்கோ வழங்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால் அவ்வாறெதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை.

6) முறைப்பாட்டாளர் தரப்பு ஆவணப்பிரதிகளை பார்வையிடுவதற்கும், பெற்றுக்கொள்வதற்கும் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கோ அவரது வழக்கறிஞருக்கோ உரிமையும் சந்தர்ப்பமும் வழங்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால் அவ்வாறு வழங்கப்பட்டிருக்கவில்லை.

7) குற்றஞ் சாட்டப்பட்டவர் தனிப்பட்ட முறையில் அல்லாது தான் வகிக்கும் கல்வி அமைச்சர் என்ற பதவியின் அடிப்படையில் செய்ததாகக் கூறப்படும் கருமங்கள் தொடர்பாகவே குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

எனவே குற்றஞ்சாட்டப்பட்டவரான கல்வி அமைச்சர் சார்பில் ஆஜராவதற்கு சட்டத்தரணி ஒருவரை நியமித்து வழங்க வேண்டிய கடமையும், பொறுப்பும் வடமாகாண சபைக்கே உரியது. ஆயினும் வடமாகாண சபை தன் பொருட்டு கடமையாற்றி நட்டாற்றில் விடப்பட்ட கல்வி அமைச்சர் பொருட்டு தனது கடமையையும், பொறுப்பையும் நிறைவேற்றத் தவறிவிட்டது.

8) குற்றஞ் சாட்டப்பட்டவராகிய என்னால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணப் பிரதிகளை விசாரணைக்குழு ஏற்க மறுத்துவிட்டது. ஆயினும் விசாரணை அறிக்கையில் நான் எவ்வித ஆவணப்பிரதிகளையும் சமர்ப்பிக்கவில்லை என குறிப்பிட்டுள்ளது. இது என்னை திட்டமிட்டு குற்றவாளியாக்கும் எண்ணத்திலேயே விசாரணைக்குழு தொழிற்பட்டுள்ளது என்பதை எடுத்துக்காட்டுகிறது.


இதுவரை கூறப்பட்டவற்றிலிருந்து, இவ்விசாரணைக்குழுவின் உருவாக்கம் அரசியலமைப்புச் சட்டத்துக்கு முரணானதால் சட்டவலுவற்றதென்பதும், எனவே அதன் செயற்பாடுகள் யாவும் வெறிதானதும் செல்லுபடியற்றதுமாகுமென்பதும், இங்கு சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்கள் யாவும் என்மீது சுமத்தப்பட முடியாதவை எனவும், விசாரணையானது முற்கற்பிதமான முறையில் பாரபட்சமாகவே நடத்தப்பட்டுள்ளதெனவும், குற்றஞ் சாட்டப்பட்டவருக்கான அடிப்படை உரிமைகள் முற்றாக மறுக்கப்பட்டுள்ளன எனவும், விசாரணை முறை நியமங்கள் மீறப்பட்டுள்ளன எனவும் தெரியவருகிறது. மேலும் ஆயிரம் குற்றவாளிகள் தப்பிச் சென்றாலும் ஒரு அப்பாவி தண்டிக்கப்படக்கூடாது என்னும் நீதிமுறைமையின் அடிப்படையை மீறுவதாக விசாரணை நடைமுறைகள் அமைந்திருந்தமை இங்கு சுட்டிக்காட்டப்படுகின்றது.

**கல்வி அமைச்சர்-த.குருகுலராசா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானசாரருக்கு பிணையாயின் நகுலனுக்கு ஏன் வழங்கமுடியாது

## சட்டத்தரணி அஜித் பிரசன்ன கேள்வி



பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரை, இரண்டு நீதிமன்றங்களாலும் ஒரேநாளில் விசாரணை நடத்தி பிணையில் விடுவிக்க முடியுமாயின், நகுலன் என்றழைக்கப்படும் சுப்பிரமணியம் நகுலராசாவையும் விடுவிக்கலாம் என்று அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி மேஜர் அஜித் பிரசன்ன தெரிவித்தார்.

புலிகளின் இலச்சினை பொறிக்கப்பட்ட தொப்பியை லண்டனுக்குக் கடத்த முயன்றார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு 15 மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நகுலன் என்றழைக்கப்படும் சுப்பிரமணியம் நகுலராசாவை விடுவிக்குமாறு, சட்டத்தரணி மேஜர் அஜித் பிரசன்ன அளுத்கடை நீதிமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார். இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கலகொட அத்தே ஞானசார தேரர் இரண்டு நீதிமன்றங்களாலும் பிணையில் விடுவிக்கப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

சுப்பிரமணியம் நகுலராசாவுக்கு எதிராக, பாரதூரமான குற்றச்சாட்டுகள் காணப்பட்டபோதும், பிணைக்கு ஆட்சேபனை இல்லை எனவும் விசாரணைகள் அனைத்தும் முற்றுப் பெற்றுள்ளன எனவும் ஒருங்கிணைக்கப்பட்ட குற்றத் தடுப்புப் பிரிவின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்ததாகவும் சட்டத்தரணி மேஜர் அஜித் பிரசன்ன தெரிவித்தார்.

ஞானசாரவுக்கு எதிரான வழக்குகளைப் போல, ஏனைய வழக்குகளையும் விரைவாக முடிக்கலாமே என நீதவான் வினவியபோது, அதற்குத் தாம் முயல்வதாக ஒருங்கிணைக்கப்பட்ட குற்றத்ததடுப்புப் பிரிவின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் கூறினார் என்றும் தெரிவித்தார்.

நகுலனை விடுவிக்குமாறு, எந்த தமிழ்க் கட்சியுமோ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ சுமந்திரன் எம்.பியோ கோரவில்லை என்று குறிப்பிட்ட அவர், புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்படுமாறு கோருவோரின் பட்டியலில் சுப்பிரமணியம் நகுலராசா இல்லை என்றும் சட்டத்தரணி இதன்போது கூறினார்.

புலிகள் தொடர்பான பல தகவல்களை அரச புலனாய்வுச் சேவையில் இருந்து கொண்டு, நகுலன் வழங்கியதாகவும் அவர் விடுவிக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

நாரஹேன்பிட்டியிலுள்ள விரைவு அஞ்சல் (கொரியர்) நிறுவனத்தினூடாக, புலிகளின் இலட்சினை பொறிக்கப்பட்ட தொப்பியொன்றை மிகவும் சூட்சுமமான முறையில் பொதியொன்றுக்குள் மறைத்து வைத்து, அதனை லண்டனுக்கு அனுப்ப முயன்றமை தொடர்பில், ஜேசுரத்னம் ஜெகசம்சன், மகாதேவா பிரசன்னா, சுப்பிரமணியம் நகுலராசா ஆகியோர் கைது செய்யப் பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


**கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் சிற்றுண்டிச்சாலையை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விக் கோரல்**

கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் சிற்றுண்டிச்சாலையை 10.07.2017 தொடக்கம் 09.07.2018 வரையான காலப் பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்காக பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றது.

26.06.2017 திகதி முதல் 30.06.2017 வரை பாடசாலை அலுவலகத்தில் காலை 8.00 மணிமுதல் பி.ப. 1.00 மணிவரை பின்வரும் கொடுப்பனவினை செலுத்தி கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

| சேவை விபரம் | மீளளிப்புச் செய்யப்படாத தொகை | மீளளிப்புத் தொகை |
|---|---|---|
| சிற்றுண்டிச்சாலை | 1,000.00 | 10,000.00 |

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்களை 04.07.2017 திகதி பி.ப. 1.00 மணிக்கு முன் நேரடியாகவோ அல்லது தலைவர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், கிளிநொச்சி மகாவித்தியாலயம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு பதிவு அஞ்சலில் அனுப்பி வைக்கலாம். கேள்விப்பத்திரங்கள் யாவும் கடித உறைக்குள் உள்ளடக்கி பொறியிட்டு (sealed) அதன் இடது பக்க மூலையில் சிற்றுண்டிச்சாலைக்கான கேள்வி சமர்ப்பிப்பவர்கள், "சிற்றுண்டிச்சாலையை வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி" என குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

சகல கேள்விப்பத்திரங்களும் 07.07.2017 திகதி பி.ப. 2.00 மணிக்கு கேள்விச்சபையின் முன்னிலையில் திறக்கப்படும். அத்தருணம் விண்ணப்பதாரிகள் சமுகமளித்திருத்தல் வேண்டும். தனிப்பட்ட அறிவித்தல் வழங்கப்படமாட்டாது.


தலைவர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயம்.

(இ-8864)


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1111

### குமாரிகா

பொய்யைச் சொல்லி ஆயிரம் உறவுகளைத் தக்கவைப்பதைவிட உண்மையைச் சொல்லித் தனிமரமாகவே இருப்பது மேல் மனசாட்சி மட்டுமாவது கடைசி வரை கூட இருக்குமே...



### மாதவன்

கணவன் : நேற்று ராத்திரி... நான் குடிச்சிட்டு வந்தப்போ...நீ பேசிய வார்த்தை ஒவ்வொன்றும் என்னை செருப்பால அடிச்சது போல இருந்துச்சு...!

மனைவி : அட போங்க... குடிச்சிருந்ததால உங்களுக்குத் தெரியலை...நெஜமாவே நான் செருப்பால தான் அடிச்சேன்...!

### கண்ணா




### கவிதா




### சுவீதன்




### வினிதா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இலங்கையில் வரட்சியால் 9 லட்சம் பேருக்கு பாதிப்பு

## ஐ.நா. அதிர்ச்சி அறிக்கை

இலங்கையில் வரட்சி மற்றும் வெள்ளத்தினால் உணவு உற்பத்தியில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதால், பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த 9 இலட்சம் மக்களின் உணவுப் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்குள்ளாகியிருப்பதாக, ஐ.நா. அறிக்கை ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

ஐ.நா. உணவு மற்றும் விவசாய நிறுவனம் மற்றும் ஐ.நா. உணவுத் திட்டம் ஆகியன இணைந்து இது தொடர்பான அறிக்கை ஒன்றை நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளன.

அதில், கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளத்தை அடுத்து, பெருமளவு விவசாய விளைச்சல் பகுதிகள் கடுமையான வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் 9 இலட்சம் மக்களின் உணவுப் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கிறது.

2016 மற்றும் 2017 முற்பகுதியில் வரட்சியினால் பரவலாக அறுவடைகள் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக நாட்டின் பிரதான உணவான அரிசி உற்பத்தி கடும் பாதிப்பை சந்தித்துள்ளது.

2017 ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த அரிசி உற்பத்தி 2.7 மில்லியன் தொன்களாக கணிக்கப்பட்டது. ஏற்கனவே கடந்த ஆண்டில் 40 வீதம் குறைவான அரிசி விளைச்சலே கிடைத்தது. இது கடந்த ஐந்து ஆண்டுகளில் கிடைத்த அறுவடையில் 35 வீதம் குறைவானதாகும்.

ஏனைய உணவுப் பொருட்களான பருப்பு வகைகள், மிளகாய், வெங்காயம் என்பனவற்றின் உற்பத்தியும் வரட்சியால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

மே மாதம் நாட்டின் தென்மேற்குப் பகுதிகளில் கடும் மழையினால் பெரும் வெள்ளம் ஏற்பட்ட போதும், நாட்டின் கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களின் நீர்நிலைகளுக்கு அது நீரைத் தரவில்லை.

தற்போது கிட்டத்தட்ட 225,000 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 9 இலட்சம் பேர் உணவுப் பாதுகாப்பு இல்லாத நிலையை எதிர்கொண்டுள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் தமது அறுவடைகள் பாதிக்கப்பட்டதாலும், வேலைவாய்ப்பை இழந்து வருமானமின்மையாலும், இந்த நிலையை எதிர்கொண்டுள்ளனர்.

வரட்சியை எதிர்கொண்டுள்ள பகுதிகளிலுள்ள மக்களில் மூன்றில் ஒரு பங்கினரின், வழக்கமான வருமானம் பாதியாக குறைந்துள்ளது.

அடுத்த அறுவடைக்காலத்திலும் இதேநிலை நீடித்தால், நிலைமைகள் மேலும் மோசமடையும் என்றும் ஐ.நா. எச்சரித்துள்ளது. (இ-7)




# இரண்டாவது நாளாகவும் வைத்திய சேவை பாதிப்பு

## நோயாளர்கள் கடும் அவதி

(கொழும்பு)

சைட்டத்திற்கு எதிராக போராட்டம் நடத்திய மாணவர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து அரச வைத்திய அதிகாரிகள் நேற்று முன்தினம் வேலை நிறுத்தப் போராட்டத்தினை ஆரம்பித்திருந்தனர்.

இந்த நிலையில் குறித்த போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்து நடந்தது.

இதனால் ஹற்றன் - டிக்கோயா ஆதார வைத்தியசாலைக்கு தூர பிரதேசங்களிலிருந்து வருகை தந்த நோயாளர்கள் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும், வெளி நோயாளர் பிரிவு மற்றும் மருந்து வழங்கும் பிரிவு என்பன முழுமையாக ஸ்தம்பிதமடைந்ததாக கூறப்படுகிறது.

எனினும், வைத்தியசாலைகளில் அவசர சிகிச்சை பிரிவு மாத்திரம் இயங்கியது. நாட்டிலுள்ள பல வைத்தியசாலைகளில் இதேநிலை காணப்பட்டது. வைத்தியர்களின் இந்த வேலை நிறுத்தத்தால் நோயாளர்கள் பெரும் அவதிக்குள்ளாயினர். (இ-7)

# நல்லாட்சியின் வாக்குறுதி கானல் நீர் போன்றதே!

## பிரபா கணேசன் விசனம்



(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் பேரினவாதிகள். ஆதலால், அவர்களிடம் இருந்து தமிழ் மக்களுக்கான நியாயம் கிடைத்துவிடும் என்று எதிர்பார்க்க முடியாது என முன்னாள் பிரதி அமைச்சர் பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

மகிந்த அரசாங்கத்தில் காணப்பட்ட பிழைகளையும், இன்வாத செயற்பாடுகளையும் சுட்டிக் காட்டி ஆட்சிபீடம் ஏறிய நல்லாட்சி அரசாங்கம் வழங்கி வரும் வாக்குறுதிகள் அனைத்தும் கானல் நீராகவே அமைந்துள்ளன.

எனவே பேரினவாதிகளின் கைகளில் இருக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும், தமிழ் கட்சிகளும் அழுத்தங்களை பிரயோகித்து அல்லது அரசாங்கத்தில் இருந்து வெளியேறி, போராட்டங்களை நடத்தி சர்வதேசத்தின் உதவியுடன் இவர்களிடம் இருந்து நியாயத்தை பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஆனால் இன்று தமிழ்க் கட்சிகள் அரசாங்கத்திடம் சரணாகதி அடைந்துள்ளதுடன், நல்லாட்சியும் மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியை போன்றே செயற்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மகா சங்கத்தினர் அரசியலில் தலையிடுவது துரதிஷ்டமானது

## அமைச்சர் அமரவீர கவலை

(கொழும்பு)

பௌத்த பிக்குகள் அரசியலில் தங்களைத் தொடர்பு படுத்திக் கொள்வது துரதிஷ்டமான ஒரு அம்சமாகும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

மகா சங்கத்தினர் தேவையற்ற விடயங்களில் தலையீடு செய்கின்றார்களே என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

நாம் இக்காலத்தில் மிகவும் கவனமாக சில விடயங்களை அணுக வேண்டியுள்ளது.

ஏனெனில், மகா நாயக்க தேரர்கள் தற்பொழுது அமைப்பாக இருந்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் விடயத்தில் பொலிஸார் நடந்துகொண்ட முறைமை தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் அமைச்சரிடம் வினவியதற்கு அமைச்சர் இவ்வாறு கூறினார்.

பொலிஸாரின் நடவடிக்கை எப்படியிருந்தது என்பதை மக்கள் நன்கு தெரிந்து கொண்டார்கள். பொலிஸார் செயற்பட்ட விதம் திருப்தியானதாக இல்லையென நான் இங்கு கருத்துத் தெரிவித் [illegible] ரும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 48
உயரம்: 5'11"
தகைமை/தொழில்:NDT/ பொறியியலாளர் (அரச)
தொ.இ: B/7484

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: ரேவதி
தகைமை/தொழில்:A/L/ பிரான்ஸ் PR
தொ.இ: B/7486

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: ரோகினி
தகைமை/தொழில்: பிரான்ஸ் PR
தொ.இ: B/7487

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 32 சூரி செவ் 9 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:BSc Reading /தாதி
தொ.இ: B/7488

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 23 சூரி செவ் 2 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்:BSc
தொ.இ: G/6547

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 78
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:HNDA/ தனியார்
தொ.இ: G/6550

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: செவ் 1 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:MBBS வைத்தியர்
தொ.இ: G/6551

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: அத்தம்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:முகாமைத்துவ பட்டதாரி முகாமையாளர்
தொ.இ: G/6552

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆனி மாத இராசி பலன்கள்

## 15.06.2017-16.07.2017



முன்யோசனையுடன் செயற்படும். கும்ப இராசி அன்பர்களே!

உங்களின் ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்திலேயே உங்கள் இராசிநாதன் சனி பகவான் தொழில் ஸ்தானத்தில் வக்ரம் பெற்று சஞ்சரிக்கிறார். உங்கள் இராசிக்கும், 12ஆம் இடத்திற்கும் அதிபதியாக சனி விளங்குவதால், சனியின் வக்ர இயக்கம் பெரியளவில் பாதிப்புகளை ஏற்படுத்தாது. தொழிலுக்கு புதிய முதலீடு செய்ய புதிய கூட்டாளிகளைச் சேர்த்துக் கொள்வீர்கள். குருவின் பார்வை 2 ஆம் இடத்தில் பதிவதால் சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும்.

பணப்பற்றாக்குறை ஏற்பட்டாலும் கடைசி நேரத்தில் காரியங்கள் கைகூடிவிடும். குடும்ப முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளிலும் வெற்றி கிட்டும். ஒரு சிலருக்கு வீடு, இடம் வாங்கும் யோகம் ஏற்படலாம். வெளியூர் அல்லது வெளி மாநிலங்களுக்குச் சென்று தொழிலை விரிவு செய்ய வேண்டும் என்ற விருப்பம் நிறைவேறும்.

ஜென்மத்தில் கேதுவும், 7 இல் ராகுவும் சஞ்சரிக்கிறார்கள். மாதத் தொடக்க நாளில் 6க்கு அதிபதி சந்திரன் கேதுவோடு இணைந்து செயற்படுகிறார். எனவே அலைச்சல் அதிகரிக்கும். அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சிகளிலும் ஆதாயம் கிடைக்கும். ஆன்மிகப் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள். குலதெய்வ கோவிலுக்கு திருப்பணிகள் செய்வதற்காக உதவிகளை சிலர் செய்வார்கள். உத்தியோகத்தில் நீண்ட நாட்களாக நிலுவையில் இருந்த சம்பளப் பாக்கிகள் வசூலாகும். நேர்முகத் தேர்விற்கு பலமுறை சென்றும் வேலை கிடைக்கவில்லையே என்று வேதனைப்பட்டவர்களுக்கு இப்பொழுது வேலை கிடைக்கும்.

சகாய ஸ்தானத்தில் சுக்ரன் பலம் பெற்று இருப்பதால், பெண்வழிப் பிரச்சினைகள் அகலும். உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேருவர். நூதனப் பொருட் சேர்க்கை உண்டு. பஞ்சம ஸ்தானத்தில் புதன், சூரியன், செவ்வாய் ஆகிய கிரகங்களும் சஞ்சரிக்கின்றன. சப்தமாதிபதி 5இல் சஞ்சரிப்பதால் வாழ்க்கைத் துணை வழியே ஏற்பட்ட போராட்டங்கள் மாறும். புத- ஆதித்ய யோகம் செயற்படுவதால் கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் அனுகூலத்தோடு ஒரு நல்ல காரியமொன்றைச்

# எதிர்காலம் பற்றிய பயம் விலகும்

செய்து முடிப்பீர்கள். ஆனித் திருமஞ்சனத்தன்று நடராஜர் அபிஷேகமும், பிரதோஷத்தன்று நந்தீஸ்வரர் வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள். எதிர்காலத்தைப் பற்றிய பயம் இனிதே விலகும்.

ரிஷப சுக்ரன் சஞ்சாரம்

உங்கள் ராசிக்கு 4,9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்ரன். அவர் ஜுன் 29ஆம் திகதி ரிஷபத்தில் சஞ்சரிக்கப் போகிறார். சுக ஸ்தானம் எனப்படும் 4ஆம் இடத்திற்கு அதிபதியாக விளங்கும் சுக்ரன், அந்த ஸ்தானத்திலேயே சஞ்சரிக்கும் பொழுது சுகங்களும், சந்தோஷங்களும் வந்து சேரும். பெற்றோர் வழியில் ஆதரவு கிடைக்கும். தாய் வழியில் தனலாபம் உண்டு. வாகனங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். ஒரு சிலருக்கு ஆடை, ஆபரணங்களின் சேர்க்




கையும் உண்டு.

கடக புதன் சஞ்சாரம்

இதுவரை 5ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த புதன், தன் சொந்த வீட்டை விட்டு 6ஆம் இடத்திற்கு வருவது யோகம்தான். மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் கிடைக்கும். மாமன், மைத்துனர்களின் இல்லத்தில் நடைபெறும் மங்கள நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்துவீர்கள். சேமிப்பு அதிகரிக்கும். நேரம் காலம் பார்க்காமல் உழைப்பவர்களுக்கு உதவுவீர்கள். உத்தியோகத்தில் தடைப்பட்ட உயர்வு, இனிமேல் தானாக வந்து சேரும். வீட்டுப் பாரம்பரியில் ஆர்வம் காட்டுவீர்கள். கூட்டு முயற்சிகள் இதுபோன்ற காலங்களில் கைகொடுக்கும்.

கடக செவ்வாய் சஞ்சாரம்

கடக ராசிக்கு ஜுலை 12ஆம் திகதி செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 3,10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். கடகத்தில் அவர் நீசம் பெறும் பொழுது, சகோதர ஒற்றுமை குறையும். நீங்கள் சார்ந்திருப்பவர்களால் பிரச்சினைகள் உருவாகலாம். தொழில் நடைபெறும் இடத்தை மாற்றலாமா? என்று சிந்திப்பீர்கள். ஒருசிலர் தொழில் நிலையத்தை பழுது பார்க்கும் சூழ்நிலை உருவாகும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். உடன் பிறப்புகளை அரவணைத்துக் கொள்வது நல்லது.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும் மாதம் இது. அண்ணன், தம்பி அக்கா, தங்கைகளை அனுசரித்துச் செல்வதன் மூலமே ஆதாயம் கிடைக்கும். கோபத்தைக் குறைத்துக் கொண்டு செயற்படுவதன் மூலம் நல்ல வாய்ப்புகளை வரவழைத்துக் கொள்ள முடியும். வாழ்க்கைத்துணை வழியே அடிக்கடி பிரச்சினைகள் வந்து அலை மோதும். விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது.

பிள்ளைகள் படிப்பில் தேர்ச்சி பெற்று நல்ல பெயர் எடுப்பார்கள். பிரயாசை எடுக்காமலேயே பெரிய படிப்பு படிக்க வாய்ப்பு கிடைக்கலாம். உத்தியோகத்தில் சக பணியாளர்களின் ஒத்துழைப்பு கிட்டும். சனிக்கிழமை தோறும் விரதமிருந்து, அதிகாலையில் ஆனைமுகப் பெருமானையும், ஆஞ்சநேயரையும் வழிபடுவது நல்லது.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



வீட்டிற்கு வரும் விருந்தினர்களை விதவிதமாக உபசரிக்கும் மீனஇராசி அன்பர்களே!

உங்களின் ஆனி மாதக் கிரகநிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் குருவின் பரிபூரண பார்வை உங்கள் ராசியில் பதிகிறது. 6இல் ராகு நிற்க, குரு கேந்திரத்தில் இருந்தால் அஷ்டலட்சுமி யோகம் செயற்படும் என்பார்கள். அந்த அடிப்படையில் இந்த மாதத்தின் கிரகநிலைகள் இருக்கின்றன. எனவே, பணப்புழக்கம் நன்றாக இருக்கும். தைரியமும், தன்னம்பிக்கையும் கூடும். கருத்து மோதல்கள் அகலும். கடமையில் கண்ணும் கருத்துமாக இருந்து பாராட்டுப் பெறுவீர்கள்.

வெளிவட்டாரப் பழக்க வழக்கம் விரிவடையும். அஷ்டலட்சுமி யோகம் செயற்படும் பொழுது எட்டு வகை லட்சுமியின் அருளும் பரிபூரணமாக கிடைக்கும் அல்லவா? எனவே தைரியத்தோடு சில முக்கிய முடிவெடுப்பீர்கள். தொழில் வளர்ச்சியில் புதிய பங்குதாரர்கள் வந்திணைவர். தொல்லை தந்த எதிரிகள் விலகுவர்.

குடும்ப முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகள் அனைத்தும் நடைபெறும். பிள்ளைகளின் கல்யாண வாய்ப்புகள் கைகூடுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

எப்பொழுது திருமணம் முடியும் என்று எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களுக்கு, இந்த மாதம் மகிழ்ச்சியான தகவல் வந்து சேரும். 2இல் சுக்ரன் இருப்பது ஒருவழிக்கு நன்மைதான். கவர்ச்சியாகப் பேசிக் காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். வீட்டுக் கட்டுமானப் பணிகள் நடைபெறுவதில் இருந்த தடைகள் அகலும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும்.

சுக ஸ்தானத்தில் சூரியன், புதன், செவ்வாய் ஆகிய மூன்று கிரகங்களும் சஞ்சரிக்கின்றன. எனவே அச்சுறுத்தும் நோய் உங்களை விட்டு அகலும். உறவினர் பகை அகல, புதிய யுக்திகளைக் கையாளுவீர்கள். அரசியல் அனுகூலம் உண்டு. இலாபாதிபதியாகவும், விரயாதிபதியாகவும் விளங்கும் சனிபகவான் வக்ர இயக்கத்தில் இருக்கிறார். எனவே வெளிநாட்டு முயற்சியில் கொஞ்சம் தாமதம் ஏற்படலாம். வீடு மாற்றங்கள், இடமாற்றங்கள், ஊர் மாற்றங்

# தைரியமும் தன்னம்பிக்கையும் கூடும்

கள் விரும்பும் விதத்தில் அமையும்.

உத்தியோகம் சம்பந்தமாக வெளி நாட்டிற்குச் சொந்தச் செலவில் செல்ல நினைப்பவர்கள், கொஞ்சம் யோசித்துச் செயல்படுவது நல்லது. வெளிநாட்டில் வேலை கிடைக்குமா? என்பது சந்தேகம் தான். இம்மாதம் பார்க்கும் குருவைப் பலப்படுத்துவதோடு, குருவிற்குரிய சிறப்பு தலங்களுக்குச் சென்று வழிபட்டு வருவது நல்லது.

ரிஷப சுக்ரன் சஞ்சாரம்

ஜுன் 29 ஆம் திகதி ரிஷப ராசிக்குச் சுக்ரன் செல்கிறார். சகாய ஸ்தானாதிபதி சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரம் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு இலாகா மாற்றங்கள் வந்து சேரலாம். வழக்குகள்




சாதகமாக முடியும். உத்தியோகத்தில் ஒருசிலருக்கு நீண்ட தூரத்திற்கான மாறுதல்கள் கிடைக்கலாம். உடன்பிறப்புகளில் ஒருசிலர் உங்களை விட்டு விலக நேரிடலாம். பணியாளர் தொல்லை அதிகரிக்கும்.

கடக புதன் சஞ்சாரம்

உங்கள் ராசிக்கு 4,7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் 5ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது பூர்வீகச் சொத்துப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். பிள்ளைகளின் மேற்படிப்பு சம்பந்தமாக கடல் தாண்டிச் சென்று படிக்க வேண்டுமென்று விரும்பினால், அதற்காக எடுத்த முயற்சிகள் கைகூடும். வாழ்க்கைத்துணை வழியே ஏற்பட்ட பிணக்குகள் அகலும். பூர்வீகச் சொத்துகளில் ஒரு பகுதியை விற்று விட்டு, புதிய சொத்துகள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

கடக செவ்வாய் சஞ்சாரம்

ஜுலை 12ஆம் திகதி கடக இராசிக்குச் செவ்வாய் செல்கிறார். அந்த வீடு அவருக்கு நீச வீடாகும். உங்கள் இராசிக்கு 2,9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் நீச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. பணப்பற்றாக்குறை ஏற்படலாம். பக்கபலமாக இருக்கும் நண்பர்களுக்குள் பகை ஏற்படக்கூடும். குடும்பத்தில் குழப்பங்கள் அதிகரிக்கும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாமல் போகலாம். தைரியமும், தன்னம்பிக்கையையும் தக்க வைத்துக் கொள்ளுங்கள். ஆனித் திருமஞ்சனத்தன்று நடராஜர் தரிசனம் பார்ப்பதன் மூலம் நலம் யாவும் வந்து சேரும்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

இந்த மாதம் குரு பார்வையால் குழப்பங்கள் அகலும். குதூகலம் கூடும். இழப்புகளை ஈடுசெய்ய இனிய வாய்ப்புகள் வந்து சேரும். குடும்ப ஒற்றுமை பலப் படும். கணவன்-மனைவிக்குள் அன்னியோன்யம் அதிகரிக்கும். மழலைச் செல்வத்திற்காக காத்திருப்பவர்களுக்கு புத்திரப்பேறு கிடைப்பதற்கான அறிகுறிகள் தோன்றும். உடன்பிறப்புகளில் ஒரு சிலர் உங்களுக்கு எதிரியாகலாம். பெற்றோர் வழியில் ஆதரவு திருப்தி தரும். பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமைப்படுவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்தபடியே பதவி உயர்வும், ஊதிய உயர்வும் கிடைக்கலாம். தங்கம், வெள்ளி வாங்குவதில் தனிக்கவனம் செலுத்துவீர்கள். மங்கள நிகழ்ச்சிகள் மனையில் நடைபெற வாய்ப்பு உண்டு. ஆனைமுகன் வழிபாடு ஆனந்தம் வழங்கும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## நேரம் பொன்னானது

ருத்ரன் ஒரு பள்ளி பருவ மாணவன் ஒரு நாள் கா... கா.... என்று கத்திக்கொண்டு ஒரு காகம் பறந்து வந்தது. அவன் வீட்டின் அருகிலுள்ள மரக்கிளையில் அமர்ந்தது. ருத்ரனுக்கு அந்தக் காகத்தைப் பிடிக்க ஆசை, அதைப் பிடிக்க ஓடினான். உடனே அது பறந்து சென்றது. ருத்ரன் திரும்பி வந்து காத்திருந்தான். அந்தக் காகம் மீண்டும் அங்கு வந்து அங்கும் இங்கும் நடந்தது. ருத்ரன் தான் உண்டு கொண் டிருந்த வடையைப் பிய்த்துக் காகத்துக்குப் போட்டான். காகம் வேகமாக ஓடி வந்தது. வடை யைக் கொத்திக் கொண்டு பறந்தோடியது. ருத்ரனுக்கு மீண்டும் அந்தக் காகத்தைப் பிடிக்க வேண்டும் என்ற ஆசை எழுந்தது. வெகுநேரம் காத்திருந்தான். அந்தக் காகம் மீண்டும் வரவேயில்லை. ?

இரண்டாம் நாள் அந்த இடத்திற்கு, அதே நேரத்திற்கு அந்தக் காகம் வந்தது. அங்கும் இங்கும் நடந்தது. இன்று அந்தக் காகம் கைக்கு எட்டும் தொலைவிற்குள் நடந்து வந்தது. ருத்ரன் தன்னிடம் இருந்த நிலக்கடலையை காகத்தின் முன் வீசினான். காகம் தலையைச் சாய்த்துச் சாய்த்துப் பார்த்துக் கொண்டே ஒவ்வொரு கடலையாகக் கொத்தித் தின்றது. ருத்ரன் அருகில் சென்றதும் உடனே பறந்தோடியது. மூன்றாம் நாளும் அந்தக் காகம் அந்த இடத்துக்கு, அதே நேரத்துக்கு வந்தது. இன்று அச்சப்படாமல் காகம் ருத்ரனின் அருகில் வந்தது. ருத்ரனின் கையை ஆவலோடு பார்த்தது. ருத்ரன் வீட்டிற்குள் சென்று அரிசியை எடுத்து வந்து போட்டான். காகம் பொறுமையாக ஒவ்வொரு அரிசியாகப் பொறுக்கித் தின்றது. ருத்ரன் காகத்தைப் பிடிக்க எழுந்தான். காகம் பறந்தோடியது. ஒவ்வொரு நாளும் காகம் சரியான நேரத்துக்கு வந்தது. ருத்ரனும் காகமும் நண்பர்களானார்கள். ருத்ரன் சொல்லுவதைக் கேட்டுக் காகம் புரிந்து கொண்டது போலத் தலையை ஆட்டும். சரியான நேரத்துக்கு வரும் காகத்தைக் கண்டு ருத்ரன் வியந்தான். காகத்தால் எப்படி முடிகிறது? மணிக்கூடு இல்லை, பேசத் தெரியாது, எழுதத் தெரியாது.ஆனால் சரியான நேரத்துக்கு அந்தக் காகம் எப்படி வந்து போகிறது. ருத்ரன் வியந்தான்.தனது





நண்பனான காகத்தைப் போல, தானும் சரியான நேரத்துக்குப் பாடசாலைக்குச் செல்வது, அனைத்து வேலைகளையும் சரியான நேரத்தில் தொடங்குவது என முடிவு எடுத்துக் கொண்டான்.சரியான நேரத்துக்குப் பாடசாலைக்கு வந்து அனைத்தையும் முறையாகச் செய்யும் ருத்ரனை அனைவரும் பாராட்டினார்கள். நேரத்தை தவறவிடுவது, வாழ்க்கையை தொலைத்து விடுவதற்குச் சமம். காலம் கண் போன்றது. கடமை பொன் போன்றது என்பது பழமொழி. அதற்கேற்ப நாம் காலத்தின் அருமையை உணர்ந்து செய்யும் வேலையை சிறப்பாகவும், விரைவாகவும், சரியான நேரத்திலும் செய்ய வேண்டும்.

தொடரும்..

## 06.2017 24 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1314 - ஸ்கொட்லாந்துப் படைகள் இரண்டாம் எட்வேர்ட் தலைமையிலான இங்கிலாந்துப் படையினரைத் தோற்கடித்தனர். ஸ்கொட் லாந்து தனது விடுதலையை மீண்டும் பெற்றது.
- 1340 - நூற்றாண்டுகள் போர்: மூன்றாம் எட்வேர்ட் தலைமையின் கீழ் இங்கிலாந்து கடற் படையினர் பிரெஞ்சுக் படைகளை முற்றாகத் தோற்கடித்தனர்.
- 1509 - எட்டாம் ஹென்றி இங்கிலாந்தின் மன்ன னாக முடி சூடினான்.
- 1571 - மணிலா நகரம் அமைக்கப்பட்டது.
- 1597 - டச்சு கிழக்கிந்தியக் கம்பனியின் முதலாவது தொகுதியினர் ஜாவாவின் பாண்டாம் நகரை அடைந்தனர்.
- 1662 - மக்காவு நாட்டைக் கைப்பற்றும் முயற்சியில் டச்சு நாட்டவர் தோல்வி கண்டனர்.
- 1664 - நியூ ஜேர்சியில் குடியேற்றம் ஆரம்பமானது.
- 1849 - அமெரிக்கப் பெண்மணியான எலிசபெத் பிளாக்வெல் என்பவரே அமெரிக்காவில் முதன் முதலாக மருத்துவப் பட்டம் பெற்ற பெண்மணியாவார். அவர் இப்பட்டத்தினை 1849 ஆம் ஆண்டு பெற்றுக்கொண்டார்.
- 1860 - புளோரன்ஸ் நைட்டிங்கேலின் எண் ணக்கருக்களுக்கமைய முதலாவது தாதிகள் பயிற்சி நிலையம் இங்கிலாந்தில் அமைக் கப்பட்டது.
- 1894 - பிரெஞ்சு அரசுத் தலைவர் மரீ பிரான்சுவா சாடி கார்னோ படுகொலை செய்யப்பட்டார்.
- 1938 - 450 மெட்ரிக் தொன் எடையுள்ள விண்கல் பென்சில்வேனியாவின் சிக்கோராவில் வீழ்ந்தது.
- 1940 - பிரான்சும் இத்தாலியும் அமைதி ஒப்பந் தத்தை ஏற்படுத்தின.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: நாசி ஜேர் மனியரை வெற்றி கொண்ட சோவியத் படைகளின் வெற்றி அணிவகுப்பு மொஸ் கோவில் இடம்பெற்றது.
- 1956 - சே குவேரா, ஃபிடல் காஸ்ட்ரோ உட்பட 26 பேர் கைது செய்யப்பட்டனர்.
- 1963 - சான்சிபாருக்கு உள்ளக சுயாட்சி வழங் கப்பட்டது.
- 1975 - அமெரிக்க விமானம் நியூயோர்க்கில் வீழ்ந்ததில் 113 பேர் கொல்லப்பட்டனர்.
- 1981 - 17 ஆண்டுகளாக உலகின் மிக நீளமான தொங்கு பாலமாக இருந்த ஹம்பர் பாலம் இங்கிலாந்தில் அமைக்கப்பட்டது.
- 1983 - அமெரிக்காவின் முதலாவது விண்வெளி வீராங்கனை சாலி ரைட் தனது முதலாவது பயணத்தை முடித்துக் கொண்டு பூமி திரும்பினார்.
- 1997 - ஈழப்போர்: பன்றிகெய்தகுளம், பனிக் கநீராவிப் பகுதியில் ஜெயசிக்குறு படை யெடுப்பின்போது இடம்பெற்ற தாக்குதலில் 200 இராணுவத்தினரும் 90 விடுதலைப் புலிகளும் கொல்லப்பட்டனர்.
- 2002 - தான்சானியாவில் இடம்பெற்ற பெரும் புகையிரத விபத்தில் 281 பேர் கொல் லப்பட்டனர்.
- 2004 - நியூயோர்க்கில் மரண தண்டனை சட்டபூர்வமற்றதாக்கப்பட்டது.
- 2007 - கராச்சியில் இடம்பெற்ற மழை மற்றும் சூறாவளியில் 200க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர்.

பிறப்புகள்

- 1883 - விக்டர் ஹெஸ், நோபல் பரிசு பெற்றவர். (இ. 1964)
- 1907 - கா. அப்பாத்துரை, தமிழறிஞர் (இ. 1989)
- 1915 - ஃபிரெட் ஹாயில், அண்டவெளி உயிர் மூலவிகளை ஆராய்ந்த வானியல் அறி வியலாளர். (இ. 2001)
- 1921 - கண்ணதாசன், தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியர், கவிஞர் (இ. 1981)
- 1928 - எம். எஸ். விஸ்வநாதன், தென்னிந்திய இசையமைப்பாளர்
- 1938 - நீல. பத்மநாபன், எழுத்தாளர்

இறப்புகள்

- 1908 - குரோவர் கிளீவ்லாண்ட், ஐக்கிய அமெரிக்காவின் குடியரசுத் தலைவர் (பி. 1837)
- 2006 - சிட்டி பெ. கோ. சுந்தரராஜன், மணிக்கொடி எழுத்தாளர், திரைப்பட விமர்சகர் (பி. 1910)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் | சுன்னாகம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 80 | 60 | 120 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 80 | 100 | 120 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 250 | 300 | 300 | 300 | 300 | 250 |
| தக்காளி | 140 | 110 | 140 | 160 | 140 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 60 | 80 | 80 | 60 | 80 |
| கோவா | 120 | 100 | 160 | 160 | 120 | 200 |
| கரட் | 200 | 250 | 240 | 300 | 300 | 300 |
| பூசணி | 100 | 80 | 80 | 100 | 80 | 100 |
| புடோல் | 60 | 40 | 60 | 80 | 120 | 80 |
| வாழைக்காய் | 80 | 40 | 80 | 80 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 270 | 300 | 320 | 300 | 250 | 240 |
| பெரிய வெங்காயம் | 90 | 90 | 100 | 120 | 100 | 120 |
| பாகற்காய் | 150 | 100 | 120 | 160 | 120 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 80 | 160 | 100 | 70 |
| கருணைக் கிழங்கு | 100 | 50 | - | 160 | 120 | 100 |
| பயற்றங்காய் | 100 | 60 | 80 | 120 | 100 | 80 |
| லீக்ஸ் | 100 | 80 | 120 | 120 | 120 | 100 |
| பீற்றூட் | 80 | 80 | 100 | 120 | 140 | 90 |
| கறிமிளகாய் | 200 | 150 | 240 | 300 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 200 | 200 | 260 | 280 |
| போஞ்சி | 200 | 150 | 180 | 200 | 160 | 180 |
| கத்தரிதம்புள்ள | 120 | 70 | 100 | 120 | 100 | 100 |
| கீரை - 1பிடி | 50 | 20 | 30 | 30 | 20 | 30 |
| தேசிக்காய் | 100 | 80 | 80 | 120 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 60 | 40-60 | 70 | 70 |
| இராசவள்ளி | 250 | 200 | - | 300 | 200 | 300 |
| வெங்காயப்பூ | 300 | 200 | 240 | 200 | 200 | 240 |
| முள்ளங்கி | 80 | 50 | 80 | 120 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 30 | 10 | 40 | 40 | 25 | 30 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 | 20 | 10 |
| ஈரப்பலா | 80 | - | - | 100 | 100 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் நன்மை செய்யாவிட்டாலும் பரவாயில்லை. தீமை செய்வதை நிறுத்துங்கள்.

– டால்ஸ்டாய்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# முன்னாள் போராளிகளை வாழவே விடமாட்டீர்களா?

பொறுப்புடன் நடக்க வேண்டிய தமிழ் அரசியல் வாதிகள் சிலர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஆற்றுகின்ற உரைகளைக் கேட்கும் போதெல்லாம் ஏன்தான் இப்படி என்று எண்ணத் தோன்றும்.

அந்தளவுக்கு ஒரு சில தமிழ் அரசியல்வாதிகள் நிலைமையைப் புரிந்து கொள்ளாமல் தங்களை ஒரு நிலையாளர்கள் போல காட்டிக் கொள்ள முனைகின்றனர்.

நம் நாட்டைப் பொறுத்தவரை விடுதலைப் போராட்டம் சரி, இன யுத்தம் சரி, அனைத்தும் பேரினவாதத்தின் கொடுமையின் விளைவுகளாகும்.

தமிழினத்தை நசுக்க வேண்டும் என்ற ஒரே சிந்தனையில் பேரினவாத ஆட்சியாளர்கள் காலத்துக்கு காலம் அமுலாக்கிய அரசியலமைப்புகளும் திட்டமிடல்களும் சிறுபான்மைத் தமிழினத்தை மிக மோசமாகப் பாதித்தது.

தவிர, காலத்துக்குக் காலம் தமிழின அழிப்புகளும் சர்வ சாதாரணமாக நடந்தேறின. தமிழினத்தை அழிக்கும் நோக்குடன் இனக் கலவரங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

இந்நிலையிலேயே ஆயுதப் போராட்டம் என்ற சிந்தனை முகிழ்ந்தது.

ஆயுதப் போராட்ட சிந்தனைகூட தமிழனத் தலைவர்களின் அகிம்சைப் போராட்டங்கள் நசுக்கப்பட்ட நிலையில்; தமிழ் அரசியல் தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் ஆயுதப் போராட்டம் ஒன்றுதான் தமிழ் மக்களுக்கு விடுதலையைத் தரும் என தமிழ் தலைவர்கள் மேடையேறி உசுப்பேத்திய நிலையில் ஏற்பட்டதுதான்.

இலங்கை ஆட்சியாளர்களுடன் சேர்ந்து வாழ்வது முடியாத காரியம் என்ற கட்டத்தில் ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் ஒன்றுக்கு மேற்பட்டவை தமிழர் தாயகத்தில் தோற்றமுற்றன.

அவற்றின் பாதை பல வழிப்பட்டு ஈற்றில் தமிழீழ விடுதலைப் புலிகள் மண் மீட்புப் போரை முன்னெடுக்கும் விடுதலைப் போராட்ட அமைப்பாக நின்று நிலைத்தது.

ஒருபுறம் இன யுத்தம் நடந்து கொண்டிருக்க, மறுபுறத்தில் சமாதான பேச்சுவார்த்தைகளும் முன்னெடுக்கப்பட்டன.

ஆனால் தீர்வை எட்டுவதற்கு எவரும் உடன்பட்டிலர். ஈற்றில் உலக நாடுகளின் உதவியோடு வன்னிப் பெருநிலப்பரப்பில் மிகக் கொடும் போர் நடந்தது. இதில் விடுதலைப் புலிகள் அமைப்பு இல்லாமல் போயிற்று.

தமிழ் மக்களைக் காப்பாற்ற வேண்டிய அரசு பல்லாயிரக்கணக்கில் மக்களைக் கொன்று அழித்தது.

புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரனை பாலகன் என்றும் பாராமல் சுட்டுக் கொன்றது. சரணடைந்த புலிப் போராளிகள் எங்கே? என்பது இன்றுவரை தெரியவில்லை.

நிலைமை இதுவாக இருக்கையில் படையினரால் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பற்றி விசாரிப்பதென்றால் புலிகளால் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பிலும் விசாரணை வேண்டும் என்று நம் அரசியல்வாதிகள் பாராளுமன்றத்தில் பேசுகின்றனர் எனில், அதன் பொருள் புரியவில்லை.

போரில் அழிக்கப்பட்ட ஓர் அமைப்புத் தொடர்பில் விசாரணை நடத்துவது எங்ஙனம் சாத்தியமாகும்?

அதேநேரம் சட்டப்படி காப்பாற்ற வேண்டிய படையினரிடம், ஒப்படைக்கப்பட்டவர்கள், சரணடைந்தவர்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதே பொருத்துடையதும் நியாயமானதுமாகும்.

# ஞானசாரருடன் தனக்கு தொடர்பில்லை என்று சம்பிக்க கூறுவது வெளிப்படையான பொய்

## கம்மன்பில தெரிவிப்பு

(கொழும்பு)

அமைச்சர் பாட்டளி சம்பிக்க ரணவக்க நீண்ட காலமாக தனக்கு பொதுபல சேனாவன் கலகொட அத்தே ஞானசார தேரருடன் தொடர்பு இலலையென கூறுவது வெளிப் படையான பொய்யாகும் என தூய ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அரசியல் தர்மத்தை பேணும் வகையில் ஜாதிக ஹெல உறுமயவின் உள்வீட்டு இரகசியங்கள் எதனையும் வெளிப்படுத்துவதில்லையெனவும் மூன்றாம் தரப்பும் அறிந்துள்ள தகவல்களை மாத்திரம் தான் வெளியிடுவதாகவும் அக்கட்சியிலிருந்து பிரிந்து சென்ற உதய கம்மன்பில தெரிவித்தார்.

என்னுடைய சட்டத்தரணி மனோஹர சில்வா தான ஞானசார தேரருடைய சட்டத்தரணி என அமைச்சர் பாட்டளி சம்பிக்க ரணவக்க கடந்த 19 ஆம் திகதி நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கூறியிருந்தார். இருப்பினும், இதே சட்டத்தரணிதான் தன்னுடைய சட்டத்தரணி என்பதை அமைச்சர் சம்பிக்க மறந்துவிட்டார். தனக்காக செயற்பட்ட சட்டத்தரணிக்கு கைமாறாக அமைச்சர் சம்பிக்க இவ்வாறு காட்டிக் கொடுத்துள்ளார்.

அமைச்சர் சம்பிக்க சொன்ன முதலாவது பொய் தான், எனது சட்டத்தரணி தான் கோத்தபாய ராஜபக்ஷவுடைய சட்டத்தரணியும் எனது. எனக்காகவும் கோத்தபாயவுக்காகவும் இரு சட்டத்தரணிகள் குழுக்கள் செயற்பட்டன.

அமைச்சர் சம்பிக்கவின் இரண்டாவது பொய், மகிந்த ராஜபக்ஷவுக்காகவும் ஞானசார தேரரின் சட்டத் தரணி தான் ஆஜராகியதாக. உண்மை என்ன வென்றால், இந்தச் சட்டத்தரணி மகிந்த ராஜபக்ஷவுக்காக ஆஜராகவேயில்லை.

அமைச்சர்சம்பிக்க சொன்ன மூன்றாவது பொய், சமசமாஜ கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண, ஞானசார தேரருடன் ஒரே மேடையில் இருந்தார் என்பது. உண்மை என்ன வென்றால், அவருடன் ஒரு தடவையாவது திஸ்ஸ விதாரண மேடை ஏறவில்லை என்பதாகும்.

2004 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தனக்கும் ஞானசார தேரருக்கும் இடையில் எந்தவித தொடர்பும் இல்லையென அமைச்சர் சம்பிக்க தெரிவித்துள்ளார். இது பொய். 2013 ஆம் ஆண்டு மஹரகம நகரில் ஜாதிக ஹெல உறுமயவும் பொதுபல சேனாவும் இணைந்து மாகாண சபை வேண்டாம் எனும் கருப்பொருளில் மாநாட்டை நடத்தியது.

அத்துடன், சம்பிக்க ரணவக்க மகிந்த அரசில் இருந்து விலகி இரண்டு நாட்களின் பின்னர் பொதுபல சேனாவின் தலைமையகத்துக்குச் சென்று ஜனாதிபதி பொது அபேட்சகர் தொடர்பில் கலந்துரையாடலை நடத்தியுள்ளார் எனவும் உதய கம்மனபில மேலும்தெரிவித்தார் (இ-7)

# யாழ்ப்பாணம்-பொன்னாலை-பருத்தித்துறை AB-21 வீதி அகலிப்புக்கு காணி சுவீகரிப்பு

(யாழ்ப்பாணம்)

பெருநகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் கீழ் உலக வங்கி கடன் நிதி உதவியுடனானமூலஉபாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வீதி அபிவிருத்திஅதிகாரசபைக்குரிய யாழ். வைத்தியசாலை தொடக்கம் பொன்னாலை வரையான (யாழ்ப்பாணம்–பொன்னாலை– பருத்தித்துறை) AB–21 வீதியானது அகலிப்பு நடவடிக்கைக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

வீதி அகலிப்புநடவடிக்கையின் போது இவ்வீதியின் வீதியின் இரு மருங்கிலும் உள்ள காணி கள் சுவீகரிப்பு நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டு கட்டடங்கள், மதில்கள் அகற்றப்பட்டே இத் திட்டத்தினை முன்னெடுக்கவுள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு வலிகாமம் மேற்கு, சங்கானை பிரதேச செயலர் பிரிவினுள் உள்ளடங்கும் அராலி பாலத்திலிருந்து பொன்னாலை சந்தி வரையுள்ள (யாழ்ப்பாணம்-பொன்னாலை–பருத்தித்துறை AB–21) வீதியின் இரு மருங்கிலும் உள்ள காணி உரிமையாளர்கள் தங்கள் காணிகளுக்குரிய ஆவணங்களின் பிரதிகளை சங்கானை பிரதேச செயலகத்தில் சமர்ப்பித்து காணி சுவீகரிப்புநடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் அதனூடாக தங்களது இழப்பீடுகளுக்கான நட்ட ஈடுகளைப் பெற்றுக்கொள்வதற்கும் ஒத் துழைப்புக்களை வழங்கி உதவுமாறு சங்கானை பிரதேச செயலர் செல்வி ச.பிரேமினி கோரியுள்ளார். (இ–9)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக ஞாயிற்றுக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணி வரை யாழ்.பிரதேசத்திலை கொடிகாமம் கச்சாய் வீதி, வலந்தலை சந்தி, சிவகாமி அம்மன் கோவிலடி, மருதபுரம், வியாவில், கருங்காலி, காரைநகர் சிவன் கோவிலடி, பொன்னாலை கிருஸ்ணன் கோவிலடி, பொன்னாலை வீட்டுத் திட்டம் ஆகிய பிரதேசங்களிலும் மின்தடைப்படும். (இ-9)

# ஆணையாளர் விசேட அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

1952 ஆம் ஆண்டு 6 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (நியமத் துணை விதிகள்)

சட்டம் வடக்கு மாகாண சபையினால் 2017.02.21 ஆம் திகதி அங்கீகரிக்கப் பட்டு 2017.03.24 ஆம் திகதிய 2011/25 இலக்க இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதி விசேட வர்த்தமானியின் IV(அ) பகுதியில் பிரசுரிக்கப்பட்ட அத்தியாயம் 1.6 வரையான வடக்கு மாகாண மாநகர சபைகளுக்கான நியமத்துணை விதிகள் ஏற்றுக் கொள்வது என்றும் மாநகரசபை பிரதேசத்தில் நடைமுறைப்படுத்துவது என்றும் யாழ்.மாநகர சபையால் 2024 ஆம் இலக்கம் 2017.06.16 ஆம் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி பத்திரிகையின் IV (ஆ) பகுதியில் வெளியிடப்பட்டதற்கு அமைவாக யாழ்ப்பாணம் மாநகரசபை பொது மக்கள் சேவையினை வழங்கும் என்பதை அறியத் தரு கின்றேன்.

அத்துடன் குறித்த நியமத்துணை விதிகளில் உள்ளடக்கப்படாத விடயங்கள் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் 1989.01.20 ஆம் திகதிய 541/17ம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் ( நியமத்துணை விதிகள் ) சட்டம் தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என்பதையும் அறியத்தருகின்றேன் என ஆணையாளர் அறிவித்துள்ளார். (இ

# நிதி சேகரிக்கச் சென்ற பெண் நாய்க்கடிக்கு இலக்கானார்

(கரணவாய்)

சமுர்த்தி குழுவிலுள்ள பயனாளி ஒருவர் உணடியல் நிதி சேகரிப்புக்காக சென்ற சமயம் நாய்க்கடிக்கு இலக்கானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரணவாய் பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர் சமுர்த்திக் குழுவில் உள்ளார். அவர் அப்பகுதியில் உண்டியல் நிதி சேகரிக்கச் சென்ற போது வீடு ஒன்றில் நின்ற நாய் கடித்துக் குதறியுள்ளது.

படுகாயமடைந்த பெண் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார். இச் சம்பவம் சில தினங்களிற்கு முன்னர் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-60)

# ‘குந்தி சேத்திரத்தின் குரல்’ கவிதை நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

“குந்தி சேத்திரத்தின் குரல்” கவிதை நூல் வெளியீடு நாளை மறுதினம் 26ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3.45 மணியளவில் நல்லூர் சங்கிலியன் தோப்பு யூரோவில் கேட்போர் கூடத்தில் கலாநிதி எஸ்.வி.காசிநாதன் தலைமையில் இடம்பெறும்.(இ–7)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ இன்றியமையாதது துறவே. துறவின்றி யாரும் தனது அன்பு முழுதையும் பிறருக்காக உழைக்கும் முயற்சியில் பாய்ச்சிவிட முடியாது. துறவி அனைவரையும் சமமாகப் பார்க்கிறான். மனைவியும் மக்களும் உனக்குரியவர்கள் என்னும் கருத்தை நீ ஏன் வளர்க்கின்றாய்? உனது வாசற்படியில் பரம்பொருளாகிய நாராயணனே ஓர் ஏழை உருவத்தில் பட்டினியால் இறக்கின்றான். அவனுக்கு ஏதாவது அளிப்பதற்குப் பதிலாக உனது மனைவி மக்களின் பசியைத் தீர்க்க இன்சுவையுணவுகளை அளித்தால் அது மிருகத்தனமே.

❖ சுயநலம் கொண்டதே தீய ஒழுக்கம்; சுயநலம் அற்றதே நல்லொழுக்கம்.

❖ நாம் அனைவரும் உலகத்திற்குக் கடன்பட்டவர்களே என்பதையும் உலகம் நமக்கு எள்ளளவும் கடன்பட்டதல்ல என்பதையும் நாம் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். உலகத்திற்கு ஏதாவது செய்ய இடம்பெறுதலே நம் அனைவருக்கும் வாய்த்த பெரும் பேறாகும். உலகிற்கு உதவி புரிவதால் நமக்கு நாமே உதவி புரிந்தவர்கள் ஆகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III கே.சி.சி.சி. 3 ஆவது வெற்றி



சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III தொடரின் 39 ஆவது போட்டியில் கே.சி.சி.சி.அணி, ஹாட்லியைற்ஸ் அணியை 5 இலக்குகளால் வெற்றி பெற்று தனது 3ஆவது வெற்றியை பதிவு செய்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஹாட்லியைற்ஸ் அணி 28.3 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 130 ஓட்டங்களை பெற்றது.

சாகித்தியன் - 54, பிரதீப் - 24 ஓட்டங்களைப் பெற்றனர். சாம்பவன் - 2, பிரதீஸ் - 3, உமாகாந் - 4 இலக்குளை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கே.சி.சி.சி. அணி 18.2 ஓவர்களில் 5 இலக்குகளை இழந்து 133 ஓட்டங்களைப் பெற்றது. ஜெயரூபன் - 10, ஜனுதாஸ் - 37, சுபானன் - 42 ஓட்டங்களை பெற்றனர்.

பிரதீப் - 2, பிரசாந், அஜந்தன் தலா ஒரு இலக்கினையும் கைப்பற்றினர். இப் போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் 2010ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 7 வருடங்களாக நடத்தும் யாழ். நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்விற்கு (RATING) கே.சி.சி.சி. அணி 7.83 புள்ளிகளையும், ஹாட்லியைற்ஸ் அணி 1.80 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டது. (க)



மாகாண மட்ட கரம் சுற்றுப்போட்டிக்கு முதல் தடவையாக வலிகாம வலயத்தில் இருந்து தெரிவான மூளாய் சைவப் பிரகாச வித்தியாலயத்துக்கு உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத்தலைவர் ப.தர்மகுமாரன், அதிபர் திருமதி.சிவமலரிடம் கரம்போட்டினை வழங்கினார். (க)

# காட்டாவில் வென்றது தங்கம் இறம்பைக்குளம் மகளிர் ம.வி

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 16 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான தனிக் காட்டாவில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தை பிரதிநிதித்துவம் செய்த எல்.டெய்சி யூலியட் எமில்டா தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

நெல்லியடி மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் அண்மையில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தை பிரதிநிதித்துவம் செய்த எல்.டெய்சி யூலியட் எமில்டா தங்கப் பதக்கத்தையும் கைதடி நவீல்ட் பாடசாலையைப் பிரதி நிதித்துவம் செய்த எஸ்.லக்சனா வெள்ளிப் பதக்கத்தையும் சுண்டிக் குளிமகளிர் கல்லூரியைப் பிரதி நிதித்துவம் செய்த எஸ்.அபிரா வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (க)

# சென்.சேவியர், கருணாகரன் அடுத்த சுற்றுக்கு முன்னேற்றம்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் அமரர் கந்தசாமி ஆறுமுகம் அவர்களின் ஞாபகார்த்த மாக நடைபெறும் உதைப்பந்தாட்ட போட்டியில், 22.06.2017 அன்று நடை பெற்ற முதலாவது போட்டியில் சென் சேவியர் விளையாட்டுக் கழகம் 2:0 என்ற கோல் கணக்கில் மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக்கழகத்தை தோற்கடித்து அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது. இப் போட்டியின் ஆட்டநாயகனாக றொசான் தெரிவானார். தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது போட்டியில் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக்கழகமும் வல்வை கருணாகரன் விளையாட்டுக்கழகமும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்று ஆட்டநேர முடிவில் இரு அணிகளும் தலா மூன்று கோல்களை போட்டிருந்த நிலையில் ஆட்டமானது சமனிலையில் முடிவுற்றது. தொடர்ந்து சமனிலை தண்ட உதை மூலம் வல்வை கருணாகரன் விளையாட்டுக் கழகம் 4.2 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது. இப் போட்டியின் ஆட்டநாயகனாக வசீகரன் தெரிவானார். (க-19)

# இன்றைய போட்டிகள்

வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்தும் மாவட்ட ரீதியிலான உதைபந்தாட்ட சுப்பர் 8 போட்டிகள் வரிசையில் இன்று சனிக்கிழமை இரவு 7.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகமும் இரவு 8.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது. (க)

* * * * * * *

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் அமரர் கந்தசாமி ஆறுமுகம் ஞாபகார்த்தமாக நடைபெறும்.

வடமராட்சி கழகங்களுக்கிடையிலான அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் பொலிகை பாரதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஸ்ரீ அம்பாள் (A) விளையாட்டுக்கழகமும் மாலை 4.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் கரணவாய் மத்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஸ்ரீ அம்பாள் (B) விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (க)

* * * * * * *

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 98 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அமரர்களான சுப்பிரமணியம் கௌசிகன், சுப்பிரமணியம் இதயராஜ் ஞாபகார்த்தமாக நடைபெறும் உள்ளூர், வடமாகாண ரீதியாக நடைபெறும் கிரிக்கெட் அரையிறுதி மற்றும் இறுதிப்போட்டி இன்று நடைபெறவுள்ளது.

உள்ளூர் ரீதியான இறுதிப் போட்டியில் அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தை எதிர்த்து அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் மோதவுள்ளது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் வைர விழாவை முன்னிட்டு நடைபெறும் கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பம் கோரப் பட்டுள்ளது.

அணிக்கு 6 பேர் 5 ஓவர்கள் கொண்ட போட்டி இன்று சனி மற்றும் நாளை ஞாயிறு தினங்களில் மின்னொளியில் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

முதலாவது இடத்தைபெறும் அணிக்கு வெற்றிக் கிண்ணமும் 30 ஆயிரம் ரூபாய் பணப் பரிசும் இரண்டாம் இடத்தை பெறும் அணிக்கு 15 ஆயிரம் ரூபாய் பணப் பரிசும் மூன்றாம் இடத்தை பெறும் அணிக்கு 10 ஆயிரம் ரூபாய் பணப் பரிசும் நான்காம் இடத்தைப் பெறும் அணிக்கு 5 ஆயிரம் ரூபாய் பணப்பரிசும் வழங்கப்படும்.

பங்குபற்ற விரும்பும் கழகங்கள் உடனடியாக தொடர்பினை ஏற்படுத்துமாறு போட்டி ஏற்பாட்டுக்குழுவினர் கேட்டுக் கொண்டுள்ளனர். தொடர்புகளுக்கு: 077 838 8834, 021 312 7533, 077 632 9783. (க)

# சரஸ்வதியின் ஆண்டு நிறைவு விழா இல்லங்களுக்கிடையிலான கரம் விஸ்வநாதன் முதலிடம்



சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 98ஆவது ஆண்டுநிறைவு விழாவை முன்னிட்டு 21.06.2017 அன்று நடைபெற்ற இல்லங்களுக்கு இடையிலான கரம்போட்டியில் விஸ்வநாதன் இல்லம் 20 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தையும் தம்பாபிள்ளை இல்லம் 13 புள்ளிகளைப் பெற்று இரண்டாவது இடத்தையும் பெற்றது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு-கிழக்கு...

யுத்தத்திற்கு பின்னர் தமிழ் மக்களின் நிலை பலவீனமாக இருக்கின்றது. எனவே இருப்பதனை வாங்கிக் கொண்டு ஜனநாயக ரீதியில் அடுத்த கட்டத்திற்குச் செல்ல வேண்டும் என அவர் மேலும் தெரிவிக்கையில்,

முழுப் பாராளுமன்றமுமே இப்போது அரசியல் நிர்ணய சபையாக மாற்றப்பட்டிருக்கிறது. 21 பேர் கொண்ட வழிகாட்டல் குழுவை அமைத்திருக்கிறோம். அதன் தலைவர், பிரதமர் அவர்கள நானும் அதில் அங்கத்தவராக இருக்கிறேன். எல்லாக் கட்சித் தலைவர்களும் இருக்கிறார்கள்.

இன்னும் இரண்டு வாரத்தில் தொகுப்பை நாங்கள் பாராளுமன்றத்திற்கு கொடுக்க வேண்டும். வடக்கு கிழக்கு இணைப்பதற்கான சாத்தியமில்லை. அதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

எனது நிலைப்பாடு என்னவென்றால் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் இணைக்கப் படவேண்டும்.

அதில் ஒன்று இலங்கை அரசியல் அமைப்பு சமஷ்ரி அமைப்பாக வரவேண்டும்.

இரண்டு, மூன்றாவது இலங்கை அரசியல் அமைப்பிலே மதம் சம்பந்தமான சரத்து மாற்றப்பட்டு மத சார்பற்ற நாடாக இந்தியாவைப்போல இலங்கையை அறிவிக்க வேண்டும் என்பது எனது நிலைப்பாடாக இருக்கிறது.

சமஷ்டி, மதசார்பின்மை வட-கிழக்கு இணைப்பு என்ற மூன்றும் அங்கு இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். அது எனது கொள்கை. ஆனால் நடைமுறை அப்படி அல்ல. அந்த மூன்று நடப்பதற்கான சாத்தியமில்லை. அந்த யதார்த்தத்தின் ஒரு பங்காளியாகத்தான் கூட்டமைப்பினர் இருக்கின்றனர். அதற்காக கூட்டமைப்பினரையோ சம்பந்தனையோ குறை சொல்ல வில்லை.

இந்த விடயம் தொடர்பில் சம்பந்தனும் முழு முயற்சியுடனேயே செயற்பட்டு கொண்டிருக்கின்றார்.

யுத்தத்திற்கு பின்னர் தமிழ் மக்களின் நிலை பலவீனமாக இருக்கின்றது. எனவே, இருப்பதை வாங்கிக்கொண்டு ஜனநாயக ரீதியில் அடுத்த கட்டத்திற்கு செல்ல வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சுழிபுரம் பகுதியில்...

வராவார்.

சடலமானது பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணையை வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (30)

## பொலிஸ் பேச்சாளராக...

பிரியந்த ஜயக்கொடி தனது உடல் நிலை காரணமாகவே தான் விலகுவதாக தனது முகநூலில் பதிவு செய்துள்ளார்.

## வைத்திய அதிகாரி...

மேற்படி சைட்டம் தனியார் வைத்திய கல்லூரிக்கு எதிரான போராட்டத்தை கையில் எடுப்பார்கள் எனவும் மேற்படி சங்கம் எச்சரித்துள்ளது.

## இனமோதல்களு...

தலைமையில் கண்டியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மகா சம்மேளனத்தின்போது, பொது பல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரினால் முன்வைக்கப்பட்டுவரும் கருத்துக்களுக்கு ஆதரவு வெளியிடப்பட்டது.

அத்தோடு, பௌத்த மதம் பெரும் ஆபத்தை எதிர்கொண்டு வருவதாகவும், பௌத்த பிக்குகள் மீது அரசாங்கம் அடக்குமுறையை கையாள்வதற்கு சூழ்ச்சி செய்து வருகிறதா என்ற சந்தேகமும் இந்த மாநாட்டின்போது வெளியிடப்பட்டது.

இந்த நிலையில் நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ நேற்றைய தினம் கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு விஜயம் செய்து மத வழிபாடுகளில் ஈடுபட்டார்.

மேலும் அஸ்கிரிய பீடம் தலைமையில் நடத்தப்பட்ட மகாநாட்டில் வெளியிடப்பட்ட அறிக்கை தொடர்பாக மிக நீண்டநேரம் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பை அடுத்து நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டார்.

## தொழில்நுட்ப...

இலங்கை ரெலிகொம் நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் இந்தப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டுள்ளதாக கடந்த 20ஆம் திகதி நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர் ஹரீன் பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.

இந்தப் பல்கலைக்கழகத்தில், பட்டங்களை வழங்குவதற்கு உயர்கல்வி அமைச்சு அங்கீகாரம் அளித்துள்ளது, இதையடுத்து, 2017 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரத் தேர்வில் சித்தியடைந்து, இந்தப் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கான பட்டக் கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்படும்.

பிரித்தானியாவின் லன்காஸ்டர் பல்கலைக்கழகம், அவுஸ்ரேலியாவின் டீக்கின் பல்கலைக்கழகம், ஆகியவற்றுடன் மாணவர்களை பரிமாறிக் கொள்ளும் உடன்பாட்டிலும், இந்த புதிய பல்கலைக்கழகம் கையெழுத்திட்டுள்ளது.

அமெரிக்காவின் ஜோர்ஜியா தொழில்நுட்ப பல்கலைக்கழகம், மற்றும் டெக்சாஸ் தொழில்நுட்ப பல்கலைக்கழகம், நியூசிலாந்தின் லிங்கன் பல்கலைக்கழகம் ஆகியவற்றுடனும், இதேபோன்ற உடன்பாடுகளில் கையெழுத்திடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## அஸ்கிரிய பீடத்தின்...

அஸ்கிரிய பீடத்தின் இந்த அறிவிப்புக்கு பல தரப்பிலும் எதிர்ப்புக்கள் வெளியிட்டு வரும் நிலையில் இந்த அறிவிப்புக்குப் பின்னால் அரசியல் சக்தியொன்று செயற்படுவதாக நவ சமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

ஞானசார தேரரின் கொள்கைக்கு தாங் கள் இசைந்து போவதாக அஸ்கிரிய பீடத்தின் மாநாட்டின்போது விடுவிக்கப்பட்ட அறிவிப்பு பெரும் சர்ச்சையைத் தோற்றுவித்திருக்கிறது.

இந்த நிலையில் நம சமசமாஜக் கட்சியின் கொழும்பிலுள்ள தலைமையகத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதுகுறித்து கருத்து வெளியிடப்பட்டது.

பௌத்த மதத்தை காப்பாற்றுவது குறித்து பேசுகின்றனர். பௌத்த மதம் இந்த நாட்டில் பெரும பான்மையான மதம். அதற்கு எந்த பாதிப்பையும், நெருக்குதலையும் ஏற்படுத்த எவராலும் முடியாது. பௌத்த மதத்தை காப்பாற்றுவதற்கோ பாதுகாப்பதற்கோ வரலாற்றில் எவரும் போர் செய்யவும் இல்லை. இது யுத்தத்தினால் முன்னேறிய மதமும் இல்லை. அரச அதிகாரத்தை பயன்படுத்தி பௌத்த மதத்தை காப்பாற்றுமாறு புத்த பெருமான் ஒரு போதும் கூறியதில்லை. பௌத்த மதத்தை காப்பாற்றுவதற்காக வீதியிலிறங்கி போராட்டம் செய்து கலகம் செய்ய வேண்டும் என்ற சங்கைக்குரிய வர்கள் எடுத்துள்ள தீர்மானத்திற்கு நாங்கள் இணங்கமுடியாது. அப்படியொரு நடவடிக்கையும் அவசியமில்லை. அஸ்கிரிய பீட மாநாட்டில் எடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட தீர்மானம் வெறும் அரசியல் மயப்படுத்தப்பட்டது என்றே நான் நினைக்கின்றேன். புதிய அரசியலமைப்பு உருவாக்கப் பணிகள் ஒவ்வொரு அடியாக வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ஜே.வி.பி உட்பட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும்கூட இதற்கு முழுமையான ஆதரவை நல்கிவரும் நிலையில் பாசிசவாதக் குழுக்களுக்கு இதனை பொறுத்துக்கொள்ள முடியவில்லை. எனவே இதனைத் தடுப்பதற்காக பல்வேறு தடைகள் இடப்படுகின்றன என்று கூறினார்.

## புதிய யாப்பு...

பேச்சாளரும், அமைச்சருமான டிலான் பெரேரா அனைத்து கட்சிகளுமே இந்த தாமதத்திற்கு காரணமெனக் சுட்டிக்காட்டியுள்ளார்.

சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பங்கேற்று கருத்து வெளியிட்ட அவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட எந்தவொரு கட்சியும் யாப்பு திருத்தம் தொடர்பிலான தமது இறுதி கொள்கை விளக்கத்தை இதுவரை சமர்ப்பிக்கவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

யாப்பு திருத்தம் தொடர்பில் பேசுகையில்,

எனினும் இது தொடர்பில் கட்சி மட்டத்திலும், இரண்டு பிரதான கட்சிகளும் கடந்த வாரம் சந்தித்து கலந்துரையாடியிருந்தன.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றிக்கொள்ளக் கூடிய திருத்தங்கள். அதேபோல் மக்கள் வாக்கெடுப்பிற்கு விட்டு நிறைவேற்றிக்கொள்ளக்கூடிய திருத்தங்கள் எவை. அதேபோல் தேர்தல் காலங்களில் கட்சிகள் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் தொடர்பில் கலந்துரையாடி அரசியல் யாப்பு திருத்த குழுவில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சிகளினதும் இணக்கப்பாட்டுடன் அதனை செயற்படுத்த எதிர்பார்க்கின்றோம்.

யாப்பு தொடர்பிலான இறுதி வரைபு நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னதாக, இறுதி வரைபினை உருவாக்குவதற்கான பின்னணி தொடர்பிலான வரைவு ஒன்றினை சகல கட்சிகளினதும் ஒத்துழைப்புடன் நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். ஆகவே அனைத்து கட்சிகளினதும் தாமதம் காரணமாகவே யாப்பு உருவாக்கப் பணிகள் தாமதமடைகின்றன என்றார் டிலான் பெரேரா. (11)

## முதலமைச்சருக்கு...

எமது மக்கள் புரிந்து கொள்வார்கள்.

எமது கட்சியினுடைய கட்டுப்பாடுகளையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவ வழிகாட்டலையும் ஏற்று வழிநடந்து வருகின்ற என் மீதும் எங்களது கட்சியின் கௌரவ உறுப்பினர்களுக்குள்ளும் முரண்பாடுகளை ஏற்படுத்த முனைந்த இக்கடிதம் தொடர்பிலும் பாராளுமன்றக் கடிதத் தலைப்பை மற்றும் எனது பதவி இலட்சினையை நவீன தொழிநுட்ப முறையில் மோசடியாகப் பயன்படுத்திய சட்டக் குற்றம் தொடர்பில் சபாநாயகர் கருஜெயசூர்யவுக்கு எனது முறைப்பாட்டினைச் செய்திருப்பதுடன் பாராளுமன்றத்திலிருந்து நான் கிளிநொச்சிக்குத் திரும்பியவுடன் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாட்டைச் செய்யவுள்ளேன்.

இது தொடர்பில், விடயத்தின் மூலத் தன்மை கண்டறியப்பட்டு தகுந்த சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நான் தயாராகியுள்ளேன் என்பதனை எனது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய எமது மக்களுக்கு நான் வினயமாக அறியத்தருகின்றேன்.

என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்கள் தெரிவித்துள்ளதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்டக் காரியாலயமான "அறிவகம்" வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-4)


## கேள்வி கோருதல்
## மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்

1. தலைவர், மாவட்ட செயலக பெறுகைக் குழு சார்பில் மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம், கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளிற்கான, தற்போது தகுதி உடையவர்களிடம் இருந்தும் தகைமை பெற்றவர்களிடமிருந்தும் குறியீடு செய்யப்பட்ட கேள்விகளை கோருகின்றனர்.

2. கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.

3. ஒப்பந்தமானது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA), கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழ்க்குறிப்பிடும் தரத்தினை கொண்டிருப்பதோடு, பொதுநிதி சுற்றறிக்கை, இல. 04/2016(i) ற்கு அமைவாக இவ்விலை மனுக்கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வடமாகாணத்திற்குள் கொண்டுள்ளதும் கறுப்புப் பட்டியலில் பெயர் இடப்படாததுமான கேள்வியாளருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

4. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் மேலதிக தகவல்களை மாவட்ட செயலகத்தில் (தொலைபேசி இல. 021 222 2233, 021 222 2234 நீடிப்பு 122, 111) பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் மாவட்டத் திட்டமிடல் செயலகம், மாவட்டச் செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் மு.ப.8.30 முதல் பி.ப.3.00 மணிவரை அலுவலக நாட்களில் கேள்வி ஆவணங்களைப் பரிசோதிக்கலாம்

5. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரண தொகுதி ஒன்றினை மாவட்டத் திட்டமிடல் செயலகம், மாவட்டச் செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றினைச் சமர்ப்பித்து 24.06.2017 முதல் 14.07.2017 வரை அலுவலக நாட்களில் 09.00 மணியில் இருந்து 15:00 மணிவரையிலான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத கீழ் குறிப்பிடப்படும் தொகையினை பணமாக செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.

6. கேள்விகள் 17.07.2017 ஆம் திகதியன்று காலை 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், மாவட்ட பெறுகைக்குழு, மாவட்ட செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கப்பட வேண்டும். காலம் தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் வருகை தந்த கேள்விதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் மேற்படி முகவரியில் கேள்விகோரல் முடிவுற்ற உடனேயே திறக்கப்படும்.

7. கேள்வி தொடர்பான முன்கேள்விச் சபைக் கூட்டம் மாவட்ட செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் 07.07.2017 அன்று காலை 10:30 மணிக்கு நடைபெறும்.

8. கேள்விகளை ஏற்றுக் கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைக்குழுவின் இறுதித்தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

| இல | கேள்வி அடையாள இல | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | மீளளிக்கப்படாத வைப்பு (ரூபா) | தேவையான தரம் (CIDA) | கேள்விப் பிணை விபரம். பிணைத் தொகை | கேள்விப் பிணை விபரம். செல்லுபடியாகும் காலம் | ஒப்பந்த காலம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | JF/DPS/IND/ Tour.Mavid./IX/10/ 2017 | மாவிட்டபுரம் யாத்திரிகர் ஓய்வு மண்டபம் அமைத்தல் | 4.250 | 1,500.00 | C6, C7 & C8 | 42,500.00 | 13.11.2017 | 90 நாட்கள் |
| 02 | JF/ADM/CON.WORK /KARAVEDDY- 1/11/02/2017 | கரவெட்டி பிரதேச செயலக மேலதிக நிர்வாகக் கட்டட நிர்மாணம் கட்டம் - 1 | 11.600 | 4,000.00 | C6 & C5 | 200,000.00 | 13.11.2017 | 120 நாட்கள் |
| 03 | JF/DPS/ONUR/EEP/ IV/23/2017 | பொலிகண்டி கிராமிய சுகாதார நிலையம் அமைத்தல் - பருத்தித்துறை | 4.207 | 1,500.00 | C6, C7 & C8 | 42,500.00 | 13.11.2017 | 90 நாட்கள் |

நா. வேதநாயகன்,
அரச அதிபர் / மாவட்டச் செயலாளர்,
யாழ் மாவட்டம்.

(சி-8868)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13 ஆவது சட்டத்தில் இருந்து...

கொண்டு உரையாற்றியபோது அவர் இவ்வாறு கூறினார்.

இல்லாததைப் பற்றி பேசுவதை விட இருக்கின்ற விடயம் ஒன்றில் ஆரம்பித்து முன்நோக்கிச் செல்ல வேண்டும். சிலர் இல்லாததைப் பேசுகின்றனர். ஆகவே இருக்கின்ற 13 ஆவது திருத்தச்சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தீர்வுக்கான வழியை தேட முடியுமென்று ஆயர் சுட்டிக்காட்டினார்.

1991ஆம் ஆண்டு யுத்தம் கடுமையாக இடம்பெற்றுக்கொண்டிருந்த காலத்தில் யாழ் மாவட்டம் கிளிநொச்சியுடன் துண்டிக்கப்பட்டிருந்தது.

முன்னாள் ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகையின்பொன் வெள்ளி, பவழ விழாவில் கலந்துகொள்வதற்காக சேறும் சகதியும் நிறைந்த கொம்படிப் பாதை யால் பல சிரமங்கள் மத்தியில் யாழ்ப்பாணத்திற்கு வந்ததாகவும் ஆயர் ஞாபகமூட்டினார்.

1958 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட தனிச் சிங்கள சட்டம் இன்று பல பிரச்சினைகளுக்கு காரணமாக அமைந்து விட்டது.

தமிழர்கள் தங்களை இரண்டாம் தர பிரஜைகளாக கருதும் நிலையை தனிச் சிங்களச் சட்டமே ஏற்படுத்தியது. அதனால் தான் யுத்தம் ஆரம்பமாகியது என்று கூறிய ஆயர், ஒற்றுமையை கட்டியெழுப்பக் கூடிய தீர்வை நோக்கி ஒன்றாக பயணிப்போமென்று வலியுறுத்தினார். (11)

## வட மாகாண சபை...

நவ சமசமாஜக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ண தலைமையிலான நவ சமசமாஜக் கட்சியின் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பிலுள்ள கட்சித் தலைமையகத்தில் நேற்றைய தினம் நடைபெற்றது.

நவ சமசமாஜக் கட்சியின் தேசிய அமைப்பாளரான நாடாளுமன்ற உறுப்பினர் ஜயம்பதி விக்ரமரட்ணவும் இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்டார்.

சிவாஜிலிங்கம் போன்றோர் சில நேரம் தமிழ் மக்களின் சார்பில் கடும் பேச்சுக்களை வெளியிடுகின்றனர். சில நேரம் இனவாதத்தை தூண்டும் கடினமான பேச்சுக்களையும் கூறுகின்றனர். அதில் ஒன்றையும் நாங்கள் அனுமதிக்கமாட்டோம்.

இன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு மத்தியஸ்த தீர்மானத்திற்கு வந்திருக்கும் சந்தர்ப்பத்தில் அதனை தோற்கடிக்கும் நோக்கில் வடக்கில் சில இனவாதக் குழுக்கள் முயற்சித்து வருகின்றன. இது உண்மை.

இதற்கு நாங்கள் முழுமையாக எதிர்ப்பை வெளியிடுகின்றோம். யாழ்ப்பாணத்திற்குச் சென்றும் இதற்கு எதிராக நான் பேசியுள்ளேன். இன்று வடக்கு இனவாதிகள் தென்னிலங்கை இனவாதிகளை பலப்படுத்துகின்ற அதேவேளை, தெற்கு இனவாதிகள், வடக்கு இனவாதிகளை சக்திப்படுத்துகின்றனர்.

தென் மாகாண சபையிலும் தமக்கு உட்படாத சில பிரேரணைகளை நிறைவேற்றுகின்றது. வட மாகாண சபையிலும் இது இடம்பெறுகின்றது. வடமாகாணசபை குறித்து நாங்கள் கவலைப்படுகின்றோம் என்றார் ஜயம்பதி விக்கிரம ரட்ண. (11)

## டயானாவை நான்...

ஜோன் ஹோப்கின்ஸ் தெரிவித்துள்ளார். தன்னுடைய பணிக்காலத்தில் பத்திரிகையாளர்கள், அரசியல்வாதிகள், சமூக செயற்பாட்டாளர்கள் என 23 பேரை கொன்றுள்ளதாகவும் மரணப்படுக்கையில் இருக்கும் தான் உண்மைகளை சொல்லாத வரை தனது உயிர்பிரியாதெனவும்ஜோன் ஹோப்கின்ஸ் தெரிவித்துள்ளார்.

டயானா மிகவும் அழகான பெண் என்பதோடு, இளகிய மனம் படைத்தவர். ஆனால் அவர் இளவரசர் சார்லஸை விவாகரத்து செய்ய முடிவு செய்தது அரச குடும்பத்திற்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது எனவும் அத்துடன் டயானா அரச குடும்ப ரகசியங்கள் பலவற்றையும் தெரிந்து வைத்திருந்தார் என்வும் இதனால்அவரைக்கொல்ல வேண்டும் என பிரித்தானிய அரச குடும்பத்தில் இருந்து நேரடி உத்தரவு வந்தது என அவர் தெரிவித்துள்ளார். (11)


### கைதடி வீட்டுச் சங்கம் அங்கத்தவர்களுக்கு அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் தர்மகர்த்தா ஆகவோ சட்ட நிர்வாகியாகவோ நான் தற்போது செயலாற்றவில்லை என்பதை அறியத்தருகிறேன்.

இப்படிக்கு : ஜோய் மகிழ் மகாதேவன்
சட்டத்தரணி, திருநெல்வேலி.
(9550)

### ஆங்கிலப்பயிற்சிக்கு NO.1 பயிற்சி மையம்

IELTS Life Skills -A1, B1

திருமணம் செய்து நிரந்தர விசாவில் U.K செல்பவர்களுக்கானது

# UK இல் இருந்து கணினி மூலமான 40 மேற்பட்ட online listening மாதிரி பரீட்சைகள் DMI இல் மட்டுமே.
# அனுபவம் வாய்ந்த பரீட்சைக்கு மாணவர்களை தயார்ப்படுத்தும் ஆசிரியர் குழாம்.
# இதுவரை 2200 க்கும் மேற்பட்டோர் பயின்று UK சென்றுள்ளார்கள்.
# Visa நடைமுறைகள் தொடர்பான இலவச விளக்கங்கள்
# மாதாந்தம் 30 மேற்பட்ட மாணவர்களை பரீட்சைக்கு அனுப்பும் ஒரேஒரு நிறுவனம்.

Hotline 0777 17 35 17
Fee 9500/

இணைய முன் இணையத்தளத்தினை பார்வையிடவும் www.itdmi.com/ls அல்லது www.itdmi.com/lifeskill-english

Spoken English கற்கை வருகிக்கு இணைவோருக்கு IELTS Life Skills கற்கைநெறி முற்றிலும் இலவசம். நேரடியாக IELTS Life Skills கற்பவர்களுக்கு 9500/- மட்டுமே.
DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமாகும்.

IELTS
ACADEMIC MODULE , GENERAL MODULE

We offer:
A practice workbook
A 30 hour online IELTS preparation course
A reference library membership to access IELTS material
Access to the IELTS Top Tips seminar
#Latest course Material #unique Test Tips
#40 hrs with free 4 mock exams

DMI COMPUTER EDUCATION

SPOKEN ENGLISH
ஆங்கிலப்பேச்சுக்கு உத்தரவாதம்
www.itdmi.com/english

DMI COMPUTER EDUCATION

| | | | | |
|---|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் | M.M.V. வீதி, நெல்லியடி | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் சாவகச்சேரி | No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் சுன்னாகம் | A9 வீதி, ஆனந்தபுரம் கிளிநொச்சி |
| Tel.: 021-222 4403 | Tel.:021-226 2470 | Tel.:021-227 0775 | Tel.:021-224 1970 | Tel.:021-228 5655 |

(C-8869)

### முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சைக்கான கருத்தரங்கு

ஜூலை 22, 23 ஆம் திகதிகளில் பரீட்சை நடைபெறவுள்ளது.

ஞாயிறு (25/6), திங்கள் (26/6) காலை 10.00 – 3.30 மணிவரை கருத்தரங்கு நடைபெறும்.
தொடர்புகளுக்கு:
076 688 3394
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு.
(யாழ்.ஆஸ்பத்திரி கொமர்ஷல் வங்கி யருகில்) (C-8871)

### 9 ஆம் ஆண்டு நினைவு நாள்

அமரர் காசிநாதர் பிரசாத்



கனவிலும் நினைத்ததில்லை
கைநழுவிப் போவாயென
ஆண்டுகள் ஒன்பது
சென்றாலும்
நெஞ்சத்தின் நினைவுகள்
இன்றும் நிழலாடும்

மலர்வு : 24.11.1983
உதிர்வு : 24.06.2008

(C-8867)

கரணவாய் மத்தி,
கரவெட்டி.
- குடும்பத்தினர்

### புதிய கிளைகளுக்கான வேலைவாய்ப்பு

சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட எமது Teleseen நிறுவனமானது வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் புதிய கிளைகளை ஆரம்பிக்கவுள்ளது. அப் புதிய கிளைகளுக்கான அலுவலக ரீதியான வேலையாட்கள் தேவைப்படுகின்றனர். (9554)

தொடர்பு - இல.118, 4ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
T.P - 077 298 6763, 077 499 3943, 077 062 1631

### காணி விற்பனைக்கு

பளை நகரத்தில் ஏ9 வீதியில் எரிபொருள் நிலையம், சேவிஸ் ஸ்ரேசன் என்பனவற்றுக்கு அண்மையில் ஏ9 வீதிக்கு வடக்கு பக்கத்தில் காணி விற்பனைக்கு உண்டு. (9535)
தொடர்பு: 0777895661

### வீடு விற்பனைக்கு

பருத்தித்துறை பிரதான வீதியில், பிரதேசசபை அலுவலகத்திற்கும் இ.போ.ச. டிப்போவிற்கு எதிரில் 2 பரப்பில் சகல வசதிகளுடன் கூடிய மாடி வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு : 011 267 4599, 071 830 2697 (9556)

### வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

070 330 5500
அண்ணா அன் கோ
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் annalk.com
(C-8852)

லண்டனுக்கு (UK) 5kg க்கு மேல் மிகக் குறைந்த கட்டணம்

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.

யாழ்ப்பாணம் | நவாலி | சாவகச்சேரி | மீசாலை | மல்லாவி | முல்லைத்தீவு | கிளிநொச்சி | திருகோணமலை | வவுனியா

### விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு (C-8857)

UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS-0768226240
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

### With or Without O/L or A/L or Degree

மாதம் 25,000/-க்கு மேல் சம்பாதிக்கக்கூடிய
100 சதவீதம் உத்தரவாதமான க்கணக்கான வேலைவாய்ப்புக்கள்!



Receptionist – Telephone Operator – Cashier
Waiter – Storekeeper – Salesperson – Tour Guide
Room Boy – Supervisor – Marketing Officer
Assistant Manager – Manager

Dip. in Business / Tourism / Hotel Management
விரும்பிய துறையில் வேலைவாய்ப்பு பெறலாம்

FREE 3 மாத ஆங்கில கற்கைநெறி
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு
Student Visa – Work Visa – Skilled Migration to UK / Australia / New Zealand Canada & Malaysia

அனுமதிகளுக்கு www.sikaram.lk 077 3616 798 021 222 0011

SIKARAM ACADEMY
Business • Hospitality • English
SCHOOL of HOSPITALITY
(C-8865)
176, 1ஆம் குறுக்குத்தெரு (வேம்படி வீதி), யாழ்ப்பாணம்.

### யாழ் மதர் கெயார் Dental Unit

Reg.No.#PV85754
(C-8856)

நவீன உபகரணங்களின் உதவியுடன் விசேட வைத்திய நிபுணர்களினால்
கிளிப் (Clip) போடுதல், நிரந்தர பல்கட்டுதல்
உட்பட உயர்தர சேவைகள்

- பல் வெண்மையாக்கல்
- வேரடைப்பு
- மிதப்புப்பல் சீராக்கல்
- பல்,வாய் வைத்தியசேவை
- சிறுவர் பற் சிகிச்சை
- மற்றும் பல நவீன சேவைகள்



514/18, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக)
Tel : 021 492 7308
Mob : 077 375 4490, 077 220 2769


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.06.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.